# உதயன்

விலை ரூபா 15.00

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 31 வெள்ளிக்கிழமை (14.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 169


## பிரச்சினைகளின் அடிப்படைகளை ஆராய்ந்து

# தேசிய நல்லிணக்கம் காண

# 7பேர் கொண்ட ஆணைக்குழு

## ஜனாதிபதி விரைவில் நியமிப்பார் என அறிவிப்பு

கொழும்பு, மே 14

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 2002ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் திகதி தொடக்கம் 2009ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்துக் கண்டறிந்து -

அவற்றின் மூலம் படிக்கக்கூடிய பாடங்களை இனங்கண்டு -

அவை மீண்டும் இடம்பெறாமல் இருப்பதற்கான சிபார்சுகளை அரசாங்கத்துக்கு வழங்கும் பொருட்டு - தேசிய நல்லிணக்க ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது. உத்தேச ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி 7 பேரை நியமிப்பார். இது தொடர்பான ஜனாதிபதியின் சிபார்சுகளை அமைச்சரவை ஏற்றுக்கொண்டது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் மின்நிலையம்; அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, மே 14

யுத்த காலத்தில் முற்றாக அழிக்கப்பட்ட கிளிநொச்சி மின்நிலையத்தை மீள் நிர்மாணம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இத்திட்டத்தின் மூலம் 132 - 133 மெகா வோட்ஸ் மின்சாரத்தை தேசிய பாவனைக்காக விநியோகிக்க முடியும் என்றும், இத்திட்டத்தின் மூலம் வடக்கு, கிழக்கு மின்

(24 ஆம் பக்கம் பார்க்க)

### சாவகச்சேரியில் நேற்று 3 வயதுக் குழந்தையுடன்

## வானில் ஏற்றிச் செல்லப்பட்ட பெண் பரந்தனில் இருந்து தப்பி வந்தார்!

யாழ்ப்பாணம், மே 14

சாவகச்சேரியில் இருந்து 3 வயதுக் குழந்தையுடன் வான் ஒன்றில் ஏற்றிச்செல்லப்பட்ட பெண் சாதுரியமாகச் செயற்பட்டதால் பரந்தனில் இருந்து மீண்டு வந்துள்ளார்.

சாவகச்சேரி சிவன் கோயிலடியைச் சேர்ந்த

(24 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டின் சட்டம் - ஒழுங்கு நிலைமை; சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடல்

### யாழ். பிராந்திய தளபதி விளக்கம் அளிப்பார்

யாழ்ப்பாணம், மே 14

குடாநாட்டில் சட்டம் - ஒழுங்கு தொடர்பான தெளிவான விளக்கம் அளிப்பதற்கான சட்டத்தரணிகளுடனான கலந்துரையாடல் ஒன்று இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் நேற்று நடந்த 'கடத்தல்' நாடகம் !

யாழ்ப்பாணம், மே 14

யாழ். பிரதான வீதியில் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற 'கடத்தல்' நாடகத்தின் போது இளம்பெண் ஒன்றரை மணி நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டார்.

யாழ். பிரதான வீதியில், தண்ணீர்த் தாங்கிக்குச் சமீபமாக இளம்பெண் ஒருவர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார் எனக்கிடைத்த் தகவலை அடுத்து யாழ். நகரத் தளபதி மேஜர் நிசந்த தலைமையில்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற் போனோரின் உறவினர்கள் வவுனியாவில் 18ஆம் திகதி ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மே 14

யுத்த வெற்றியின் ஓராண்டு நிறைவை அரசு கொழும்பில் கொண்டாடும் தினத்தில் காணாமற் போனவர்கள் மற்றும் சிறைக் கைதிகள் தொடர்பாக அரசின் கவனத்தை ஈர்க்குமுகமாக 'காணாமற் போனோரைத் தேடியறியும் குழு' வவுனியா பஸ் நிலையம் முன்பாக மறியல் போராட்டம் ஒன்றை நடத்துகின்றது.

இது தொடர்பாக அந்தக் குழு வெளியிட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் காணாமற் போயுள்ள நிலையில் நாம் இதை அரசுக்கு எடுத்துக் காட்டியும் இதுவரை எமது அமைப்புக்கு எத்தகைய பதிலையும் அரசு வழங்கவில்லை. யுத்தத்தின் பாதிப்பால் மக்கள் எதிர்காலத்தில் நம்பிக்கையை இழந்த நிலையில் துன்பச் சுமையுடன் வாழ்ந்து வருகின்றார்கள். ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் சிறையில் எதுவித நீதி விசாரணையும் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இன்றும் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் முட்கம்பி வேலிகளுக்குள் முடக்கப்பட்டுள்ளனர். வெளியேறிய இரண்டு

(24 ஆம் பக்கம் பார்க்க)

### ஜூலைக்கு முன் ஐ.தே.க. மறு சீரமைப்பு

## தலைமைப் பதவியிலிருந்து ரணில் விலகினாலும் தகுதியான வேறு பலர் கட்சியில் உள்ளனராம்

கொழும்பு, மே 14

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் ஜூலை மாதத்துக்கு முன்னர் முழுமையாகச் சீரமைக்கப்பட்டுவிடும் என்று அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க விலகினாலும் அந்தப் பதவியை ஏற்றுக் கட்சியை முன் கொண்டு செல்லக்கூடிய பலர் கட்சியில் உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி. தயாசிறி ஜயசேகர இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அடுத்த ஆறு வருடங்களுக்குக் கட்சியைக் கட்டியெழுப்ப வேண்டிய நடவடிக்கை

(24 ஆம் பக்கம் பார்க்க)

## 'ஏசியன் ரிபியூன்' இணையத்தள ஆசிரியர் குற்றவாளி என்று சுவீடன் நீதிமன்றம் தீர்ப்பு

ஒஸ்லோ, மே 14

ஈழத் தமிழரும் நோர்வே வாசியும் சுயாதீன ஊடகவியலாளரும் நோர்வே நியூஸ் இணையத்தள பொறுப்பாசிரியருமான நடராஜா சேதுரூபனுக்கு (சேதுவுக்கு) தொடர்ந்து அவதூறை ஏற்படுத்தும் விதத்தில் அபாண்டமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி கட்டுரைகளை வெளியிட்டு வந்தார் எனத் தெரிவித்து தொடரப்பட்ட வழக்கில் 'ஏசியன் ரிபியூன்' ஆசிரியர் கே.ரி.இராஜசிங்கத்தை சுவீடன் மாவட்ட நீதிமன்றம் ஒன்று குற்றவாளியாகக் கண்டிருக்கின்றது.

இக்கட்டுரைகள் மற்றும் செய்திகளால் சேதுரூபனுக்கு ஏற்பட்ட இழப்பிற்காக உடனடியாக ஒரு இலட்சத்து 25 ஆயிரம் சுவீடன் நாட்டு குரோணர் பணத்தை வட்டியு

(24 ஆம் பக்கம் பார்க்க)


உங்களுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளதா உடன் விரையுங்கள்

மதிகலர்ஸ் பிறிண்டர்ஸ்

திருமண அழைப்பிதழ் காட்சியறை

Wedding Card Show Room

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 300க்கு மேற்பட்ட பல வர்ண புத்தம்புதிய டிசைன்களுடன் எமது காட்சியறையில் உங்களுக்காக ...

இணையத்தளம் : www.mathicolours.com

15/2B, முருகேசர் லேன், நல்லூர், (முத்திரைச்சந்தி) யாழ்ப்பாணம்

தொ.இல : 021 2229285, 0777 222524




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகளின் மேலும் 2 படகுகள் ஆஸ்திரேலியக் கடலில் சிக்கின!

கொழும்பு, மே 14

இலங்கையர்களும் இருக்கலாமெனக் கருதப்படும் மேலும் இரண்டு சட்ட விரோத அகதிப் படகுகள் ஆஸ்திரேலியக் கடலில் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் ஒரு படகு நேற்றுக் காலை கைப் பற்றப்பட்டுள்ளது. மற்றைய படகு.நேற்று முன்தினம் இரவு கைப்பற்றப் பட்டது.

கிறிஸ்மஸ் தீவுக்கருகில் நேற்றுக்காலை கைப்பற்றப்பட்ட படகில் 53 பேர் இருந்தனர். இவர்கள் உடனடியாக கிறிஸ்மஸ் தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நேற்று முன்தினம் இரவு கைப்பற்றப்பட்ட படகில் 21 பேர் பயணித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் குறித்த இரு படகுகளுடன் சேர்த்து இந்த வருடத்தில் மாத்திரம் 100 அகதிப் படகுகள் ஆஸ்திரேலியக் கடற்பகுதிக்குள்சட்டவிரோதமாக நுழைந்துள்ளன என ஆஸ்திரேலிய எதிர்க் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

இதில் கடந்த இரண்டு நாள்களுக்குள் மூன்று படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் படகுகளில் வந்த அகதிகளைத் தவிர இதுவரையிலும் கிறிஸ்மஸ் தீவில் மூவாயிரத்து 500 அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த வாரம் ஆஸ்திரேலியாவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த இலங்கை அகதிகளின் மற்றொரு படகில் சென்றவர்களில் இலங்கையர் ஐவர்கடலில்குதித்து உதவி தேட முயன்றபோது உயிரிழந்தனர் என்பது அறிந்ததே.

(ஒ-சி)


சிவமயம்





வட்டுக்கோட்டை தெற்கு – சங்கரத்தை

ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா தேவி

ஸ்ரீ கால பைரவர் தேவஸ்தான

அஷ்ட பந்த மகா கும்பாபிஷேகம்

நாள்: 16.05.2010 ஞாயிற்றுக்கிழமை நேரம்: காலை 6.30 முதல் 7.45 மணிவரை

மெய்யடியார்களே!

சிவபூமியின் சிரசாக மிளிரும் யாழ்ப்பாணத்தின் வட்டு. தெற்கு சங்கரத்தையில் (இலங்கையில் முதல் முதலாக) அமைந்துள்ள ஸ்ரீமஹா ப்ரத்யங்கிராதேவி ஸ்ரீ காலபைரவர் தேவஸ்தானத்தின் ம்ஹா கும்பாபிஷேகம் மேற்படி ஆலயத்தில் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளதால் அந்நாளில் நீங்களும் நடைபெறும் கிரியைகளில் பங்குகொண்டு ஸ்ரீமஹா ப்ரத்யங்கிரா தேவி சமேத காலபைரவர் அருளையும்-

சுவாமிகளின் வருகை: சென்னை சோழிங்க நல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிராதேவி ஆலயத்தின் ஸ்தாபகராகிய, தலைவரான சாக்த ஸ்ரீ ப்ரத்யங்கிரா ஸ்வாமிகளின் ஆசியை யும் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிராதேவியின் மகிமை -

ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிராதேவி சிவனுடைய நெற்றிக் கண்ணிலிருந்து ஆயிரம் சிங்க முகங்களோடும் இரண்டாயிரம் கைகளோடும், வெளிவந்தவள், இந்த அம்பாளை வணங்குபவர்களுக்கு பில்லி, சூனியம், களவு, திருட்டு, வறுமை, நோய்கள், ஆபத்துக்கள் இவற்றிலிருந்து நம்மைக் காப்பவள். ஆபத்து நமக்கு ஏற்படாது. திருமணம், குழந்தைச் செல்வம், குடும்பத்தில் அமைதியும் கிட்டும். கலியுகத் தில் தோன்றிய இத்தகைய தர்ம பத்தினியாகிய ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிராதேவியை வணங்கி நாமும் அருளைப் பெறுவோமாக. சாக்த ஸ்ரீ ப்ரத்தியங்கிரா சுவாமிகளின் வருகையால் நாம் ஆசி பெறுவதோடு சுவாமிகள் மேலும் பல கைங்கரியங்களையும் செய்ய தர்மபத்தினியை நாமும் வேண்டுவோம்.



ஜெய் ப்ரத்யங்கிரா

ஜெயஜெய ப்ரத்யங்கிரா

ஆலய நிர்வாகத்தினர்.



## மாபெரும் இலவச அறிவூட்டல் கருத்தரங்கு

**European College of Higher Studies**

Management, Law, Nursing, Q.S, Computer Studies, I.T போன்ற துறைகளில் G.C.E. O/L,A/L பட்டதாரிகள் என சகலரும் கல்வி பயின்று ஐரோப்பிய நாடுகளில், (U.K, Canada, Cyprus, Australia, Germany, France) பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில் கல்வி பயில அரியவாய்ப்பு... விரும்பிய மாணவர்கள் இலங்கையில் முதல்வருடப் படிப்பை முடித்துக்கொண்டு 2ஆம், 3ஆம் வருடங்களில் வெளிநாடு செல்லலாம்.

* 15.05.2010: 09 am -01pm (பருத்தித்துறை சிவன் கோயில் கல்யாண மண்டபம்)
* 15.05.2010: 02 pm -05pm (சாவகச்சேரி கலாசார மண்டபம்)
* 16.05.2010: 10 am -04pm (யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

தொடர்புகளுக்கு:

**European College of Higher Studies,**
**315, 1/2, Palaly Road,** (Paramaeswara Junction)
**Thirunelvely, Jaffna.**

VINSAN: 0789130859
PRASANH: 0772478303

Gaffoor: 0717065527
Office: 021 3734747


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் அம்பிகை முருகேசு

தோற்றம் 16.04.1916 — மறைவு 14.04.2010

கடந்த 14.04.2010 அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் அம்பிகை முருகேசு அவர்களின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலமாய் அனுதாபம் தெரிவித்தும், இறுதிச் சடங்கில் அஞ்சலி செலுத்தி ஒத்துழைத்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதோடு அன்னாரின் நினைவாக இன்று (14.05.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விதானை ஒழுங்கை,
இருபாலை.

(98197)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# 4 மாணவர்கள் உட்பட எண்மர் காயம்

கொழும்பு, மே 14

கண்டி, கட்டுகஸ்தோட்டையில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் பாடசாலை மாணவர்கள் நால்வர் உட்பட எட்டுப்பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

கட்டுகஸ்தோட்டை தொரகமுவ எனும் இடத்தில் கார் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதாலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தின் போது பஸ் தரிப்பிடத்தில் நின்றுகொண்டிருந்தவர்களே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் 4 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, மே 14

அவிசாவளையில் நேற்றுமுன்தினம் மாலை கைத்துப்பாக்கி வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ- 10)


**G.A.Q. - தமிழ்**

யாழ்/பேராதனை
ஆரம்பம் :- 15/05
Sat. 9 am.
V.K.நாதன் B.A. (Hons)
**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்.



**வீடு வாடகைக்கு தேவை**

சுன்னாகம், உடுவில், மருதனார்மடம், இணுவில், மானிப்பாய், உரும்பிராய் ஆகிய இடங்களில் மூன்று பேரடங்கிய குடும்பத்திற்கு வாடகை வீடொன்று தேவை.

தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி: 0775414087


# குடாநாட்டில் நேர காலம் ஏதுமின்றி திடீர் திடீரென மின்வெட்டு

## பொதுமக்கள் நாளாந்தம் பெரும் சிரமம்

முன்னறிவித்தல் ஏதுமின்றி திடீர், திடீரென மின்வெட்டு இடம்பெற்று வருவதால் குடாநாட்டு மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களாக யாழ். குடாநாட்டில் பரவலாக மின்வெட்டு நடந்துவருகிறது. நேரகாலமின்றி நடக்கும் மின்வெட்டால் மக்கள் திண்டாட வேண்டியுள்ளது.

கடந்த காலப்பகுதியில் மின்வெட்டு அமுலில் இருந்தவேளையில் மின்வெட்டு நடைபெறும் நாள்களும் நேரமும் மக்களுக்குத் தெரிந்திருந்தது, அதனால் மக்கள் தமது அன்றாட அலுவல்களை அதற்கேற்றவாறு ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தனர்.

எனவே மின்சார சபையினர் மின்வெட்டு அமுலாகும் நாள்களையும், நேரத்தையும் மக்களுக்கு முற்கூட்டியே அறிவிப்பதன் மூலம் அவர்களின் சிரமங்களைக் குறைக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஒ-6-86)

# மரண அறிவித்தல்கள்

## பாவிலுப்பிள்ளை இக்கினேசியல் கிறிஸ்ரி



மாதகலைப் பிறப்பிடமாகவும் சிலாவத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட பாவிலுப்பிள்ளை இக்னேசியல் கிறிஸ்ரி 11.05. 2010 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை பாவிலுப்பிள்ளை- அன்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான தொபியாஸ்-அந்தோனிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற லூயிஸ் பேடினன்ட் மற்றும் எட்வின் ஜேசிங்கம், அல்பிறேட், கென்றி துரைசிங்கம், டொலறோசா டல்சி யோசவ் ஆகியோரின் சகோதரரும் மேரி பிரான்சிஸ்காவின் அன்புக் கணவரும் பேபி, ராணி, அல்பிறட், கௌரி, அமலநாதன், ரஜனி ஆகியோரின் மைத்துனரும் டிக்சன் லெனற், இமாக்குளேற்றா, அருட்சகோதரர் பேடினன்ட் ஜெனெற் CR, வின்ஸ்ரன்வெனற் ஆகியோரின் அன்புத் தந்தையும் திவ்வியா, கலிஸ்ரஸ் குரூஸ் ஆகியோரின் மாமனாரும் ராஜினி, டண்சன், நிலானி, சுபோதினி, அன்ரனி, யோனார்ந்தான், கறல்ட், கென்றியற்றா, கறிஸ், கென்றீனா ஆகியோரின் பெரியதந்தையும் ஜெறோம், ஜெரியா, சிறோமி ஆகியோரின் பெரிய மாமாவும் டெறிஷா, றிபோன்ஷிக்கா, திரிஷாத், நிலோஷிக்கா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (15.05.2010) சனிக்கிழமை பி.ப.3 மணிக்கு புனித தோமையார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டுப் பின்னர் புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரதான வீதி,
மாதகல்.

(98255)

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே: 0233230383

## பரமசாமி பொன்னம்மா



சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் சரசாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பரமசாமி பொன்னம்மா நேற்று(13.05.2010) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி பேரம்பலம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மகளும் பரமசாமியின் துணைவியாரும் தயாபரன்(சுவிஸ்), தமயந்தி, தர்மசீலன் (சாரதி, உள்ளூராட்சித் திணைக்களம்), தயாளன் (லண்டன்), தயாறஞ்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் பத்மபூரணி (சுவிஸ்), சிறிசந்திரன் (தமயந்தி சில்க்), சுதர்சினி ஆகியோரின் அன்பு மாமியும் நவிதன், நிஷாந் (சுவிஸ்), அபிவர்ணா, மஞ்சுதன் (யா/ சாவகச்சேரி இந் துக் கல்லூரி மாணவர்கள்), திவ்வியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(14.05.2010) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தின் நடைபெற்று பிற்பகல் 4 மணியளவில் தகனக்கிரியைக்காக கொம்பிகுளம் இந்து மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

(98253)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி இலட்சுமிப்பிள்ளை சுப்பிரமணியம்

உடுத்துறையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமிப்பிள்ளை சுப்பிரமணியம் 11.05.2010 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் கிருஷ்ணசாமி, புத்திசிகாமணி, ஜெயந்திரன் காலஞ்சென்றவர்களான யோகரத்தினம், அன்னபூமணி ஆகியோரின் அன்புத் தாயும் பரமேஸ்வரி, ஜெயசோதி, வஜிகலா, சுவாமிநாதன், இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் யோகநாதன் (கண்ணன்), சுகந்தி, யசோதா, முருகதாஸ், சோபனா, ஷண்ஜீவ், அன்றூபிரவீன், கெனத் ஜெத்ரோ ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.05.2010) வியாழக்கிழமை இல.90, புனித சூசையப்பர் வீதி, வேப்பங்குளம், வவுனியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

33, அத்தியடி புதுவீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0776058174,
0212226068

தகவல்:
எஸ்.புத்திசிகாமணி
[செயலாளர், வலிகாமம் மேற்குப்பிரதேச சபை]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இப்படியும் ஒரு தந்திரமா?

கடந்த வருடம் இதே மாதத்தில் இலங்கை இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் வன்னியில் நடைபெற்ற போரின் இறுதிக் கட்டத்தின் போது, சரணடைந்தவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்ற குற்றச்சாட்டு உலகளாவிய ரீதியில் சர்ச்சைக்குரிய விவகாரமாகி விட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக்கூட்டத்தில் இந்த விவகாரம் விவாதத்துக்கு எடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை இலங்கை அரசாங்கம் தனது தந்திரோபாயத்தால் தடுத்துவிட்டது. ஆகப்பிந்தி, இந்த விவகாரம் குறித்து தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் பான்கீமூன் ஆலோசனைக் குழு ஒன்றை நியமிக்க எடுத்த முயற்சியும் தடங்கலுற்று நிற்கிறது. அதன் பின்னணியிலும் இலங்கை அரசாங்கமே தடுப்புப் போட்டுள்ளது என்பதும் மிகத் துலக்கமானதே.

சர்வதேச ரீதியிலான விசாரணை முயற்சிகளைத் தடுத்த இலங்கை அரசாங்கம், போர்க்குற்றங்களுக்கும் பொறுப்புக் கூறும் விவகாரத்தை வெவ்வேறு விதங்களில் எல்லாப் புள்ளிகளிலும் தடங்கல் செய்த அரசு - இவ்விவகாரம் குறித்து தான் சொந்த விசாரணைகளை நடத்தப்போவதாக பீற்றி வந்ததாயினும், அதனையும் மனச் சுத்தத்துடன் செய்வதாக இல்லை.,

போர்க்குற்றங்களுக்கும் பொறுப்புக் கூறுவதற்குத் தேவை உண்டா என்பதனை ஆராய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளதாக அரசுத் தரப்பு பிரமுகர்கள் அண்மைக் காலமாகக் கூறிவந்தனர். எனினும், அரசாங்கம் உத்தியோகபூர்வமாக உருப்படியாக எதனையும் செய்யவில்லை. அதுகுறித்து அறிவிக்கவும் இல்லை என்ற ஆதங்கமே பல தரப்புகளிலும் நிலவியது.

எப்படியோ, ஆணைக்குழு நிறுவப்பட்டவிட்டதாகவும், அது செயற்பட்டு வருவதாகவும் ஒரு தகவல் புதன்கிழமை திடீரென வெளிவந்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால், இலங்கை மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து - சர்வதேசச் சட்டங்கள் மீறப்பட்டுள்ளனவா - என்று ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக் குழு ஐந்து விடயங்களின் கீழ் வரும் 300 குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்கும் என்ற அறிவிப்பு வந்திருக்கிறது. ஆணைக் குழுவின் செயலாளர் சமரக்கோன் இந்தத் தகவலை வெளிப்படுத்தினார். பிரமாதம்! இப்போதாவது விசாரணைகள் குறித்த தகவலும் ஆணைக்குழு அங்கத்தவர்களின் விவரங்களும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. 6 பேர் கொண்ட பிரஸ்தாப ஆணைக் குழுவில் ஒவ்வொரு தமிழ், முஸ்லிம் பிரமுகர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

போரின்போது பொதுமக்கள் மற்றும் சிறார்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள், சரணடைந்தவர்கள் கொல்லப்பட்டமை, காணாமற்போனவர்கள், மனிதாபிமான தன்மைகள் குறித்து ஆணைக்குழு விசாரணை செய்யும், ஆராயும் என்று ஆணைக் குழுவின் செயலாளர் எஸ்.எம்.சமரக்கோன் பிரஸ்தாபித்துள்ளார். ஆனால், ஆணைக்குழு ஒன்றுக்கு அளிக்கப்படும் உரிய அதிகாரங்கள் இன்னும் வழங்கப்படாமையால் சரணடைந்தவர்கள் கொல்லப்பட்டமை மற்றும் காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு ஆணைக் குழு இன்னும் தீர்மானிக்கவில்லை என்று ஆணைக்குழுவின் செயலாளர் ஒரு போடு போட்டிருக்கிறார்!

இந்தத் தகவல் அதிர்ச்சி தருவதாக உள்ளது. உலகளாவியரீதியில் சர்ச்சையையும், கவனத்தையும் ஏன் ஆழ்ந்த கவலையையும் உண்டாக்கியுள்ள இரண்டு முக்கிய விடயங்களை விசாரிப்பதற்குத் தீர்மானம் எடுக்கவில்லை என்பது முழுப் பூசணிக்காயை சோற்றில் புதைப்பது போல் அல்லவா இருக்கிறது?

எப்படியோ, இலங்கை அரசு இந்த விவகாரத்தில் உள்நோக்கத்துடன் செயற்பட்டு எல்லோரையும் ஏமாற்றும் கெட்டித்தனத்தில் ஈடுபட்டுள்ளதா என்ற சந்தேகம் எவர் மனதிலும், சர்வதேசத்தில் எல்லாத் தரப்புகளிலும் எழும் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே....! கண் துடைப்புகள் காலத்தால் நீடிப்பதில்லை!!

### போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட

# பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களுக்கு ஆஸி. நிதி உதவி வழங்க வேண்டும்

## அந்நாட்டு பிரதமரிடம் தமிழ் கலாசாரக்கழகம் வேண்டுகோள்

மெல்போன், மே 14

போரினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட, பெற்றோரை இழந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதி உதவி வழங்க வேண்டும்.

அவுஸ்திரேலியப் பிரதமர் செவிட் நட்டிடம் மேற்கண்ட கோரிக்கையை தமிழ் கலாசாரக் கழகச் செயலாளரும், தொழில் கட்சியின் மெல்போன் தென் கிழக்குப் பிராந்தியப் பிரதிநிதியுமான நா.இ. விக்கிரமசிங்கம் விடுத்துள்ளார்.

இது தொடர்பாகத் தமிழ் கலாசாரக் கழகத்தின் சார்பில் விக்கிரமசிங்கம் பிரதமருக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

போரினால் பாதிக்கப்பட்டு வன்னிப் பிராந்திய இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் புனர்வாழ்வுக்காக அவுஸ்திரேலிய அரசு வழங்கிய நிவாரண நிதியுதவிகளுக்கு நன்றி தெரிவிக்கும் இவ்வேளையில் வடக்கு, கிழக்குப் பிராந்தியங்களைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்களின் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதுடன், மாணவர்கள் பலர் அங்கவீனர்களாக்கப்பட்டிருப்பதையும் ஆதாரங்களுடன் மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது.

போர்ச்சூழலினால் பாதிக்கப்பட்டும், எத்தனையோ இடர்களுக்கு மத்தியில் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையில் தேறி, பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியை மேற்கொள்ளும் வாய்ப்பைப் பெற்ற தமிழ் மாணவர்கள் நிதி உதவிகள் இன்றித் தவிக்கின்றார்கள். இவர்கள் தமது கல்வியைத் தொடர அவுஸ்திரேலிய அரசு மனிதாபிமான ரீதியில் நிதி வழங்கி உதவ வேண்டும். அத்துடன் திறமை அடிப்படையில் அவுஸ்திரேலியப் பல்கலைக் கழகங்களில் கற்பதற்குப் புலமைப் பரிசில்கள் வழங்க வேண்டும்.

வடக்கு, கிழக்குப் பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்கள் ஊடாக, அல்லது கொழும்பில் உள்ள அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் ஊடாக, நிதி உதவிகளை வழங்குவதற்கு வெளிவிவகார அமைச்சர் நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், போரினால் அங்கவீனர்கள் ஆக்கப்பட்டிருக்கும் மாணவர்களின் புனர்வாழ்வுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க முன்வரவேண்டும்.

சட்டவிரோதமாகப் படகுகள் மூலம் அவுஸ்திரேலியா வரும் தமிழ் அகதிகளை மட்டுப்படுத்த அவுஸ்திரேலிய அரசு விசேட விசாத் திட்டம் ஒன்றை அறி முகம் செய்வதுடன், 11 மாதங்களுக்கு மேல் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அகதிகளுக்குப் பாதுகாப்பு வதிவுரிமை வழங்கி, அவுஸ்திரேலியாவில் வாழ்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மகஜரில் வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ஒ-1)

# உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 1,188 வீடுகள்

யாழ்ப்பாணம்,மே 14

உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு வருட காலத்தில் ஆயிரத்து 188 வீடு கள் நிர்மாணிக்கப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு அவற்றின் கட்டட வேலைகள் இடம்பெற்று வருவதாகக் கோப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் இ.கிருஷ்ணராஜா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

கடந்த கால யுத்தத்தின்போது வீடுகளை இழந்தவர்களுக்க வழங்கப்படும் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் மூன்றாம் கட்டம்- முதல் பிரிவில் 530 வீடுகளை நிர்மாணிப்பதற்கு அனு மதி வழங்கப்பட்டது. அதில் 503 வீடுகளின் கட்டட நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன. 27 வீடுகளின் நிர்மாணப் பணிகள் தற்போது இடம் பெற்றுவருகின்றன.

மூன்றாம் கட்டம் - இரண்டாம் பிரிவில் 115 வீடுகள் நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இதில் 95 வீடுகளின் நிர்மாணப் பணிகள் நிறைவுபெற்றுள்ளன. 20 வீடுகளின் நிர்மாண வேலைகள் இடம் பெற்று வருகின்றன.

இந்த வருடம் நான்காம் கட்டமாக 543 வீடுகள் நிர்மாணிப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளது. இதில் 481 வீடுகளின் நிர்மாண வேலைகள் இடம் பெற்று வருகின்றன. இந்த வருடம் 4 ஆம் கட்டமாக 543 வீடுகள் நிர்மாணிப்தற்கு அனுமதி கிடைத்துள்ளது. இதில் 481 வீடுகளின் நிர்மாண வேலைகள் இடம்பெற்று வருகின்றன. 62 வீடுகளின் நிர்மாணப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

க்ட்டம் ஐந்திற்காக சேத விவர மதிப்பீட்டுப்படிவம் 2 ஆயிரம் பயனாளிகளுக்கு வழங்க்பட்டு அவை பூர்த்தி செய்யப்பட்டு யாழ்.செயலக வீட்டுத்திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி கிடைத்ததும் வீடுகள் நிர்மாணிக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளன என்றார்.

யாழ்.குடாநாட்டில் கட்டட நிர்மாணப் பணிகளுக்கு மணல் பெறுவதில் காணப்படும் சிரமங்கள் பொது மக்களின் அத்தியாவசிய தேவையான வீட்டுத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் பெரும் தடையாக இருப்பதாக வீட்டுத்திட்டப் பயனாளிகள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (50-14-86)

### எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை

# வற்றாப்பளை அம்மன் பொங்கல் உற்சவத்துக்குச் சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

## மாங்குளம், புளியங்குளம் ஊடாகவே பயணிக்கலாம்

முல்லைத்தீவு, மே 14

முள்ளியவளை, வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கலை இம்முறை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை பொங்கல் உற்சவம் நடைபெறும்.

பொங்கல் உற்சவத்துக்கு நாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் அடியார்கள் கலந்துகொள்ள வசதியாக அரச, தனியார் பஸ்களும் ஏனைய தனியாரின் வாகனங்களும் அனுமதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே முல்லைத்தீவு அரச அதிபர் பணிமனையிலும் ஆலயத்திலும் இடம்பெற்ற கலந்துரையாடல்களைத் தொடர்ந்து நேற்று முல்லைத்தீவு இராணுவத் தலைமையகத்தில் விசேட சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

இதுதொடர்பாக ஆலய பரிபாலன சபையினர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. உற்சவத்தில் விளக்கேற்றுவதற்கான கடல் தீர்த்தம் எதிர்வரும் திங்கட்கிழமை எடுக்கப்பட்டுக் கிரியைகள் ஆரம்பமாகும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் மக்கள் மாங்குளம் ஊடாகவே பயணிக்க வேண்டும். பரந்தன் புதுக்குடியிருப்பு ஊடான பாதை மக்கள் போக்குவரத்திற்கு விலக்கப்பட்டுள்ளது.

தென்பகுதியிலிருந்து ஆலயத்துக்கு வரும் வாகனங்கள் மாங்குளம் மற்றும் புளியங்குளம் வீதி ஊடாகவே பயணிக்க முடியும்.

ஆலய உற்சவத்தின்போது வியாபார நிலையங்களை அமைப்பதற்கான இடவசதிகள் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் செய்துகொடுக்கப்பட வுள்ளன.

பொங்கல் உற்சவ நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும் பதிவுசெய்து ஒலி, ஒளி பரப்பவுள்ளன.

மேலதிகமான விவரங்களுக்கு ஆலயத் தொலைபேசி இலக்கமான 0243243558 உடன் தொடர்புகொள்ள முடியும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-10)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 1 | 15.05.2010 |
| | சனிக்கிழமை |
| திதி | : துதியை |
| | பி.இ. 05.28 வரை |
| நட்சத்திரம் | : ரோகிணி |
| | பி.இ. 02.26 வரை |
| சுபநேரம் | : 02.53 - 04.23 |
| இராகுகாலம் | : 08.53 - 10.23 |

# வைத்தியசாலைப் பணியாளர் போன்று நடித்து நோயாளியிடம் நகைகளை அபகரித்த ஆசாமி!

யாழ்ப்பாணம்,மே 14

தன்னை வைத்தியசாலை ஊழியர் என அறிமுகம் செய்த நபர் ஒருவர், பெண் ஒருவரின் இரண்டுசோடி காப்பு மற்றும் ஒரு பவுண் தங்கச் சங்கிலியுடன் மாயமானார்!

இச்சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:-

நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுப் பரிசோதனை நிலையத்துக்குச் சிகிச்சைக்காகச் சென்ற பெண் ஒருவரிடம் தான் வைத்தியசாலைப் பணியாளர் என்று அறிமுகம் செய்த ஆண் ஒருவர், நீரிழிவுச் சிகிச்சை நிலையத்துக்கு செல்லும் நோயாளர்கள் நகைகள் அணியாமல் செல்ல வேண்டும் என அறிவுரை கூறியதுடன் குறித்த பெண் சிகிச்சை பெற்று வரும் வரை அவரிடமிருந்த நகைகளைத் தான் பாதுகாப்பாக வைத்திருப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

மேற்படி ஆசாமியின் கூற்றை நம்பிய அப்பாவிப் பெண் தனது நகைகளைக் கழற்றிக் கொடுத்துவிட்டுச் சென்றதாகவும், பின்னர் சிகிச்சை முடிந்துவந்தபோது குறித்த நபர் அப்பகுதியிலிருந்து மாயமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்திடம் முறையிடப்பட்டுள்ளதாக அந்தப் பெண் தெரிவித்தார். (50-16-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MEGA விலைக்கழிவு!!!

MW I
Intel 2.6 Ghz Duo Core
Intel Asrock G 31 Mortherboard
80 GB SATA Hard Disk
Kingston 1 GB 800 DDR II RAM
Samsung SATA DVD Writer
ATX Casing 500 W
Monitor 17" Flat
Keyboard
Optical Mouse
Multimedia Speaker
FREE Pen Drive, Head Phone, Card Reader, Dust Cover (4 Items)
34900/-

MW II
Intel 2.6 Ghz Duo Core
Intel Asrock G 31 Mortherboard
160 GB SATA Hard Disk
Kingston 1 GB 800 DDR II RAM
Samsung SATA DVD Writer
ATX Casing 500 W
Monitor 16" LCD
Keyboard
Optical Mouse
Multimedia Speaker
FREE Pen Drive, Head Phone, Card Reader, Dust Cover (4 Items)
39900/-

MW III
Intel 2.7 Ghz Duo Core
Intel Foxconn G 31 Mortherboard
250 GB SATA Hard Disk
Kingston 1 GB 800 DDR II RAM
Samsung SATA DVD Writer
ATX Casing 500 W
Monitor 16" LCD
Keyboard
Optical Mouse
Multimedia Speaker
FREE Computer Table, Pen Drive, Head Phone, Dust Cover (4 Items)
49900/-

MW IV
Intel 2.7 Ghz Duo Core
Intel Intel DG 31 PR Mortherboard
320 GB SATA Hard Disk
Kingston 1 GB 800 DDR II RAM
Sony SATA DVD Writer
ATX Casing 500 W
Monitor 19" LCD
Keyboard
Optical Mouse
Multimedia Speaker
FREE Computer Table, Computer Chair, Pen Drive, Head Phone, Dust Cover (5 Items)
52900/-

கணனிகளை கொள்வனவு செய்பவர்களுக்கு
அனைத்து வகையான UPS (650 W) 3800/-
3 வருடங்கள் வரையிலான உத்தரவாதம்
VISA கடன் அட்டைகள் ஏற்றுக் கொள்ளப்படும்
MUSIC WORLD & COMPUTERS
Email: musicworld@sltnet.lk
PRASHERA 0777 49 00 76

யாழ்-கொழும்பு பிரயாண சேவை



★ 29 இருக்கைகள் கொண்ட
A/C மினிபஸ் 1200/-



★ டொல்பின் வான்
யாழ்-கொழும்பு மட்டும் 1100/-
புறப்படும் நேரம்: 17.05.2010 திங்கள் இரவு 7 மணி.
வீடுகளுக்கு வந்து ஏற்றி இறக்கப்படும்.

முன்கூட்டிய ஆசனப் பதிவுகளுக்கு

★ ஞானம்ஸ் ரெக்ஸ்
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
0213008197, 0212225679.

★ சாருஜன்
கொமினிக்கேசன்
கொக்குவில் 0212226127

★ யோகாஸ் கொமினிக்கேசன்
வட்டுக்கோட்டை
0213215948

★ தேவி கொமினிக்கேசன்
கொழும்புத்துறை
021 2223318

## சைக்கிள் கையளிக்கும் நிகழ்வு நாளை

குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு சைக்கிள் கையளிக்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை மு.ப 10மணிக்கு பண்ணை சுகாதாரக் கிராமத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக எவ்.பி.ஏ.யின் இலங்கை வதி விடப்பிரதிநிதி லீனிகிறிஸ்ரியன்ஸ் அம்மையார் கலந்துகொள்வார்.

விசேட விருந்தினராக குடும்பத்திட்ட சங்கத் தலைவர் திருமதி பத்மா குமாரதுங்க, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் செயலாளர் ஆர்.இரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஒ-1)

**உடற்பயிற்சிப் போட்டி**

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலயமட்ட உடற்பயிற்சிப்போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இப் போட்டி ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

(1-190)

# மரண அறிவித்தல்

## சுப்பையா இரத்தினசபாபதி



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா இரத்தினசபாபதி 11.05.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - அபிராமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் யோகம்மாவின் (குஞ்சியம்மா) அன்புக் கணவரும் கணேசதாஸ், கணேஸ்வரி (லண்டன்), தபோதரன் (கனடா), இரத்தினேஸ்வரி (சுமதி - கனடா), செந்தூரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசுப்பிரமணியம் (லண்டன்), தயாளினி, தர்மலஷ்சுமி (சரளா - கனடா), ஸ்ரீகந்தவேள் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுசர்மன் (லண்டன்), விகர்னன் (மலேசியா), காலஞ்சென்ற துருபதன் மற்றும் டாக்டர் நங்ஹா (லண்டன்), திருமதி கஸ்தூரி காண்டீபன் (சட்டத்தரணி, லண்டன்), கௌதமி (லண்டன்), தாரணி (கனடா), துவாரகன் (கனடா), ஹரிகரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான, தெய்வானைப்பிள்ளை, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் திருமதி செல்வரத்தினம், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, செல்லத்துரை (சோதிடர்), இராசம்மா, செல்லம்மா, இராசலிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


'திருவேரகம்', இணுவில் மேற்கு,
இணுவில்.
தொ.பே. 021 320 7379

தகவல்:
**குடும்பத்தினர்.**

(98191)

# மரண அறிவித்தல்

## மருதலிங்கம் கணேசன்



வசாவிளானைப் பிறப்பிடமாகவும், நல்லூர் செல்லர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மருதலிங்கம் கணேசன் நேற்று (13.05.2010) வியாழக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மருதலிங்கம் தம்பதிகளின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற சுப்பன் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இரத்தினத்தின் அன்புக் கணவரும், இராமச்சந்திரன் (கோபு), இராஜேஸ்வரி (ஆசிரியை, யா/நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி), சரஸ்வதி (முன்னாள் உதவி ஆசிரியர் - உதயன், வீரகேசரி, தற்போது Wijeya News Papers Ltd.) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயந்தினி, செல்வதாஸ் (தொழில் நுட்ப உத்தியோகத்தர்), மதன்ராஜ் (இந்தியா), ஜனனி (இந்தியா), ராஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நாகநந்தினி, நாகதர்சினி ஆகியோரின் அன்புப் பெரியதந்தையும், பானுஜா, விதுஷிகன், கேஷிகன் ஆகியோரின் அன்புப் பேரனும், சின்னத்தம்பி (இந்தியா), குஞ்சுமணி, சின்னராசா (குழந்தை) ஆகியோரின் அருமை மைத்துனரும், நாகரெத்தினம், விஜயகுமாரி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2010) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

72/2, செல்லர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல் :
**குடும்பத்தினர்.**

(சி/567619)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சர்வதேச தாதியர் தினத்தை சிறப்பிக்கும் வகையிலான நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலை தாதிய பயிற்சிக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம் பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில், தாதிய பயிற்சிக் கல்லூரி அதிபர் என். வில்வநாதன், புளோறன்ஸ் நைற்றிங்கேலின் உருவச் சிலைக்கு தீபம் ஏற்றிக் கௌரவிப்பதையும், யாழ். தாதிய பயிற்சிக் கல்லூரி மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.முருகானந்தன் தலைமை உரை நிகழ்த்துவதையும், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா, தாதியப் பரிபாலகி திருமதி பி. கருணாகரன் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும், தாதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றி ஓய்வு பெறவுள்ள ஒருவர் தங்கப்பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்படுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: கரன்)

# பட்டினி விளிம்பில் தவிக்கிறார்கள் இராமாவில் நலன்புரி நிலைய மக்கள்

## இரண்டு வாரத்துக்கு மேல் உணவுப் பொருள் விநியோகம் இல்லை

யாழ்ப்பாணம்,மே 14

கொடிகாமம், இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள குடும்பங்கள் பட்டினியின் விளிம்பில் உள்ளனர். இவர்களுக்கு கடந்த முதலாம் திகதி தொடக்கம் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படாததால் உணவின்றித் தவிக்கின்றனர்.

கடந்த ஒரு வருடமாக இந்த நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் யாழ்.செயலகத்தினரால் வழங்கப்பட்டு வந்ததாகவும் கடந்த முதலாம் திகதி தொடக்கம் உணவுப் பொருள்கள் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட பின்னர் கடந்த இருவாரங்களாக உணவுப் பொருள்கள் கிடைக்காமையினால் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள 2 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட மக்கள் பட்டினியால் வாடுவதாக நலன்புரி நிலைய் மக்களால் தெரிவிக்கப்பட்டது.

உணவுப் பிரச்சினையால் மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதும் குறைந்துள்ளதாகவும் தெரிவித்த நலன்புரி நிலைய மக்கள் கடந்த இருவாரங்களாக குடிதண்ணீர் மற்றும் அடிப்படைத் தேவைகள் எதுவுமற்ற நிலையில் வசித்து வருவதாகவும் தெரிவித்தனர். (ப-207)

# ஈ.பி.டி.பி மீது சேறு பூசுவதற்கு சில தீய சக்திகள் முயற்சிக்கின்றன

## அமைச்சர் டக்ளஸ் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,மே 14

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் சில தீயசக்திகள் திட்டமிட்ட வகையில் தொலைபேசி ஊடாக பொதுமக்களிடம் கப்பம் கோரியும், பல்வேறு அச்சுறுத்தல்களை விடுத்தும் வருவதாகத் தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது மக்களுக்கான நேர்வழியைக் காட்டி எமது மக்களை கடந்த கால துன்ப, துயரங்களில் இருந்து மீட்டெடுக்கும் எமது கட்சியின் மக்கள் நலன் சார்ந்த பணிகளைப் பொறுத்துக் கொள்ளாத, எமது மக்களைத் தொடர்ந்தும் துன்ப, துயரங்களில் ஆழ்த்தி அதன் மூலம் தங்களது குறுகிய சுயலாப அரசியலை மேற்கொள்ள விரும்பும் சில தீய சக்திகள், குழப்பிய குட்டைக்குள் மீன் பிடிக்கும் நோக்கில் எமது கட்சியின் மீது பல்வேறு வழிகளிலும் சேறு பூசும் குறுகிய எண்ணத்துடனும், அதேநேரம் ஒரு கல்லில் இரு மாங்காய் என்ற ரீதியில் பணம் பறித்துக் கொள்ளும் நோக்கத்துடனும் திட்டமிட்டு செயற்பட்டு வருவதை இவ்வாறான செயற்பாடுகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் யாழ்.மாவட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளேன்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்த நிலையிலும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் எந்தவொரு நபரிடம் இருந்தும் எவ்வித நிதியும் அறவிடுவதில்லை என்பது எமது மக்கள் அறிந்த விடயமாகும்.

இந்த நிலையில் எமது கட்சியின் பெயரைப் பயன்படுத்தி இவ்வாறான சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள், வதந்திகளைப் பரப்புபவர்கள் தொடர்பில் எமது மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறும் போது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அல்லது 021 222 9824, 011 2503467, 0777781891 எனும் தொலைபேசி இலக்கங் களுடன் தொடர்பு கொண்டு உடனடியாக அறிவிக்கும் படியும் கோரியுள்ளார். (50-224)

# திருநாவுக்கரசு சுவாமிகள் ஆராதனை

யாழ்ப்பாணம், மே 14

வாகீசர் வார நிறைவுநாள் நிகழ்வும் திருநாவுக்கரசு சுவாமிகள் இசை ஆராதனை விழாவும் இன்று வெள்ளிக்கிழமை சுன்னாகம், பருத்திக்கலட்டி ஞானவைரவர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் இசைப் பேரரசு சங்கீத கலாநிதி முனைவர் நா.வி.மு. நவரத்தினம் குழுவினர் வழங்கும் திருநெறிய தெய்வீகத் திருமுறை இசை அரங்கு இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த இசையரங்கில் வயலின்- இசை ஞானதிலகம் உ.இராதாகிருஷ்ணன், மிருதங்கம்-லய ஞானவாரிதி என். மகேந்திரன், முகர்சிங் என்.விமல்சங்கர் ஆகியோர் வழங்குவர். (50-201)




# யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் மேலதிக பணிப்பாளராக சுந்தரலிங்கம்

யாழ்ப்பாணம்,மே 14



யாழ்.தொழில்நுட்ப கல்லூரிக்கு மேலதிக பணிப்பாளராக வெங்கையா சுந்தரலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். திருகோணமலை தொழில் நுட்பக் கல்லூரியில் கடந்த பத்து வருடகாலம் அதிபராகக் கடமையாற்றிய இவர் கடந்த பத்தாம் திகதி முதல் மேலதிக பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் அதிபராக கடமையாற்றிய கலாநிதி என்.யோகராஜன் கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளராகக் களமிறங்கியதைத் தொடர்ந்து தனது அதிபர் பதவியை இராஜினமா செய்தார்.

இதனையடுத்துத் தொழில் நுட்பக் கல்லூரியின் மேலதிக பணிப்பாளராக வெங்கையா சுந்தரலிங்கம் பதவியேற்றுள்ளார். (50-14-06)

# தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் சுயதொழில், தற்செயல் நிவாரணங்கள்

யாழ்ப்பாணம்,மே14

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த எட்டுப் பேருக்கு சுயதொழில் உதவிக் கொடுப்பனவின் இரண்டாம் கட்டமும், மூன்று பேருக்கு தற்செயல் நிவாரணக் கொடுப்பனவின் முதலாம் கட்டமும் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை வழங்கப்படவுள்ளன.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் இக் கொடுப்பனவுக்குரிய தொகை பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. சுயதொழில் உதவிக் கொடுப்பனவாக தலா 7 அயிரத்து 500 ரூபா வீதமும்தற்செயல் நிவாரணக் கொடுப்பனவாக தலா 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

பின்வருவோர் எதிர்வரும் 19 ஆம் திகதி தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் வருகை தரு மாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறி வித்துள்ளார்.

கொடுப்பனவு பெறவுள்ளோர் விவரம் வருமாறு:-

### சுயதொழில் உதவி

இ.தங்கராசா (மீசாலை கிழக்கு), அ.கஜீபன் (கைதடி தெற்கு), ந.கனகம்மா (வெள்ளாம்போக்கட்டி), ச.பத்மாதேவி (கல்வ யல்), ந.சறோஜாதேவி (தவகிகுளம், மிருசு வில்), சி.கவிதா (மட்டுவில் வடக்கு), வா.சிவ பாக்கியம் (கல்வயல்), ம.ஜெகதீஸ்வரி (பாலாவி வடக்கு).

### தற்செயல் நிவாரணம்

கி.நகுலேஸ்வரி (நாவற்குளி தெற்கு), உ.புஷ்பா (நாவற்குளி தெற்கு), வே.தங்கராசா (மட்டுவில் கிழக்கு). (ப-207)

# சூரியன் இந்தியாவுக்கு உச்சம் கொடுப்பதால் இலங்கையிலும் கடும் வெப்பமான காலநிலை

## வானிலை அவதான நிலையம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 14

இந்த மாதம் மூன்றாம் திகதி தொடக்கம் இருபத்தி எட்டாம் திகதி வரையும் சூரியன் இந்தியாவுக்கு மேல் உச்சம் கொடுக்கும் காலப்பகுதியாகும். அருகிலுள்ள இலங்கையிலும் அதன் தாக்கம் இருப்பதனாலேயே கடும் வெப்பக் காலநிலை தொடர்கிறது என வளிமண்டலவியல் திணைக்களத்தின் யாழ்.அலுவலகப் பொறுப்பதிகாரி வே.புஸ்பநாதன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:

இந்த மாதத்துக்கான சராசரி வெப்பநிலை 32 - 34 பாகை செல்ஷிஸுக்கு இடைப்பட்டதாக இருக்க வேண்டும். ஆனால் கடந்த 11ஆம், 12 ஆம் திகதிகளில் 35 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

இந்த மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் இந்த வெப்பக் காலநிலை தொடரும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் நான்காம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை இலங்கைக்கு நேரே சூரியன் உச்சம் கொடுத்தது - என்றார். (50-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் திருமுகம்

## தப்பிய மரங்களையாவது காப்பாற்ற வேண்டும்

கடந்த 09.05.2010ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் 'தண்ணீர் விட்டா வளர்த்தோம் கண்ணீர் விட்டு அழுவதற்கு' என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நா.சிவயோகன் கட்டுரை ஒன்றை வரைந்து இருந்தார். அவருடைய கருத்து நூற்றுக்கு நூறு வீதம் சரியானதே. மேலும் அவருடைய கருத்தை வலுப்படுத்தி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அரச அதிபரின் தார்மீக கடமையாகும். ஏனெனில் இன்று பருத்தித்துறை - யாழ்ப்பாண வீதியில் செல்லும்போது ஏதோ சவுதி - அரேபியா பாலைவனம் ஊடாக செல்வது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. அதாவது ஒதுங்குவதற்கு இருந்த பெரிய மரம் எல்லாம் வெட்டி வீழ்த்தப்படுகின்றன. விரிவுரையாளர் குறிப்பிட்ட கட்டுரையில் மூன்று மரங்களின் படங்களை போட்டிருந்தார். ஆனால் இக்கட்டுரை வெளிவரும் முன்பே புறாப்பொறுக்கி ஆலடி மரம் முற்றாக தறித்து வீழ்த்தப்பட்டு விட்டது. அத்தோடு கரணவாய் மூத்த விநாயகர் கோயிலடியில் உள்ள ஆலமரத்தில் ஒன்று 50% வெட்டி வீழ்த்தப்பட்ட நிலையில் உள்ளது. முன்பு கிளைமோர் பிரச்சினை காரணமாக இராணுவம் மரங்களை அல்ல மரக்கிளைகளை வெட்டியபோது அதனை பெரிதாக எடுத்துக் கொண்டவர்கள் கூட இன்று மரம் முற்றாக வீழ்த்தப்படுவதை தடுக்க முடியாது ஏதிலிகளாக உள்ளனர். அத்தோடு நாட்டை பாலைவனம் ஆக்கி அதனூடாக வீதி அபிவிருத்தி என்பது தேவைதானா என்ற கேள்வி எழுகின்றது அல்லது இதன் மூலம் சுளை சுளையாக இவர்களுக்கு அதிகளவில் பணம் அபிவிருத்தி மூலம் கிடைக்கிறதோ? வீதி அபிவிருத்தி ஒரு நாட்டிற்கு தேவைதான். ஆனால் அதற்காக இப்படி முழு மரங்களையும் அடியோடு சாய்ப்பது அதிகாரிகளின் முட்டாள்தனமான வேலையாகும்.

மேலும் குறிப்பிட்ட பத்தியில் விரிவுரையாளர் 'நெடுநாளாகப் பசியுடன் காத்திருந்தது போல் மரங்களை பாய்ந்து பாய்ந்து வெட்டுவதைப் பார்க்கும்போது சம்பந்தப்பட்டவர்களுக்கு அதன் மூலம் பெரும் இலாபம் கிடைக்கிறதோ' என்று விவரித்திருந்தார். இதிலும் ஓரளவு உண்மை இருக்கின்றது. இதனோடு சம்பந்தப்பட்ட இமையாணன், உடுப்பிட்டியைச் சேர்ந்த சிலர் பொலிஸாரின் கெடுபிடிக்கு மத்தியிலும் நெல்லியடி, உடுப்பிட்டி, கரணவாய், வதிரி, நவிண்டில், வல்வெட்டித்துறை, பொலிகண்டி போன்ற பகுதியில் உள்ள கொழுத்த வேம்பம்மரங்கள் மற்றும் பயன்தரு மரங்கள் எல்லாவற்றையும் மலிவு விலையில் வாங்கி அதைத் தறிந்து அதன் மூலம் கொள்ளை இலாபம் ஈட்டுகின்றனர். ஆனால் இதுவரை இவர்கள் மீது எந்த விதமான நடவடிக்கையும் பொலிசாரால் மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே சட்டவிரோதமாக மரம் தறிப்பதை நிறுத்துவதற்கு நீதிமன்றம் தான் இனிமேல் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்காக எங்காவது சட்டவிரோதமாக மரம் தறிக்கப்பட்டால் அது சம்பந்தமாக தகவல்களை பொலிஸாருக்கு அறிவிப்பதற்கு அதற்குரிய தொலைபேசி இலக்கங்களை பத்திரிகை வாயிலாக அறிவிப்பதற்கு நீதிமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும் போனவை போகட்டும். தப்பிப் பிழைத்த மரங்களையாவது காப்பாற்றுவோம்?

*கரணவாய்.* எஸ்.கரன்,

## பிரதேச சபையினர் கவனிப்பரா?

திருநெல்வேலிச் சந்தையில் மக்களுக்கு இடைஞ்சல் தரும் பல விடயங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சாதாரணமாக மிதிவண்டிகளை நிறுத்தி வைக்க காய்கறிச் சந்தைக்குள் நடந்துபோய் பொருள்களை வாங்க பெரும் தடைகள் உள்ளன. வியாபாரிகள் பொதுமக்கள் நடந்து செல்லும் இடங்களில் பொருள்களை அடுக்கி வைத்திருக்கிறார்கள். எதையுமே கண்டு கொள்ளாமல் பணம் அறவிடுதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மிதிவண்டிக் கட்டணம் நுழைவாயிலில் பெற்றுக் கொள்ளப்படுகிறது. ஆனால் மிதிவண்டியை நிறுத்துமிடத்திற்குக் கொண்டு போக முடியாமல் அல்லல்படுவோருக்கு உதவுவாரில்லை. பல முறைப்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சம்பந்தப்பட்டவர்களுக்கு இது சமர்ப்பணம்.

கொக்குவில். வை.சந்திரபாலன்

## சண்டிலிப்பாயில் பொதுசன உதவிப்பணம்

நவாலி, மே 14

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களது இம் மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் தபாலகங்களுக்கு சமூக சேவைப் பகுதியினரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களையும் புதிதாக விண்ணப்பம் செய்தவர்களையும் நாளை முதல் இவற்றைப்பெற்றுக்கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார். (1-100)

## கணிதபாட செயலமர்வு

வடமராட்சிகல்வி வலய பாடசாலைகளின் க.பொ.த. சாதாரணதர வகுப்பில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு நாளை சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

செயலமர்வுக்கு வரும்போது பாடசாலையில் தரம் 11 இல் கல்வி கற்கும் இடம்பெயர்ந்த மாணவர்களின் விவரங்களையும் கொண்டு வருமாறு வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (1-90)

## மெய்வன்மை போட்டிகள்

பருத்தித்துறை, மே 14

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலானமாவட்டமட்ட மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 20 ஆம், 21 ஆம், 22 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள்யாழ் மத்தியகல்லூரிமைதானத்தில் நடைபெறவுள்ளது. (1-190)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 13 * 08 * 1964



இறப்பு 14 * 04 * 2010

### அமரர் மார்க்கண்டு ஸ்ரீரவிகுலன் (ரவி)

கடந்த (14.04.2010) அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறி எமது துயரில் பங்கேற்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (14.05.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தகவல்:*
*மீசாலை மேற்கு, மீசாலை.* குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணுலகம்: 03.08.1934

விண்ணுலகம்: 14.04.2010

### திருமதி முத்துத்தம்பி இராசலட்சுமி

கடந்த 14.04.2010 அன்று இறைபதம்மடைந்த எமது அன்புத் தாயார் திருமதி முத்துத்தம்பி இராசலட்சுமி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (14.05.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*190 ஆம் கட்டையடி,*
*நுணாவில் மேற்கு, சாவகச்சேரி* (98183)

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Alliance Francaise de Jaffna
61, Kachcheri - Nallur Road, Jaffna
Phone: 021 222 8093
E-Mail: alliancejaffna@yahoo.com

***Learn French the French Way***
***French Classes***

சர்வதேச மொழியான French மொழி வகுப்புக்கள் French Embassy இன் அனுசரணையுடன் பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாக கற்பிக்கப்படுகின்றது.

பிரெஞ்சு தூதரகம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரே ஒரு கலாசார பிரெஞ்சு மொழி பயில்வதற்கான ALLIANCE FRANCAISE ஒரு மையமாகும்.

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்
மேலதிக விவரங்களை நேரில்/ தொலைபேசியினூடாக பெறலாம். (98190)


## நீர்த்தடுப்பு அணை புனரமைக்கப்படுகிறது

நாவற்குழியில் பாலத்திற்கு மேற்காக அமைந்துள்ள நீர்த்தடுப்பு கொங்கிறீற்கட்டுமானங்கள் புனரமைக்கும் பணிகள் முழுவீச்சில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பழைய கொங்கிறீற் கட்டுமானங்கள் உடைத்து அகற்றப்பட்டு புதிய கொங்கிறீற் கட்டுமானங்கள் துரிதமாக அமைக்கப்பட்டு வருகின்றன.

கட்டுமானப் பணிகளுக்காக நீரை அகற்றும் பணி தினமும் நடைபெற்று சமநேரத்தில் கட்டட அமைப்பு வேலைகளும் நடைபெறுகின்றன.

பெருமளவுக்கு இயந்திரங்கள் பாவிக்கப்பட்டே இவ்வேலைகள் நடைபெறுகின்றன. (50-121)

## தோன்றி மறையும் நடைபாதை வியாபாரங்கள்

யாழ்.குடாநாட்டில் கிராமப் புறங்களை அண்டிய பெருந்தெருக்களின் கரையோரங்களில் தென்பகுதி நடைபாதை வியாபாரிகள் ஒரிரு நாள்கள் வியாபாரம் செய்துவிட்டு வேறிடம் நகர்ந்து வியாபாரம் செய்வதையும் காணமுடிகின்றது.

பிளாஸ்ரிக் பொருள்கள், மாபிளாலான பாத்திரங்கள் ஆகியவையே பெருமளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பொதுமக்களும் ஆர்வத்துடன் தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதைக் காணமுடிகிறது. (50-121)


**வடமாகாண பொதுச்சேவைகளுக்கான ஆள்சேர்ப்பு போட்டிப் பரீட்சைக்குரிய விசேட வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன**

ஆரம்பம் - 15.05.2010 சனி பி.ப. 3 மணி
சனி, ஞாயிறு - 3 - 5 மணி வரை
சுகாதார முகாமைத்துவ உதவியாளர்,
கல்விசாரா ஊழியர் தெரிவு, ஏனைய
பொதுச் சேவைப் பரீட்சைகள்
போன்றவுற்றுக்குரியது.
அனைத்துப் பரீட்சைகளுக்கும் உரிய கடந்த (98188)


## ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 20
திகதி - 12.05.2010
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: T | அதிர்ஷ்ட இலக்கம்: 01 | வெற்றி இலக்கம்: 0 6 8 2 9

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | T | 01 | 0 | 6 | 8 | 2 | 9 | ரூ. 23,811,042.00 | பரிசு - |
| 1 பரிசு | | 01 | 0 | 6 | 8 | 2 | 9 | ரூ. 2,000,000.00 | பரிசு - |
| 2 பரிசு | | | 0 | 6 | 8 | 2 | 9 | ரூ. 100,000.00 | பரிசு 03 |
| 3 பரிசு | | | | 6 | 8 | 2 | 9 | ரூ. 10,000.00 | பரிசு 25 |
| 4 பரிசு | | | | | 8 | 2 | 9 | ரூ. 1,000.00 | பரிசு 255 |
| 5 பரிசு | | | | | | 2 | 9 | ரூ. 50.00 | பரிசு 2554 |
| 6 பரிசு | | | | | | | 9 | ரூ. 20.00 | பரிசு 24647 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 0 | 6 | 8 | 2 | | ரூ. 1,000.00 | பரிசு 27 |
| 8 பரிசு | | | 0 | 6 | 8 | | | ரூ. 100.00 | பரிசு 257 |
| 9 பரிசு | | | 0 | 6 | | | | ரூ. 50.00 | பரிசு 2588 |
| 10 பரிசு | T | | | | | | | ரூ. 20.00 | பரிசு 10401 |
| 11 பரிசு | T | 01 | | | | | | ரூ. 100.00 | பரிசு 1144 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,930,160.00

தேசிய லொத்தர் சபை
www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 24,257,750.00

## ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 510
சீட்டிழுப்பு திகதி: 12.05.2010

வெற்றி எழுத்து: J | வெற்றி இலக்கங்கள்: 02 45 58 71

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ-13,860,973.60 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 06 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 203 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 409 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 9970 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 50/- | 5793 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 144886 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 30/- | 23146 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 6,993,750.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,058,118.40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்குமிட வசதி, மாதாந்தக் கொடுப்பனவு தாதிய மாணவருக்குக் கிடைப்பதில் தாமதம்

## இதனால் சிரமங்களை எதிர்கொள்வதாகக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,மே14

யாழ்.தாதிய பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாதிய பயிற்சிக் கல்லூரியில் தற்போது 250 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தமது கற்கை நெறியைத் தொடர்ந்து வருகின்றனர்.

தங்குமிட வசதி, மாதாந்தக் கொடுப்பனவு என்பவற்றைப் பெறுவதில் தாமதம் உள்ளிட்ட பல்வேறு சிரமங்களைத் தாதிய மாணவர்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வருடம் தை மாதம் தொடக்கம் இன்று வரையும் தொடர்ச்சியாக மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இவ்வாறு நீண்ட காலத்துக்குத் தொடர்ச்சியாக மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படாமலிருப்பதனால் தமது கற்கைநெறியைத் தொடர்வதில் அதிக சிரமங்கள் ஏற்படுவதாக தாதிய மாணவர்கள் தரப்பில் கடும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய ரீதியாக உள்ள ஏனைய 18 தாதிய பயிற்சிகள் கல்லூரிகளில் பயிலும் தாதிய மாணவர்களுக்கு ஒழுங்கான முறையில் - தொடர்ச்சியாக - மாதாந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் போது யாழ்.மாவட்டத்திலுள்ள தாதிய பயிற்சி கல்லூரியிலுள்ள மாணவர்களுக்கு மட்டும் மாதாந்தக் கொடுப்பனவை ஏன் வழங்க முடியவில்லை எனவும் மாணவர் தரப்பில் கேள்வி எழுப்பப்படுகிறது.

இதேவேளை விடுதி வசதிகளின்றியும் தாதிய மாணவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். யாழ்.மாவட்ட செயலகத்தை அண்மித்த பகுதியில் விடுதி வசதி மேற்கொள்ளப்பட்டு, 2006 இன் இரண்டாம் பிரிவைச் சேர்ந்த 17 தாதிய மாணவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்தனர். எனினும் சிங்களத் தாதிய உத்தியோகத்தர்களை அந்த விடுதியில் தங்க வைப்பதற்காக ஏற்கனவே அங்கு தங்கியிருந்த தாதிய மாணவர்கள் வெளியேற்றப்பட்ட னர். இதனால் அந்த மாணவர்கள் விடுதி வசதியின்றியுள்ளனர்.

மாதாந்தக் கொடுப்பனவையும் வழங்காதும் விடுதி வசதிகளையும் நிர்வாகம் செய்து தராமலிருப்பது குறித்தும் யாழ். தாதிய மாணவர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். (எ-14)

# சங்கிலியன் மன்றத்தின் 65 ஆவது ஆண்டு விழா

நல்லூர்,மே14

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 65 ஆவது ஆண்டு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்கிலியன் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

ஆண்டு விழாவையொட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டியும், ஏனைய விளையாட்டுப் போட்டிகள் 30 ஆம் திகதியும் நடைபெறும்.

மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் போட்டியாளர்கள் இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன் சங்கிலியன் மன்றத்துடன் தொடர்புகொள்ளுமாறு மன்றத் தலைவர் தியாகராஜா தெரிவித்தார். (204-111)

# ஆள்களற்ற வீட்டில் ஜன்னல் உடைத்துக் கொள்ளை; 7 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மாயம்

சண்டிலிப்பாய்,மே 14

பட்டப்பகலில் வீட்டில் எவரும் இல்லாத சமயம் யன்னல் உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் அலுமாரியில் பாதுகாப்பாகப் பூட்டி வைக்கப்பட்டிருந்த சுமார் 7 லட்சம் ரூபா பெறுமதியான 25 தங்கப் பவுண் எடையுள்ள நகைகளையும் 15 ஆயிரம் ரூபா பணத்தையும் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருள்களையும் திருடிச் சென்றுள்ளனர்.

மானிப்பாயைச் சேர்ந்த ஆசிரியர் விஜயகாந் என்பவரின் வீட்டிலேயே இத்துணிகரமான பகல் திருட்டு இடம்பெற்றுள்ளது.

ஆசிரியர்களாகக் கடமையாற்றும் கணவனும் மனைவியும் நேற்றுமுன் தினம் காலை கல்லூரிக்குச் சென்றுவிட்டனர். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய திருடர்கள் வீட்டின் பின்புறத்தில் உள்ள ஜன்னல் கதவை உடைத்து உள்ளே சென்று பாதுகாப்பாக அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த சங்கிலி,காப்பு உட்பட சுமார் 25 பவுண் தங்க நகைகளையும் 15 ஆயிரம் ரூபா பணத்தையும் விலை உயர்ந்த பொருள்களையும் திருடிச் சென்றுள்ளனர். இதுபற்றி மானிப்பாய் பொலிஸில் புகார் செய்ததைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் உப அதிபராகக் கடமை புரியும் திருமதி விஜயகாந் கல்லூரிக்குச் செல்லும் போது தாலிக் கொடியை அணிந்த சென்றபடியால் அது திருடர்களின் கைவரிசையில் இருந்து தப்பிக் கொண்டது. (எ-115)

# நாய்களுடன் போட்டியிடும் மனிதர்கள்; மானிப்பாயில் பெருகிவரும் 'மனிதக்கடி'

நவாலி,மே14

குடாநாட்டில் நாய்க்கடியினால் பாதிப்புறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வரும் சூழலில் நாய்களுக்குப் போட்டியாக இப்போது மனிதர்களும் தம் ''பல்வரிசையைக்' காட்டத் தொடங்கியிருக்கிறார்கள். இதனால் சக மனிதர்களால் கடியுண்டு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் கடந்த மாதத்தில் மட்டும் மூன்று பேர் இவ்வாறு மனிதக் கடியால் பாதிப்புற்று சிகிச்சை பெற்றுள்ளனர்.

தமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்த சகோதரர்கள் இருவரும் வெறிகொண்டு பரஸ்பரம் ஒருவரையொருவர் கடித்துக் குதறியதில் காயமடைந்து ஒருவர் வைத்தியசாலையில் சிசிக்சை பெற்றுள்ளார்.

இதேபோன்று வீதியில் சண்டையிட்டுக் கொண்டிருந்த இருவரைச் சமாதானப் படுத்துவதற்காகச் சென்ற ஒருவருக்கும் ''மனிதக்கடி'' பரிசாகக் கிடைத்துள்ளது.

மேலும் பாடசாலை ஒன்றில் தகராறு காரணமாகக் கடிபட்ட மாணவர் ஒருவர் சிகிச்சை பெற்றுள்ளார்.

இதேவேளை இவ்வாறு சக மனிதர்களால் கடியுண்டு பாதிப்புறுபவர்கள் தகுந்த சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதோடு தடுப்பூசியும் கட்டாயமாக ஏற்றிக் கொள்ள வேண்டும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஏ-100)

# மீண்டும் பெருகிவரும் கோழிக்குஞ்சு வியாபாரிகள்

யாழ்ப்பாணம்,மே14

நீண்ட நாள்களின் பின்னர் யாழ்.குடாநாட்டில் மீண்டும் கோழிக்குஞ்சுகளை விற்பனை செய்யும் வியாபாரிகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது.




இந்த வியாபாரிகள் கால்நடையாகச் சென்று குடாநாட்டில் பல்வேறு இடங்களிலும் தாம் கொண்டு வந்த கோழிக் குஞ்சுகளை விற்பனை செய்து வருகின்றனர்.

இதேசமயம் ஏ - 9 பாதை திறந்த சமயம் இதே வியாபாரிகள் பேட்டுக் குஞ்சு என்று கூறி விற்பனை செய்த கோழிக் குஞ்சுகள் தற்போது வளர்ந்து சேவல்களாக மாறிக் கூவி வருகின்றன என்று வியாபாரிகளால் ஏமாற்றப்பட்ட மக்கள் தெரிவித்தனர். (04-224)

# அரியாலைப் பிரதேசத்தில் 6 கிராமங்களில் மக்களைக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை

நல்லூர்,மே 14

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவின் அரியாலை ஜே-89,ஜே-90 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மணியன் தோட்டம், உதயபுரம், நாவலடி, பூம்புகார், அரியாலை முனங்கு உட்பட்ட ஆறு கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியுள்ள மக்களை அவர்களது கிராமங்களில் மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நல்லூர் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக மேற்படி பிரதேச செயலகத்தினால் விநியோகிக்கப்படும் படிவங்களைக் குறிப்பிட்ட பகுதிகளைச் சேர்ந்த இடம்பெயர்ந்தவர்கள் பெற்று தமது குடும்ப விவரங்களைக் குறிப்பிட்டு இந்த மாதம் 30ஆம் திகதிக்கு முன்னதாக நல்லூர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு தெரிவித்துள்ளார். (ப-111)

# செம்மொழி மாநாட்டையொட்டி

# கோவைத் தமிழ்ச் சங்கம் வெளியிடும் நூல்களுக்கு படைப்புக்கள் கோரப்படுகின்றன

அச்சுவேலி,மே14

தமிழ் நாடு கோவையில் எதிர்வரும் யூன் மாதம் 23ஆம் திகதி தொடக்கம் ஐந்து தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை முன்னிட்டு கோவைத் தமிழ் சங்கம் வெளியிடவுள்ள சிறப்பு மலர்களுக்கு ஈழத்தமிழ் அறிஞர்கள், கலைஞர்கள், தமிழ் இலக்கிய ஆர்வலர்களிடம் இருந்து ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

கோவைத் தமிழ்ச் சங்கம் வெளியிடவுள்ள 'உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டு மலர்', 'மரபுக் கவிதைகளில் தொகுப்பு', 'புதுக் கவிதைகளின் தொகுப்பு' ஆகிய நூல்களுக்கே ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

இவற்றுக்கு அனுப்பப்படும் கவிதைகள் யாவும் 32 வரிகளுக்கு உட்பட்டதாகவும், கட்டுரைகள் எட்டுப் பக்கங்களுக்கு உட்பட்டதாகவும் இருக்கவேண்டும். ஆக்கங்கள் ஏ - 4 தாளின் ஒரு பக்கத்தில் கணனி அச்சில் பிரதி செய்யப்பட்டு 2010.05.31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக 'மானூர் புகழேந்தி, தலைவர், கோவைத் தமிழ்ச் சங்கம், 63 - பாரதிதாஸன் நகர், இராமநாதபுரம், கோயம்புத்தூர் - 45, இந்தியா' என்ற முகவரிக்கு அல்லது pugal govind@yahoo.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இதுகுறித்து மேலதிக தகவல்களை 0091 - 9443468731 அல்லது,

உள்நாட்டில் அபிதவன் - 0778952106 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் என கோவைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் மானூர் - புகழேந்தி அறிவித்துள்ளார். (எ -11)

# பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையினால் சட்டவிரோத மணல் திருட்டு குறைந்தது

யாழ்ப்பாணம்,மே14

கொடிகாமம் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கைகளால் சட்டவிரோதமாக வாகனங்களில் மணல் ஏற்றிச் செல்வோரின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வரணி, இடைக்குறிச்சி, கரம்பைக் குறிச்சி, நாவற்காடு ஆகிய பகுதிகளில் தினமும் பெருமளவு வாகனங்களில் சட்டவிரோதமாக மணல் ஏற்றப்பட்டுக்கொண்டு செல்லப்பட்டன. இது தொடர்பாக அப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டதையடுத்து சிவில் உடையில் நடமாடும் பொலிஸார் சட்டவிரோத மணல் ஏற்றி வரும் வாகனங்களைப் பிடித்து நீதிமன்றில் வழக்குகளைத் தாக்கல் செய்தனர்.

இதனையடுத்து 90 வீதமான சட்டவிரோத மணல் ஏற்றிச்செல்வது குறைந்துள்ளதாகவும் இந்நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அப்பகுதி மக்கள் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத மணல் அகழ்வில் அப் பகுதியில் உள்ள பல காணிகளில் பாரிய பள்ளங்கள் ஏற்பட்டு வெள்ளம் தேங்கி நிற்கும் நிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-207)




தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணி ஆங்கில நெறி ஆரம்ப வைபவத்தில் இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பணிப்பாளர் கலாநிதி நிகால் விக்கிரமசிங்க, லயன் டாக்டர் வை.தியாகராஜா ஆகியோர் நிற்பதையும் முதலாவது படத்திலும் கல்வி மாணிக் கற்றைநெறி அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்த பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், பணிப்பாளர் கலாநிதி நிகால் விக்கிரமசிங்க, திருமதி சாந்தி அபயகுணவர்த்தன ஆகியோர் பொன்னாடை போர்த்தப்பட்டு நினைவுப் பரிசில்கள் வழங்கிக் [illegible] படத்திலும் கல்விமாணி ஆங்கில நெறி முதலாம் அணி மாணவர்களையும் விருந்தினர்களையும் இறுதிப் படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.வலய தமிழ்மொழித் தின எழுத்தாக்கப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மே14

யாழ்.வலயப் பாடசாலைகளுக்கிடையே தமிழ் மொழித்தின எழுத்தாக்கப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. போட்டி முடிவுகள் வருமாறு:-

ஆக்கம் - எழுத்து

முதலாமிடம் - காருண்யா பார்த்தீபன் - சென்ஜோன்ஸ் பொஸ்கோ, இரண்டாம் இடம் - ஜெ.நிவாஹறன் -யா/ இந்து ஆரம்பப் பாடசாலை, மூன்றாம் இடம் - இ.சங்கவி - கொழும்புத்துறை இந்து ம.வி.

கட்டுரை வரைதல்

முதலாமிடம் - கஸ்தூரி பரமானந்தன் - வேம்படி மகளிர் கல்லூரி, இரண்டாம் இடம் - ம.டெலக்ஷன் -யா/மத்திய கல் லூரி, மூன்றாமிடம் - ச.யாழினி - உரும்பிராய் சந்திரோதயா.

பிரிவு - 5

முதலாமிடம் - கதிர்தர்சினி பரமேஸ்வரன் - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, இரண்டாமிடம் - ஸ்ரீ.விஷ்ணுகா - இடைக்காடு ம.வி, மூன்றாமிடம் - க.சிந்துஜா - கரந்தன் இராமப்பிள்ளை ம.வி,

கட்டுரை வரைதல்

இலக்கியம் நயத்தல்- முதலாமிடம் லக்சிகா இந்திரேஸ்வரன் - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, இரண்டாமிடம் - இ.துளசி - கோப்பாய் சரவணபவானந்தம் ம.வி, மூன்றாமிடம் - இ.தர்சிகா- யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரி.

கட்டுரை இலக்கியம் நயத்தல்

முதலாமிடம் - இ.சர்ண்யா - கோண்டாவில் இராமகிருஸ்ணா ம.வி, இரண்டாமிடம் - சி.ஆர்ஜிகா - அச்சுவேலி மத்திய கல்லூரி, மூன்றாமிடம் - சி.ஹரிகரன் - யா/மத்திய கல்லூரி.

இலக்கணப் போட்டி

பிரிவு - 4

முதலாமிடம் இ.பிரணவன் - யாழ். இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் - அ.றெஜினா - ஊரெழு கணேசா வித்தியாலயம், மூன்றாமிடம் - கொ.டொன்சியா - கோப்பாய் ம.வி,

இலக்கணப் போட்டி

பிரிவு - 5

முதலாமிடம் - மேனுஜா சௌந்தரராஜா -யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி, இரண்டாமிடம் - அம்பிகை பஞ்சலிங்கம் - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, மூன்றாமிடம் - டி.கஜலக்சி - யாழ்.கனகரட் ணம் மத்திய ம.வி.

திறனாய்வு

பிரிவு - 5

முதலாமிடம் - க.ஜெனா - இடைக்காடு ம.வி, இரண்டாமிடம் - மு.கல்யாணி - கோண்டாவில் இராமகிருஸ்ணா, மூன்றாமிடம் - ஜெ.அகல்யா - யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

குறு நாடக ஆக்கம்

பிரிவு - 4

முதலாமிடம் - வி.சஜீவன் -யாழ். இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் - செ.கஜீவன் - யாழ்.மத்திய கல்லூரி, மூன்றாமிடம் - சு.சுகன்ஜா - செங்குந்தா இந்துக் கல்லூரி.

பிரிவு - 5

முதலாமிடம் - சி.சுகன்ஜா - புனித திரேசாள் கல்லூரி, இரண்டாமிடம் - செ.பிரதீபா - கனகரட்ணம் ம.வி, மூன்றாமிடம் - சபீதா இரஞ்சிதராஜா - வைத்தீஸ்வராக் கல்லூரி.

கவிதை ஆக்கம்

பிரிவு - 4

முதலாமிடம் - மு.வாகீசன் - இளையதம்பி இந்து ம.வி, இரண்டாமிடம் - மு.சசிரேகா - செங்குந்தா இந்துக் கல்லூரி, மூன்றாமிடம் - ப.வயன்கனி - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி,

பிரிவு - 5

முதலாமிடம் - சா.தருக்சனா - கொக்குவில் இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் - ஏ.கஜானனி - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி , மூன்றாமிடம் - இ.நிவேதனா - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

சிறுகதை ஆக்கம்

பிரிவு - 4

முதலாமிடம் - யாழினி வடிவேலர் - சென்.மேரிஸ் ம.வி, இரண்டாமிடம் - சி.துலக்ஷன் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி, மூன்றாமிடம் - சு.பிறின்விகா - கோண்டாவில் இந்து ம.வி.

பிரிவு - 5

முதலாமிடம் - அ.ஆர்த்திகா - புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, இரண்டாமிடம் - கே.வினோஜினி - புனித தெரேசாள் ம.வி,மூன்றாமிடம் - பி.நியூரா - சென் .சாள்ஸ் ம.வி. (எ-16)

## சனிக்கிழமை மின்தடை

யாழ்ப்பாணம், மே 14

அவசர திருத்த வேலைகள் காரணமாக நாளை சனிக்கிழமை காலை 8மணி தொடக்கம் பிற்பகல் 5மணிவரை பின்வரும் இடங்களில் மின்சார விநியோகம் தடைப்படும் என இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் பிராந்திய நிலைய மின் அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, கட்டுவன், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு மற்றும் வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் மின்வெட்டு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50-201)

## பொங்கல் வேள்வி உற்வசம்

வடமராட்சி, மே 14

பருத்தித்துறை தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் வேள்வி உற்வசவம் இன்று வெள்ளிக்கிழமை இரவு ஆரம்பமாகவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை பொங்கல் இடம்பெற்று விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பொங்கல் வேள்வி உற்வசம் நிறைவுபெறும். (204-236)

# கொம்பனித்தெரு வீடு இடிப்பு; கண்டித்து இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மே 14

கொழும்பு, கொம்பனித்தெருவில் அமைந்திருந்த வீடுகளை இடித்து அகற்றியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று வெள்ளிக்கிழமை கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையின் பின்னர் கொம்பனித் தெருவில் இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெறும் என்று கொழும்பு குடியிருப்பு பாதுகாப்பு மன்றம் தெரிவித்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சி எம்.பிக்கள், கொம்பனித்தெரு மக்கள் உள்ளிட்ட அநேகர் கலந்துகொள்வார்கள் என்று அந்த அமைப்புத் தெரிவித்துள்ளதோடு, ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வதற்காகப் பலருக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

கொம்பனித்தெருவில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்ட விவரங்கள் தெரிவிக்கப்பட்டன.

அதில் கலந்துகொண்டு உரையாற்றிய கொழும்பு குடியிருப்பு பாதுகாப்பு மன்றத்தின் முக்கியஸ்தரான சமல் ஹந்துன்நெத்தி கூறியவை வருமாறு:-

கொம்பனித்தெருவில் சுமார் ஒரு லட்சம் பேர் வசிக்கின்றனர். அவர்களில் 20 வீடுகளில் வசித்த 38 குடும்பங்கள் நடுத்தெருவில் விடப்பட்டுள்ளன. கொம்பனித்தெருவில் வசிக்கின்ற ஒரு லட்சம் பேரையும் அங்கிருந்து விரட்டும் நடவடிக்கையின் முதல் கட்டம்தான் இந்த வீடுகள் உடைப்பு.

இந்த நாட்டை சிங்கப்பூராக மாற்றுவதற்கு இந்த அரசு முயற்சிப்பதாகத் தெரிகிறது. சிங்கப்பூரை அபிவிருத்திய டையச் செய்வதற்கு நகரங்களில் இருந்த மக்கள் பலவந்தமாகக் கிராமங்களுக்கு விரட்டப்பட்டனர்.

அவ்வாறு மக்களை விரட்டியடித்து அவர்களின் இடங்களில் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. இடதுசாரிக் கட்சிகளின் எதிர்ப்பு, பல உயிர்கள் இழப்பு ஆகியவற்றின் மத்தியில்தான் அந்தத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. அவ்வாறானதொரு நிலை இங்கும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் தென்படுகின்றன.

### வடக்கில் இடம்பெயர்ந்தவர்களுக்கு தங்குமிடம் கொடுக்காதவர்கள்

வடக்கில் இடம்பெயர்ந்த ஒன்றரை லட்சம் மக்களுக்கு உரிய தங்குமிடங்களை அமைத்துக்கொடுக்காத அரசு, கொம்பனித்தெருவில் வீடுகளை இழந்த மக்களுக்கு எதைக் கொடுக்கப்போகிறது?

கொம்பனித்தெருவில் இருக்கின்ற மீதி வீடுகளைப் பாதுகாப்பதற்கு நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசியல் தலைவர்கள் அனைவரும் இதற்காக ஒன்றிணைந்து செயற்படவேண்டும். - என்றார். (சி)

# கைத்தொலைபேசியூடான இணையத்தள பாவனையைத் தடைசெய்யக் கோரிக்கை

கொழும்பு, மே 14

கையடக்கத்தொலைபேசிகள் ஊடாகப் பயன்படுத்தப்படும் இணையத்தளங்கள் தடைசெய்யப்பட வேண்டும் எனக்கோரி, பெண் பொலிஸார் மற்றும் சிறுவர் சபை என்பன இணைந்து இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

இலங்கையில் கிட்டத்தட்ட 400 இணையத்தளங்கள் கையடக்கத் தொலைபேசிகளூடாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் அனுஷ பல்பட்ட, இது தொடர்பான வேண்டுகோள் தனக்கு விடுக்கப்பட்டிருக்கிறது எனக் குறிப்பிட்டார்.

எனினும், இதனை அமுல்படுத்துவதற்கான அனுமதியை அமைச்சரவையே வழங்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (சி)


## இதோ உங்கள் வாழ்க்கை கனவினை நனவாக்கிக்கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்

உங்கள் வாழ்க்கைக்கு ஓர் புதிய மாற்றம்
உங்கள் திறமைக்கு ஓர் வாய்ப்பு
பணம் சம்பாதிக்கவும், வாழ்க்கையை குதூகலமாகக் கழிப்பதற்கும் ஓர் மிகச் சிறந்தவழி

இடம்:
யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
15.05.2010 (சனிக்கிழமை) அன்று பி.ப. 2 மணிக்கு நடைபெறும் அரிய வாய்ப்பில் கலந்துகொள்ள உங்களையும் அழைக்கின்றோம்.

oriflame
natural swedish cosmetics

Tel: 0771336124
0776847568
0774701774



## IIS புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு 01 : 14.05.2010
பிரிவு 02 : 15.05.2010
காலை 10.00 மணி

Diploma Courses
- Diploma in Software Development
- Diploma in Computer Hardware & Networking Eng.
- Diploma in Business Information System

Certificate Courses
- Certificate in Office Solution Development
- Certificate in Networking
- Certificate in Java Programming
- Certificate in Visual Programming
- Certificate in Web Designing
- Certificate in Computerized Accounting
- Certificate in Hardware Technology
- Certificate in Eng.Drawing & AutoCAD
- Certificate in Database Management System
- Certificate in Multimedia
- Certificate in Desktop Publishing

INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )
#100, Clock Tower Road, Jaffna.



## அலுவலகம் தேவை

தனியார் நிறுவனம் ஒன்றிற்கு யாழ். நகரில் அல்லது அண்மித்த பகுதியில் பிரபல்யமான வீதியில் அலுவலகம் நடத்துவதற்குரிய இடம்தேவை. (தரகர் வேண்டாம்).


## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னத்தம்பி பொன்னுராசா

மண்ணில் 09★12★1927

விண்ணில் 04★05★2000

திதி: அமாவாசை (14.05.2010)

பாசத்துடன் எம்மைப் பாரினில் வளர்த்தவரே!
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

958/19, தலையாழி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
தகவல்:-சமறக்கோடி (மகன்).

பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 01.04.1925

மறைவு: 12.04.2010

அருமையும் பெருமையுமாக
வளர்த்த எங்கள் அப்பா
அறிவின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் பிறப்பிடமாய்
நீர் இல்லாத குளம் போல்
நிழல் இல்லாத மரம் போல்
தவித்து நிற்கின்றோம்
எங்களுக்கு இவ்வுலகத்தில்
யாருமில்லை ஆறுதல் கூற.

**கதிரவேலு தங்கராசா** *(Ret: Station Master)*

கடந்த 12.04.2010 இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் துயர் செய்தி கேட்டு பலவழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிபுரிந்து இறுதி ஊர்வலத்தில் பங்கு கொண்ட அன்பு உள்ளங்கள் அனைவருக்கும், அன்னார் நோய் வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதித்திருந்த வேளை நல்ல முறையில் அவருக்கு சிகிச்சையளித்த வைத்தியர்கள், தாதிகள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் எமது மனம்மார்ந்த நன்றிகள். மேலும் இன்று (14.05.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

துயரில் வாடும் குடும்பத்தினர்

மனைவி: குமாரி திரௌபதி. மகள்:துவாரகா, மச்சாள்: யுதிஸ்திரா கணேஸ்வரி
மச்சாள்: துர்க்கா தருமலிங்கம். மகள்: நர்மராணி (மலேசியா).
மருமக்கள்:பத்மநாதன்,புஸ்பவதி.
பேரப்பிள்ளைகள் : அரவிந்தன் (கனடா), ஆதவன்.

வட்டுகிழக்கு,
வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தியின் எல்லை



இந்த உலகில் ஒருவர் மீது உண்மையிலேயே அன்பு செலுத்துவது ' என்பது பெரிய விஷயம்; பக்தி செலுத்துவது என்பது அதைவிடப் பெரிய விஷயம்.

பக்தி என்றால் ஏதோ கோயிலுக்குச் சென்று சுவாமி கும்பிட்டு வருவது மட்டுமல்ல.

பக்தியின் எல்லை எது என்று தெரிந்து கொள்வதற்கு இங்கு நாம் ஒரு கதையைப் பார்ப்போம்.

மயூரசர்மன் என்ற ஒருவன் இருந்தான்.

அவன் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் மீது பெரிதும் பக்தி கொண்டவன்.

ஒரு நாள் ஸ்ரீகிருஷ்ணர் அவனைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று நினைத்து வந்தார்.

ஸ்ரீகிருஷ்ணரைப் பார்த்ததும் மயூரசர்மனுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. பக்தனுக்கு அப்படி இருப்பது இயல்புதானே?

வழக்கமாகப் பக்தர்கள்தான் பகவானிடம் ஏதாவது கேட்பார்கள்.

இங்கு பகவான் பக்தனிடம், " இதோ பார்! உன்னிடம் நான் ஒன்று கேட்பேன். கொடுப்பாயா?'' என்று வினாவினார்.

பக்தன் ' மாட்டேன்' என்றா சொல்லுவான்?

'' நீங்கள் என்ன கேட்டாலும் அதைக் கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்!'' என்றான் மயூரசர்மன்.

'' உனக்கு ஐந்து வயதில் ஒரு மகன் இருக்கிறான் அல்லவா? அவன்தான் எனக்கு வேண்டும்'' என்றார் ஸ்ரீகிருஷ்ணர்.

மயூரசர்மன் சிறிதும் தயங்கவில்லை!

அவன், ''சரி, தந்தேன்'' என்று கூறினான், ஸ்ரீகிருஷ்ணர், '' உன் மகன் உடம்பு முழுவதும் எனக்குத் தேவையில்லை. அவன் உடம்பில் வலது பாகத்தை மட்டும் நீ எனக்குத் தந்தால் போதும்'' என்று தெரிவித்தார்.

அதற்கும் மயூரசர்மன், '' சரி , அப்படியே கொடுக்கிறேன்.'' என்றார்.

ஸ்ரீகிருஷ்ணர்,'' அந்தச் சிறுவனை நிற்கவைத்து அவன் தலையிலிருந்து ஒரு ரம்பத்தால் அறுக்க வேண்டும். அப்போதுதான் இரண்டு பாகமாக்க முடியும்!என்றார்.

'' சரி அப்படியே செய்யலாம்'' என்றான் மயூரசர்மன்.

'' அந்த ரம்பத்தை நீ ஒரு பக்கமும் ,உன் மனைவி மற்றொரு பக்கமும் பிடித்து உங்கள் மகனை அறுத்து இரண்டு துண்டாக்க வேண்டும்.'' என்றார் ஸ்ரீகிருஷ்ணர்.

அதற்கும் மயூரசர்மன்,''சரி பகவானே'' என்றான்.

ஸ்ரீகிருஷ்ணர், '' நீங்கள் அப்படிச் செய்யும்போது நீயும் அழக்கூடாது! உன் மனைவியும் அழக்கூடாது!'' என்றார்.

'' சரி'' என்று மயூரசர்மன் ஒப்புக் கொண்டான்.

அடுத்து,'' உன் மகனும் அழக்கூடாது!'' என்றார் ஸ்ரீகிருஷ்ணர்.

அந்த நிபந்தனைக்கும் '' சரி'' என்று மயூரசர்மன் சம்மதம் தெரிவித்தான்.

கடைசியில்,'' இவ்வளவு நிபந்தனைகள் பேரில்தான் உன் மகனின் வலது பாகத்தை நான் ஏற்றுக் கொள்வேன். இல்லையென்றால் ஏற்கமாட்டேன்'' என்று ஸ்ரீகிருஷ்ணர் கூறினார்.

மயூரசர்மனும்,'' உங்களுடைய அத்தனை நிபந்தனைகளுக்கும் நாங்கள் கட்டுப்பட்டு நடக்கிறோம்'' என்று தெரிவித்தான்.

உடனே அவன் தன் மகனைக் கூப்பிட்டான்.மகன் வந்து நின்றான்.

மயூரசர்மன் தன் மகனை நீராட்டினான்; அவனுக்குப் புதிய ஆடைகள் அணிவித்தான்.

அதன் பிறகு,அவன் ஒரு ரம்பத்தைக்கொண்டு வந்தான். ஒரு பக்கம் அவனும், இன்னொரு பக்கம் அவன் மனைவியும் இருந்து கொண்டு தங்கள் மகனை அறுக்க ஆரம்பித்தார்கள்.

கணவன், மனைவி இருவர் கண்களிலிருந்தும் கண்ணீர் கொஞ்சம் கூட வரவில்லை. ஆனால் அந்தச் சிறுவனின் இடது கண்ணிலிருந்து மட்டும் கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

அதைக் கவனித்த ஸ்ரீகிருஷ்ணர் உடனே, ''என் நிபந்தனையின் படி நீங்கள் நடந்து கொள்ளவில்லை! அதனால் உங்கள் மகனின் வலது பாகம் எனக்கு வேண்டாம்.'' என்று கூறினார்.

'' இறைவா,நாங்கள் இரண்டு பேரும் அழவில்லையே !'' என்றான் மயூரசர்மன்.

'' நீங்கள் இருவரும் அழவில்லை என்பது சரி. ஆனால் உங்கள் மகனின் இடது கண்ணிலிருந்து கண்ணீர் வருகிறதே'' என்றார் கிருஷ்ணர்.

உடனே அந்தச் சிறுவன் , '' என் உடம்பில் வலது பாகத்தை மட்டும் தானே பகவான் கேட்டார்! வலது பாகம் செய்த புண்ணியத்தை இடது பாகம் செய்யவில்லையே என்று நினைத்துத்தான் இடது கண் அழுகிறது...'' என்று கவலையோடு கூறினான்.

அதைக் கேட்டதும் ஸ்ரீகிருஷ்ணரின் கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்தது!

அவர் அந்தச் சிறுவனை அன்புடன் அணைத்துக் கொண்டார். அவன் முன்பு போலவே பழைய உருவம் பெற்றான்.

' பகவான் இப்படியெல்லாம் வந்து நின்று, ' உன் மகனை வெட்டிக் கொடு ' என்று கேட்பாரா? என்று நீங்கள் கற்பனை செய்யாதீர்கள்.

பக்தியின் எல்லையை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சற்று அதீத கற்பனையுடன் கூறப்பட்ட கதை இது.

ஆன்மீக விஷயங்களை ஆன்மிக நோக்கத்தில் நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்பது மிகவும் முக்கியமான விஷயம்.

' பக்தியின் எல்லைக்கே நாம் போக முடியாவிட்டாலும், அதன் ஓர் ஓரத்திலாவது நாம் போய்ச் சேர முடிகிறதா?'' என்று முயற்சி செய்து பார்க்கலாமே.

*(நன்றி: நீதிக்கதைகள்)*

# வாழ்வின் ஆரம்பம் ஆனந்தம்...

ஆனந்தம், சந்தோஷம் எதுவாக இருந்தாலும் அது அவரவர் உள்ளத்தில் இருந்து தான் வெளிப்பட்டிருக்கிறது. அப்படியெனில் ஆனந்தத்தின் மூலம் நமக்குள்தான் உள்ளது. ஆனால் அனைவரும் வெளியே தேடிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில், ஆனந்தத்தை உணர்வைக்கும் தூண்டுதல்தான் வெளியே தேடப்படுகிறது.

ஆனந்தமாக இருக்க ஒவ்வொருவரும் பல கட்டுப்பாடுகளை உருவாக்கிக் கொள்கின்றனர். கணவர் இப்படியிருக்க வேண்டும்.மனைவி இப்படித்தான் இருக்க வேண்டும். மாமியார் இருக்கவே கூடாது. உலகமே நினைத்த வகையில் நடக்க வேண்டும் என்றே விரும்புகின்றனர். உங்கள் வாழ்க்கை நீங்கள் நினைத்த விதமாக நடக்கவில்லை என்பதுதான் பிரச்சினையாக இருக்கிறது.

எல்லாத் துன்பத்துக்கும் அடிப்படையான காரணம் என்னவெனில் ' நான் நினைத்த விதமாக வாழ்க்கை அமையவில்லையே' என வருந்துவதுதான்.

எவ்வளவுதான் அறிவியலும், தொழில்நுட்பமும் வளர்ந்தாலும் எதுவுமே நூறு சதவீதம் நாம் நினைப்பது போல் இருக்காது.நாம் அதனை ஓரளவுக்குத்தான் கட்டுப்படுத்த முடியும்.

ஆனால், நமது உள்நிலைப் பரிமாணமானது நினைத்தபடி நடக்க வேண்டும்.நூறு சதவீதம் கட்டுப்பாட்டைக் கொண்டுவரக்கூடிய ஒரே இடம் உள்நிலைதான். நீங்கள் யாராக இருந்தாலும் எவ்வளவு வலிமை உடையவராக இருந்தாலும் ஓரளவுக்கு மட்டுமே வெளிச்சூழலைக் கட்டுப்படுத்த முடியும். அது அவ்வாறு இருப்பதே நல்லது. ஆனால் உள்நிலையில் நீங்கள் நினைத்த விதமாக நடக்கமுடியும். உங்கள் உள்நிலை நீங்கள் நினைத்த விதமாக எப்போது நடக்கிறதோ அப்போதுதான் ஆனந்தம் இருக்க முடியும்.




பேரானந்த நிலை என்பது உங்களுக்குள் ஆழமாகத் தோண்டி ஒன்று. இது எப்படியெனில், ஒரு சில மணிநேரம் பெய்யும் மழைக்காகக் காத்திராமல் எப்போதும் நமக்காக இருக்கும் ஒரு கிணற்றைத் தோண்டுவதைப் போல. உண்மையான பேரானந்தம் என்பது இதுதான்.

*(நன்றி: சத்குரு ஜக்கி வாசுதேவ் அருளுரை)*

# வீணான ஒன்று: விலைமதிப்பற்ற தாகலாம்



கலைக்குத் தன்னை அர்ப்பணித்தவர்களில் மிக உயர்வானவர் மைக்கல் ஆஞ்சலோ.இத்தாலியின் புகழ்பெற்ற சிற்பக் கலைஞர். ஒருமுறை மைக்கல் ஆஞ்சலோ சலவைக் கற்கள் விற்பனை செய்யும் கடையில் ஒரு பெரிய சலவைக் கல் இருப்பதைக் கண்டார். அது பார்ப்பதற்கு அசிங்கமாக அந்தக் கடையின் வியாபாரத்தைப் பாதிக்கும்வகையில் இருந்தது.

அக்கடை முதலாளியோ அந்தக் கல்லை யாரிடமாவது விற்றுவிட வேண்டும் என்று பல நாள்களாகவே முயன்று வந்தார்.

அப்போது அந்தக் கடைக்கு வந்த மைக்கேல் ஆஞ்சலோ அந்தக் கல்லை, தானே எடுத்துக் கொள்வதாகச் சொல்லிக் கல்லைப் பற்றி விசாரித்தார்.

கடைக்காரருக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிற்று. கடையை அடைத்துக் கொண்டிருந்த அந்தக் கல்லை மகிழ்வுடன் இலவசமாகவே தந்துவிட்டார்.

வருடங்கள் கழிந்தன.

மைக்கல் ஆஞ்சலோ தனக்கு வெண் சலவைக்கல்லை பரிசாகத் தந்த கடை முதலாளியை தம்முடைய இல்லத்திற்கு அழைத்து அங்கிருந்த ஓர் அழகிய சிற்பத்தைக் காட்டினார்.

அது ஓர் அழகிய சிற்பம். சிலுவையில் அறையப்பட்டுக் கிடத்தி வைக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை அன்னை மேரி தம் மடியில் கிடத்தியிருக்கும் காட்சியைக் காட்டும் சிற்பம் அது.

அந்தச் சிற்பத்தைக் கண்டு வியந்து போனார் கடைக்காரர். அப்போது தான் மைக்கல் ஆஞ்சலோ கடை முதலாளியிடம் ஓர் உண்மையைச் சொன்னார்.

'' சில வருடத்திற்கு முன்பு உங்கள் கடைக்கு வந்திருந்த சமயத்தில் தங்களிடமிருந்து ஒரு வெண் சலவைக் கல்லை இலவசமாகப் பெற்றது நினைவிருக்கிறதா? என்றார் மைக்கல் ஆஞ்சலோ.

'' ஆமாம் நினைவிருக்கிறது!''

'' நீங்கள் தந்த அந்த அழுக்கேறிய சலவைக் கல்லில் செய்த சிற்பம் தான் நீங்கள் இப்போது காண்பது. இந்தச் சிற்பத்தில் காட்சியளிக்கும் இயேசு கிறிஸ்துவும், அன்னை மாதாவும் அக்கல்லில் நீண்ட நாள்களாகவே அடைத்து வைக்கப்பட்டிருந்தார்கள். அக்கல்லை நான் என் வீட்டிற்கு கொண்டு வந்து அவர்களைச் சுற்றியிருந்த வேண்டாத பகுதிகளை நீக்கினேன்.இப்போது அழகிய சிற்பமாக உருவாகி விட்டது! '' என்று மைக்கல் ஆஞ்சலோ கூறினார். கடை முதலாளி அந்தச் சிற்பத்தைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

***

# விண்ணையும் அளக்கலாம்

விஞ்ஞான முன்னேற்றத்தின் மூலமாக நாம் பூமியின் அமைப்பைப் பற்றி அறிந்து கொள்ளலாம். இன்று மனிதன் தனது ஆர்வத்தாலும்,இடைவிடாத முயற்சியாலும், விஞ்ஞான முறையில் செயற்கைக் கோள்களை ஆகாயத்தில் பறக்கவிட்டு,உலகிலுள்ள மற்றக் கோள்களைச் சோதனை செய்வதற்காகச் சென்று கொண்டிருக்கிறான்.பல ஆயிரக்கணக்கான வருடங்களில் அறிய முடியாத விவரங்கள்,சந்திரனைப் பற்றியும்,மேலும் பூமியைப் பற்றியும் இப்பொழுது தெரிய வருகின்றது. ஆகாயத்தில் ஆயிரம் கிலோமீற்றர் உயரத்தில் பறக்கும் செயற்கைக் கோளின் மூலமாகப் பூமியின் எல்லாப் பகுதிகளையும் புகைப்படங்கள் எடுக்க வாய்ப்பு கிடைத்துள்ளது. இப்படங்களின் மூலம் மனிதன் செல்ல முடியாத நெடுந்தொலைவிலுள்ள இடங்களைப் பற்றிய புவியியல் விவரங்களை அறிந்து கொள்ளலாம்.



மேலும் ஆகாயத்தில் பறக்கும் விமானங்களில் பலவிதமான விஞ்ஞானக்கருவிகளை வைத்து அவைகளின் மூலம் நாட்டின் கனிப் பொருள் பிரிவுகளைக் கண்டுபிடிக்கக்கூடும். மலைகளிலுள்ள பாறைப் படுகைகள் அல்லது பாறை அடுக்குகள் மூலம் அவற்றின் அமைப்புத் தோற்றங்கள் பற்றி அறியக்கூடும். இவைகளிலுள்ள புதைப் படிவங்களைப் பரிசீலனை செய்தால் இப்பாறைகளின் தோற்றமும் மேலும் எப்பொழுது உருவாயின, அதில் கிடைக்ககூடிய கனிப் பொருள் என்ன என்பது போன்ற விவரங்களும் கண்டெடுக்கக்கூடும். நிலக்கரி, மண்ணெண்ணெய் முதலிய கனிப்பொருளிலுள்ள படிவங்களை இவ்விதத்தில் ஆராய்ந்து பார்க்கலாம்.

*(நன்றி: [illegible])*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



உங்களுக்கு வழிகாட்டியாக இருந்த ஒருவரைச் சந்திக்கலாம். நாளை வரும் என, எதிர்பார்த்த பணவரவு ஒன்று இன்றே வரலாம். வியாபாரிகள் எதிலும் அகலக்கால் வைக்காமல் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். சோம்பல் இல்லாமல் எதிலும் சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள். சிலருடன் சண்டை போடலாம்.

### இடபம்



உறவினர்கள் சிலர் கொடுத்த வாக்குறுதியை நம்பி முக்கியமான காரியங்களில் இறங்குவீர்கள். நீண்ட நாட்களாக உங்களுடன் இருந்த ஒருவரை பிரிய நேரிடலாம். கையில் பணம் இருந்தும் சிலருக்கு உதவி செய்ய மறுப்பீர்கள். வெளியூர்களில் இருக்கும் ஒருவர் திடீரென உங்களைத் தொடர்பு கொண்டு பேசலாம்.

### மிதுனம்



கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். சிலர் மீது கோபம் கொண்டாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்வீர்கள். ஒரு உறவினரிடம் கேட்டு கிடைக்காத உதவி, மற்றொரு உறவினர் மூலம் கிடைக்கலாம். வழக்கமாகச் செய்யும் சில வேலைகளை இன்று தாமதமாகச் செய்ய நேரிடலாம்.

### கடகம்



நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைக்கும் நாள். எந்த வேலையையும் முடியாது எனச் சொல்லாமல் முடிக்க முற்படுவீர்கள். தந்தை மீதான பாசம் அதிகரிக்கும். தெய்வ காரிய பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவீர்கள். சிறிய வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

### சிங்கம்



விரும்பாத ஒருவரை நீங்கள் செல்லும் இடத்தில் சந்திக்கலாம். உதவி கேட்ட சிலருக்கு மற்றவர்களிடம் வாங்கிக் கொடுத்து உதவுவீர்கள். நண்பர்களுக்காக உங்களுக்கு பிடித்தமான ஒன்றை விட்டுக் கொடுப்பீர்கள். உறவினர் ஒருவர் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றை பற்றி உங்களிடம் சொல்லலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

### கன்னி



வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். சில பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்கி விட்டு அதில் திருப்தி இல்லாமல் போகலாம். ஒருவரிடம் கைமாத்தாக வாங்கிய பணத்தை உடனே திருப்பிக் கொடுக்கலாம். சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள். கனவுத் தொல்லையுண்டு.

### துலாம்



எந்த காரியத்தையும் தயங்காமல் துணிச்சலாகச் செய்வீர்கள். கணிசமான பணவரவுகளால் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். பிரியமான உறவினர்களின் பாச மழையில் நனையலாம். சுக துக்கங்களை பற்றி சக ஊழியர் ஒருவரிடம் பேசலாம். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும்.

### விருச்சிகம்



அலைச்சல்களில் இருந்து ஓய்வு பெறுவீர்கள். சில விடயங்களில் தனிமையில் இனிமை காண முற்படுவீர்கள். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். உடன் பிறந்தவர்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. வேலையாட்கள் அனுசரணையாக இருப்பர்.

### தனுசு



குழப்பங்கள், தடுமாற்றங்கள் ஏற்படலாம். நீங்கள் எதிர்பார்த்தது போல சில விஷயங்கள் நடக்காமல், ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். வாயு, வயிறு தொடர்பான உபாதைகளுக்கு ஆளாகலாம். பெற்றோர் தொடர்பான விஷயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். மாமன், மைத்துனர்கள் உதவி கேட்கலாம்.

### மகரம்



உங்களுக்கு தெரியாத விடயம் ஒன்றை அறிந்து கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள். நீங்கள் எதிர்பாராத உறவினர் ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள். உங்கள் மூலம் சிலர் காரியம் சாதிக்க முற்படுவர். ஆறுதலான நாள்.

### கும்பம்



மகிழ்ச்சியான, உற்சாகமான அனுபவங்களைப் பெறலாம். தொழில் ரீதியான பதற்றம் இல்லாமல் அமைதி, பொறுமையாக இருப்பீர்கள். அயலாரிடம் கைமாத்தாக கொடுத்த பணம் வரும். நீண்ட நாள்களாக பேசாத நண்பர் ஒருவருடன் பேசலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.

### மீனம்



வெளியூர் பயணங்கள் விரும்பும் விதத்தில் அமையும். சில விஷயங்களில் அஜாக்கிரதையாக செயற்படுவதன் மூலம் அவதிகளுக்கு ஆளாகலாம். உங்களின் வேலை ஒன்றை மற்றவர்கள் மூலம் முடிக்க முற்படுவீர்கள். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். சில்லரை பரிகாசம் பேசி சந்தோஷம் அடைவீர்கள்.

## ஐந்தாம் தர மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள்

யாழ்ப்பாணம், மே14

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம்-5 மாணவர்களுக்கு நடத்தப்படுகின்ற பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்களை வலயக் கல்விப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாமென ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தம்பையா ஸ்ரீஸ்கந்தராசா அறிவித்துள்ளார்.

இப்பாடசாலைகளில் பயிற்சிப் பரீட்சைகள் வாரந்தோறும் வழமைபோல நடைபெற்று வருவதாகவும் அதேவேளை வலய நிலை வினாத்தாளின் ஐந்தாம் தொடர் இன்று வெள்ளிக்கிழமையும் மாகாண மட்டப் பரீட்சையின் இரண்டாம் தொடர் 22ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(50-16)

## விளையாட்டு மின்னொளியில்; பிரதேச மக்கள் காரிருளில்

யாழ்ப்பாணம், மே 14

மின்னொளியில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு சட்ட விரோதமாக மின்சாரம் பெற்றதில் ஒரு பிரதேசத்துக்கான மின் விநியோகமே தடைப்பட்ட சம்பவம் ஒன்று தென்மராட்சியில் நடந்துள்ளது.

மூன்று தினங்களாக இரவுவேளையில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு ஆயிரம் வாட்ஸ் வலுவுள்ள ஒளிபாய்ச்சும் வலுவுள்ள விளக்குகள் பொருத்தப்பட்டு சட்ட விரோதமாக மின்சாரம் பெறப்பட்டுள்ளது. இதன்போது அருகிலுள்ள பிரதேசத்துக்கான மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுவிட்டது.

மின் தடைப்பட்டமைக்கான காரணத்தைப் பார்வையிடச் சென்ற இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரிக் கிளையினர் விளையாட்டுப் போட்டிக்கு சட்ட விரோதமாக மின்சாரம் பெறப்பட்டதை அவதானித்து அங்கு பொருத்தப்பட்டிருந்த ஆயிரம் வாட்ஸ் வலுவுள்ள ஆறு ஒளிபாய்ச்சும் விளக்குகள் உட்பட மின்சார உபகரணங்கள் பலவற்றைக் கைப்பற்றினர்.

பொதுமக்களுக்கு முன் உதாரணமாக திகழ வேண்டிய ஒரு சனசமூக நிலையத்தினர் இவ்வாறு சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட்டமை குறித்து மக்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

(04-207)

## பொதுக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், மே14

யாழ்.மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.கல்வி வலயப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

(204)

* * *

யாழ்ப்பாணம், மே 14

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி செ. சுந்தரேசன் தலைமையில்


## பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
07 . 12 . 1926



ஆண்டவன் அடியில்
14 . 05 . 1997

### திருமதி புவனேஸ்வரி அரியதுரை

ஆண்டுகள் பதின்மூன்று அவனியிலே சென்றாலும்
அம்மா உந்தன் அன்புமுகம் மறவோமே!
நீண்டவுயர் மண்ணில் நிறைவோடு வாழவைத்த
நம்முயிர் தெய்வமே! நன்றியோடு நினைவு கொள்கின்றோம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

வேலப்பர் வீதி,
அரியாலை.

(98158)


## சைவ நீதியான சமய வாழ்வு

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவசமயம். இந்த சைவசமயத்தை அநுட்டிப்பவர்கள் நேர்மை, உண்மை, பொறுமை, நீதி, நியாயம், மனச்சாட்சி உடையவர்களாய் இருத்தல்வேண்டும். ''சைவம், சைவம் என்று சொல்லிக் கொண்டு மச்சம், மாமிசம் புசிப்பவர்களாய், பொய் பேசுபவர்களாய், நீதி நியாயம் இல்லாதவர்களாய் உண்மையான அன்பும் பக்தியும் அற்றவர்களாய் வாழ்வது அர்த்தமே இல்லை. மனிதன் உண்மையில் மனிதப் பண்புள்ள, மனித நேயமுள்ள, நேர்மையான, நீதியான மனிதனாக வாழவேண்டும் அதுதான் சைவ நீதி.

பொய், களவு, கொலை, மது அருந்தல், பிறர் மனைவிரும்பல், புறம் கூறல், பிறர் பொருளுக்கு ஆசைப்படல், பொறாமைப்படுதல் முதலியன முற்றாக விலகப்படுதல் வேண்டும்.

வாழ்க்கையில் அன்புதான் இன்ப ஊற்று; அன்புதான் உலக மகாசக்தி; இதனை மனதில் கொண்டு பிற ஜீவராசிகளிடமும் இன பந்துக்களிடமும், பொதுவாக எல்லோரிடமும், அன்பு காட்டி இரக்க சுபாவத்துடன் நல்லுள்ளங்கொண்ட மானிடராக வாழவேண்டும்.

### ஞானக்கதிர்

''அன்பே சிவம்'' என்ற தாரக மந்திரத்தை முழு மன துடன் ஏற்று, உண்மை, அன்பு காட்டி உழைக்க வேண்டும். நேர்மையாகச் சம்பாதித்து, நியாயமான முறையில் நிம்மதியான வாழ்வை நாங்கள் வாழ்வதற்கு நாமே தயார்படுத்திக் கொள்ளல் இன்றியமையாததாகும். சைவ நாயன்மார்கள் வாழ்ந்து காட்டிய நேரிய, சீரிய உண்மையான பாதையில் நமது வாழ்க்கை வண்டியை ஓட்டவேண்டும். சத்தியமே லட்சியமாய்க் கொண்டு சைவநீதி பரிணமிக்கும் முறையைக் கொஞ்சமும் நியாயம் குன்றாதவகையில் நாம் வாழ்வதற்கு உறுதி பூணவேண்டும். எவ்வளவுதான் துன்ப, துயரங்கள் வந்தாலும் எவ்வளவுதான் கஷ்ட, நஷ்டம் வந்தாலும் சைவநீதி வழுவாத உண்மை வாழ்க்கைக்கு நாம் கட்டுப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிந்தியத் திருச்சபையின் சாவகச்சேரி தேவாலயம்



(சென்றவாரத் தொடர்ச்சி)

சாவகச்சேரி திருச்சபையுடன் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி இணைந்திருந்ததால் அதன் வைரவிழா 1950ஆம் ஆண்டு ஜூன் 6ஆம்,7ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது.

1952ஆம் ஆண்டு ஒகஸ்ட் 17ஆம் திகதி திருப்பத்தூர் ஆச்சிரமத்தின் ஸ்தாபகரும் கிறிஸ்தவ கவிஞருமாகிய பெரியண்ணன் சவரிராஜன் ஏகதாசன் இவ் ஆலயத்தில் பிரசங்கம் செய்தார். 1952 செப்ரெம்பர் 29ஆம் திகதி தென்னிந்தியத் திருச்சபையின் தலைமைப் பேராயரும் சென்னைத் திருமண்டலத்தின் பேராயருமாகிய அதி வந்தனைக்குரிய மைக்கல் ஹொலிஸ் பிரசங்கம் செய்தார்.

1953 செப்ரெம்பர் 27ஆம் திகதி அமெரிக்க போட்சங்க உபதலைவர் டாக்டர் எம்.எஸ்.கீத் ஆலயத்திற்கு வருகை தந்து விசேட ஆராதனையினை நடத்தினார். 1956 மார்ச் 20ஆம் திகதி இந்தியாவிலிருந்து வருகை தந்த சந்நியாகினி பொன்னம்மா ஆலயத்தில் அருளுரையாற்றி சபையோர் பக்திநெறியில் நாட்டம் கொள்ளச் செய்தார்.

1958ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக் கலவரத்தின்போது கொழும்பில் தங்கியிருந்த பெருமளவு கிறிஸ்தவர்கள் சாவகச்சேரியில் குடியேறினர்.

1961ஆம் ஆண்டு பாடசாலைகள் அரசுடமையாக்கப்பட்ட வேளையில் திருச்சபையுடன் இணைந்திருந்த சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, மந்துவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலை, மீசாலை அமெரிக்கன் மிஷன் பாடசாலை ஆகியவையும் அரசினால் பொறுப்பேற்கப்பட்டன.

1976ஆம் ஆண்டு பொ.ஞானசிலன் என்பவர் தனது தந்தையின் நினைவாக ஆலயத்தின் மேற்குப் புறத்தில் மதில் அமைத்துக் கொடுத்தார் 1980 மே 20ஆம் திகதி ஜே.வி.ஹன்ட் என்பவரால் பெண்களுக்கான தொழிற்பயிற்சி நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1993 நவம்பர் 11 ஆம் திகதி இடம்பெற்ற விமானக்குண்டு வீச்சுத் தாக்குதலில் ஆலயக் குருமனை ஆகியவை சேதமடைந்தது. ஆலய குருவின் மனைவியும் இதில் படுகாயமடைந்து மரணமானார் இச்சம்பவத்தில் 10 பொதுமக்களும் பலியாகினர் மீண்டும் 1994ஆம் ஆண்டு ஆலயம் புனரமைக்கப்பட்டு 1994 மே 13ஆம் திகதி பேராயர் எஸ்.ஜெபநேசன். டி.ஜே.அம்பலவாணர் ஆகியோரினால் ஆலயம் மறு பிரதிஸ்டை செய்யப்பட்டது. ஆலயத்தின் பாலர் பாடசாலையும் தொழிற்பயிற்சி நிலையமும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. 1995ஆம் ஆண்டு வலிகாமம் பகுதி மக்கள் இடம் பெயர்ந்து பெருமளவு மக்கள் ஆலய சுற்றாடலில் தங்கியிருந்தனர்.

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின்போது ஆலயம் பாரிய சேதங்களுக்கு இலக்கானது. 2002ஆம் ஆண்டு மக்கள் மீளக் குடியேறியபோது ஆலய அங்கத்தவர்கள் பலரின் குடியிருப்புகள் பல முற்றாகச் சேதமடைந்ததால் பலர் வேறு இடங்களில் தஞ்சம் புகுந்தனர். அப்போதைய போதகர் ரி.எச்.வசந்தகுமாரின் முயற்சியினால் தேவாலயம் புனரமைக்கப்பட்ட போதிலும் அங்கத்தவர்கள் குறைந்த அளவிலேயே உள்ள நிலையில் தொடர்ந்தும் இயங்கி வருகிறது.

1950 தொடக்கம் 2010 வரை இவ் ஆலயத்தில் ஏ.சி.தம்பிராசா, ஜீ.எம்.கனகரத்தினம், எஸ்.மேசியாதாஸ் எஸ்.ரி.ஆசீர் வாதம், ஜே.ஜே.இரத்தினராசா, என்.சுப்பிரமணியம், எல்.என்.ஹிச்கொக், ஜே.எஸ்.ஜெயசிங்கம் என்.டபிள்யு.ஜீ.சுகுணராசா, ஏ.கி.மதனராசா, எஸ்.சி.ஆர்னல்ட், சாம்.தம்பு, வி.ராஜ்குமார், எஸ்.பி.ஜெயசிங்கம், ஏ.வி.யேசுதாசன், ஏ.என்.லோரன்ஸ், பொ.றெ.நவேந்திர அனுகூலன், ரி.எச்.வசந்தகுமார், கே.ஜே.டபிள்யு.தேவசகாயம் ஆகியோர் குருமார்களாக ஊழியம் செய்துள்ளனர்.

(முற்றும்)

# கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்






ஒரு பாடசாலை வளர்ச்சிக்கு அங்கு பணியாற்றும் அதிபர்களின் அளப்பரிய சேவையும் அதன் முன்னேற்றத்துக்கு வழிகோலும் என்பதற்கு உதாரணமாகத் திகழும் பாடசாலையான கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் அதன் கல்வி மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளால் தென்மராட்சிப் பிரதேசத்தில் வளம் நிறைந்த பாடசாலையாக உள்ளமை பாராட்டத்தக்கது.

கிறிஸ்தவ மிஷனரியினர் தமது மதப் பிரசாரத்துடன் கல்வியினை மக்கள் மத்தியில் பரப்பி வந்த காலத்தில் 1925 ஆம் ஆண்டு கொடிகாமம் வாழ் சைவக் கல்விமான்கள் திருநாவுக்கரசு மடாலயம் என்னும் பெயரில் திண்ணைக் கல்வியினை ஆரம்பித்து நடத்தி வந்தனர். திண்ணைக்கல்வி கற்கப் பெருமளவு மாணவர்கள் தொகை அதிகரித்ததையடுத்து 1928ஆம் ஆண்டு சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினர் மடாலயத்தின் ஸ்தாபகரான வே.அருணாசலம் அவர்களிடமிருந்து பொறுப்பெடுத்துப் பாடசாலையாக மாற்றியது.

பாடசாலையின் முதல் அதிபராக கடமையாற்றும் பேறு ஐ.முருகேசு அவர்களுக்குக் கிடைத்தது. திருநாவுக்கரசு வித்தியாலயம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டபோது ஏறக்குறைய 200 மாணவர்கள் இணைந்து கொண்டனர். இவரையடுத்து ஏ.எஸ்.வேலுப்பிள்ளை, எஸ்.பொன்னையா, கந்தையா முருகேசு ஆகியோர் ஆரம்ப காலத்தில் பாடசாலையின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றினர்.

1968ஆம் ஆண்டு இப்பகுதியைச் சேர்ந்த இசைப்புலவர் சி.செல்லத்துரை வித்தியாலய அதிபரானார். இவர் தனது சேவைக்காலப் பகுதியில் அப்பகுதி மக்களுடன் இணைந்து வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காகப் பல முன்னோடித் திட்டங்களைச் செயற்படுத்தினார்.

இவரின் பின்னர் 1971ஆம் ஆண்டு மக்களின் மதிப்பினைப் பெற்ற பொன்.கந்தையினார் வித்தியாலய அதிபராகப் பொறுப்பேற்றார். இவருக்குத் துணை அதிபர் வ.கனகலிங்கம் ஆசிரியர் க.இராசதுரை ஆகியோர் வித்தியாலய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தனர். இக் காலத்தில் வித்தியாலயத்தில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. பாடசாலையை உயர்த்தும் பொருட்டு வீடு வீடாக பிரசாரம் செய்தவர் ஆசிரியர் க.இராசதுரையாகும். இவரை வித்தியாலய கல்விச் சமூகம் பிள்ளை பிடி வாத்தியார் என்றும் பட்டப் பெயர் வைத்து அழைத்தமை அவரின் சேவையை நன்கு உணரக் கூடியதாக உள்ளது.

ஓலைக் கொட்டகைகளில் இயங்கிய வித்தியாலயத்தில் பொன்.கந்தையா அதிபராக இருந்த காலத்தில் கட்டடங்கள் உருவாக்கப்பட்டு க.பொ.த. சாதாரணதர வகுப்பு வரை பாடங்கள் போதிக்கப்பட்டன. அத்துடன் பெற்றோர், இளைஞர், நலன்விரும்பிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் வித்தியாலயத்திற்கென விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டது. மேலும் கொடிகாமம் திருநாவுக்கரசு நாயனார் மடாலய சபையினரையும் வித்தியாலய அபிவிருத்திச் சபையுடன் இணைத்து செயற்பட்ட பெருமை பொன்.கந்தையாவையே சாரும்.

1976ஆம் ஆண்டு அதிபராகப் பொறுப்பேற்ற கந்தையா பேரம்பலம் அதிபர் பொன்.கந்தையினார் வழியில் செயற்பட்டு அவரால் உருவாக்கப்பட்ட செயற்றிட்டங்களை நிறைவேற்றினார். இவரது காலத்தில் மேலும் 120' X 20' மண்டபம், 50' X 25' மாடிக் கட்டடம் கச்சாய் வீதிக்கு கிழக்கே உள்ள 110' X 20' மண்டபம் ஆகியவை நிர்மாணிக்கப்பட்டன. கட்டடங்களின் வளர்ச்சி க.பொ.த. உயர்தர வகுப்புகள் 1980ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன.

1982ஆம் ஆண்டு கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம் மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டது. அத்துடன் இக் காலப்பகுதியில் கொடிகாமம் (நாவலடி) அரசினர் வித்தியாலயம் மகா வித்தியாலய நிர்வாகத்தின் கீழ் இணைக்கப்பட்டது. பின்னர் 1987ஆம் ஆண்டு தனித்தனியாக பிரிந்து செயற்பட்டன.

(தொடரும்)

## தென்மராட்சி வலம்

தொகுப்பு: ஜயந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வெளியீடு: உதயன்-கல்விச்சுடர்**

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்தும் முன்னோடிப் பரீட்சை - 07

## வினாத்தாள் - II

நேரம் : 1 மணி 15 நிமிடங்கள்

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை தருக.**

01. பின்வரும் பாடலை தெளிவாக வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக் குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

அறிவியல் தந்த அருங்கொடையாய்
அனைவர் கையிலும் செல்பேசி
அவசர உலகம் ஆகையால்
அவசியம் ஆனது செல்பேசி.

அடுத்தவர்க்கு இடராய் இல்லாது - வரும்
அழைப்புக்கள் தனையும் ஏற்றிடுவாய்
அவசியம் அற்ற அழைப்புக்களை
பயணம்போது தவிர்த்திடுவாய்.

1) பாடலில் விவரிக்கப்படும் பொருள் எது?

..........................................................................

2) பிரித்து எழுதுக.
   1. அறிவியல் - ..........................................
   2. தவிர்த்திடுவாய் - ..........................................

3) "அடுத்தவர்க்கு இடராய் இல்லாது'' என்பதன் மூலம் நீர் விளங்குவது யாது?

..........................................................................

4) அழைப்புக்களை தனையும் ஏற்றிடுவாய் எனும் வாக்கியத்திற்கு பொருத் தமான எழுவாய் எது?

..........................................................................

5) பின்வரும் சொற்களுக்கான ஒத்த சொற்களை பாடலில் இருந்து தெரிவு செய்து எழுதுக.
   1. கரத்தினில் - ..........................................
   2. ஈகை - ..........................................
   3. துன்பம் - ..........................................

6) பாடலில் உள்ள சினைப்பெயர் எது?

..........................................................................

02. சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.
பயிற்சி/ சித்தி/ முக்கியமானதாகும்/ மிக/ பரீட்சையில்/ அடைவதற்கு

..........................................................................

03. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.
   1) குற்றவாளிகளைத் தடுத்துவைத்திருக்கும் இடம் ..........................................
   2) திருமணம்செய்து மனைவியை இழந்தவன் ..........................................

04. ல, ள, ழ போன்ற எழுத்துக்களைப் பொருத்தமான இடங்களில் இடுக.
   1) ப ........... ங்கள் 2) நூ ........... கம்
   3) வ ........... ம்

05. இணைமொழியின் ஒரு பகுதி தரப்படுகிறது. மற்றைய பகுதிக்கு பொருத்த மான சொல்லை இடுக.
   1) திருமண வைபவத்திற்கு உற்றார் .................................. எல்லோரும் வந்தனர்.
   2) மாமரம் ............................. பிஞ்சுமாகக் காட்சியளித்தது.

06. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத் துக்களில் தருக.
   1) நிலா ..........................................
   2) தொலைபேசி ..........................................
   3) படம் ..........................................

07. பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் எவ்வாறு கூறப்படும் என்பதைத் தமிழில் தருக.
   1) சூரியன் உதிக்கிறது ..........................................
   2) நல்லது செய் ..........................................

* 8-35 வரையான வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

08. கிளை அற்ற ஆணி வேர் கொண்ட தாவரம்,
   1) பலா. 2) கமுகு. 3) வாழை. 4) பப்பாசி.

09. தாவரம் என்ற வகைக்குள் தத்துக்களை உடையது,
   1) செடிகள். 2) பூண்டுகள். 3) மரங்கள். 4) கொடிகள்.

10. பின்வருவனவற்றுள் மிகவும் பலமுடைய பறவை எனக் கொள்ளக்கூடியது,
   1) காகம். 2) கமுகு. 3) பருந்து. 4) கிவி.

11. பயிர்களை பூச்சிகள் தாக்காமல் இருக்கு விவசாயிகள் ஊடு பயிராக நாட்டுவது,
   1) செம்பரத்தை. 2) செவ்வந்தி.
   3) ரோஜா. 4) நித்திய கல்யாணி.

12. பாமர மக்களுக்கு தகவல் தெரிவிக்க பொருத்தமான ஊடகம்,
   1) பத்திரிகை. 2) துண்டுப்பிரசுரம்.
   3) வானொலி. 4) இணையம்.

13. மகாவலி கங்கை கடலுடன் கலக்கும் மாகாணம்,
   1) கிழக்கு மாகாணம். 2) வட மாகாணம்.
   4) மத்திய மாகாணம். 4) ஊவா மாகாணம்.

14. பௌத்த மதகுரு,
   1) அந்தணா. 2) மௌலவி. 3) பிக்கு. 4) அருட்தந்தை.

15. மின்சாரக் கம்பங்கள் உயரமாக இருப்பதற்கான காரணம்,
   1) பறவைகள் உட்காா்வதற்கு.
   2) மின்சாரம் ஆபத்தானதால்.
   3) மின்சாரம் உயரத்திலேயே செல்லும் என்பதால்.
   4) கொடிகள் பற்றி வளர்வதற்கு.

16. இ.போ.ச வண்டிகளில் பயணம் செய்யும்போது நாம் பின்பற்ற வேண்டிய நடைமுறை,
   1) முன் வாசலால் ஏறி பின் வாசலால் இறங்க வேண்டும்.
   2) பின் வாசலால் ஏறி முன் வாசலால் இறங்க வேண்டும்.
   3) பின் வாசலால் ஏறி பின் வாசலால் இறங்க வேண்டும்.
   4) முன் வாசலால் ஏறி முன் வசலால் இறங்க வேண்டும்.

17. உலோகங்களில் மிகப் பெறுமதியானது,
   1) வெள்ளி. 2) தங்கம். 3) இரும்பு. 4) பித்தளை.

18. ஆடற்சேவல் பயன்படும் விளையாட்டு,
   1) கரப்பந்தாட்டம். 2) கிரிக்கெட்.
   3) பட்மின்ரன். 4) சதுரங்கம்.

19. மஞ்சள், சிவப்பு, நீலம் ஆகிய நிறங்களைக் கலப்பதன் மூலம் பெறப்படும் நிறம்,
   1) கபிலம். 2) ஊதா.
   3) செம்மஞ்சள். 4) பச்சை.

20. எமது நாட்டின் தேசிய அடையளமாக கொள்ளக்கூடியது,
   1) தேசிய கீதம். 2) தேசியக்கொடி.
   3) தேசிய இலட்சணை. 4) மேற்கூறிய மூன்றும்

21. PHI எனும் சொல்லுடன் நெருங்கிய தொடர்புடைய துறை,
   1) கல்வி. 2) போக்குவரத்து.
   3) சுகாதாரம். 4) வீதி அபிவிருத்தி.

22. மின்னேரியாக் குளத்தை கட்டுவித்த மன்னன்,
   1) மகாசேனன். 2) தாதுசேனன்.
   3) தேவநம்பிய தீஸன். 4) பராக்கிரமபாகு.

23. நம்புட்டான் பழம் அதிகம் விளையும் இடம்,
   1) வட்டவலை. 2) மறிச்சுகட்டி. 3) மல்வானை. 4) கன்னியாய்.

24. பூவில் காயாக மாறும் பகுதி,
   1) சூலகம். 2) அல்லி. 3) மகரந்தமணி. 4) புல்லி.



25. வீதிச் சமிக்ஞை ஒன்றில் நடுவில் காணப்படும் நிறம்,
   1) பச்சை. 2) மஞ்சள். 3) சிவப்பு. 4) நீலம்.

26. எமது நாட்டின் தேசியக் கொடியில் உள்ள நிறங்களின் எண்ணிக்கை,
   1) 3 2) 4 3) 5 4) 6

27. பின்வரும் வீதிக் குறியீடு உணர்த்துவது,



   1) முன்னால் நிறுத்தவும்.
   2) முன்னால் வழிவிடவும்.
   3) பின்னால் வழிவிடவும்.
   4) பின்னால் நிறுத்தவும்.

28. இலங்கையின் வானிலை ஆராய்ச்சி தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்,
   1) அனுராதபுரம். 2) பௌத்தலோக மாவத்தை.
   3) திண்ண வேலி. 4) மகரகம்.

29. இலங்கையின் மாகாண நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர்,
   1) ஜனாதிபதி. 2) ஆளுநர்.
   3) கிராம சேவையாளர். 4) அமைச்சர்.

30. சீனி, மாப்பொருள் உணவுகளை அதிகம் உண்பதால் ஏற்படும் நோய்,
   1) இரத்த அழுத்தம். 2) மரஸ்மஸ்.
   3) நீரிழிவு நோய். 4) குடற்புண்.

31. மாணவர்க்கு இலவச சீருடை வழங்கும் நிறுவனம்,
   1) கல்வி உயர் கல்வி அமைச்சு.
   2) கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.
   3) தேசிய கல்வி நிறுவகம்.
   4) பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

32. பின்வரும் சேவைகளுள் எந்தச் சேவையைத் தனியாரிடம் இருந்து பெற முடியாது?
   1) வங்கிச் சேவை.
   2) தேசிய அடையாள அட்டை பெறல்.
   3) போக்குவரத்துச் சேவை. 4) முத்திரை பெறுதல்.

33. வெற்றிலைக்கொடியை ஒத்த அமைப்புடைய கொடி,
   1) முடக்கொத்தான். 2) பாகல்.
   3) மிளகு. 4) புடோல்.

(13ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. சுனாமி பேரலை தாக்கத்தை ஏற்படுத்தாத மாவட்டம்,
1) யாழ்ப்பாணம். 2) திருகோணமலை.
3) வவுனியா. 4) கொழும்பு.

35. சூழலுக்கு தீங்கு ஏற்படுத்தாத போக்குவரத்துச் சாதனம்,
1) மாட்டு வண்டி. 2) கார்.
3) ஆட்டோ. 4) துவிச்சக்கர வண்டி.

* புதுவருடத்திற்கு விளையாடும் விளையாட்டுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றின் பெயர்களைச் சரியான முறையில் புள்ளிக்கோட்டில் எழுதுக.

| | |
|---|---|
| படகு ஓட்டம் | வழுக்கு மரம் ஏறுதல் |
| தலையணை அடி | மாட்டுவண்டிச் சவாரி |
| ரபான் அடித்தல் | முட்டி உடைத்தல் |

36.

______

37.

______

38.

______

39.

______

40.

______

41.

______

42. இவ்வுருவில் 1/2 பங்கு நிழற்குவதற்கு நிறந்தீட்டப்பட்ட உருவைப்போன்று இன்னும் எத்தனை உருக்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?



(..................................)

43. இலங்கையில் அண்மையில் வெளியிடப்பட்ட தாள்களின் பெறுமதி யாது?

(..................................)

44. 39 மாபிள்களை 4 மாணவர்களிடையே ஒருவருக்கு 9 மாபிள்கள் வீதம் பகிரப் பட்டால் எஞ்சும் மாபிள்களின் எண்ணிக்கை யாது?

(..................................)

45. மாணவன் ஒருவன் சேகரித்த முத்திரைகள் தொடர்பான தகவல் பின்வருமா:-
திங்கள் - 100 முத்திரைகள் செவ்வாய் - 200 முத்திரைகள்
புதன் - 400 முத்திரைகள் வெள்ளி - 1100 முத்திரைகள்
இதன்படி வியாழக்கிமை சேகரித்த முத்திரையின் அளவு யாது?

(..................................)


46. ஒரு பஸ்ஸில் 55 பேர் பிரயாணம் செய்யமுடியுமெனின் 250 பேர் ஒரே தடவையில் பயணம் செய்ய எத்தனை பஸ்கள் தேவை?

(..................................)

47. 3m நீளமான கம்பியில் இருந்து 60cm நீளமான எத்தனை கம்பித்துண்டுகளை வெட்டலாம்?


(..................................)

48. இவ்வுருவில் எத்தனை முக்கோணிகள் உண்டு?



(..................................)

49. சமபக்க முக்கோணி அமைப்புடைய இக் காணியின் சுற்றளவு யாது?




(..................................)


50. 750g சீனி 45.00 ரூபா எனின், 120.00 ரூபாவுக்கு எத்தனை g சீனி வாங்கலாம்?

(..................................)

51. 24 பிஸ்கட்டுக்களில் 3/8 பங்கை தேவி தான் எடுத்துக்கொண்டு மீதியை தம்பியிடம் கொடுத்தாள். எனின், தம்பிக்கு கொடுத்த பிஸ்கட்டுக்களின் எண்ணிக்கை யாது?

(..................................)

52. A பாத்திரம் மூலம் எத்தனை தடவை ஊற்றினால் B பாத்திரம் நிரம்பும்?




(..................................)

53. கரனிடம் 200 ரூபாவும் நிமலிடம் 800 ரூபாவும் உண்டு. நிமல் எவ்வளவு பணத்தை கரனுக்கு கொடுத்தால் இருவரிடமும் உள்ள பணத்தின் அளவு சமனாகும்?

(..................................)

54. இன்று வீதிகளில் வாகன விபத்து நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதனால் உயிரழப்புகளும், காயப்படுவோர் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. எனவே, வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு சாரதிகளும், பாதசாரிகளும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆறு வாக்கியம் எழுதுக. ஒன்றில் குறைந்தது ஐந்து சொற்களேனும் இடம்பெறுவதோடு இலக்கண ரீதியான தொடர்பும் சரியாக இருக்க வேண்டும்.

(நிறைவுற்றது)

## விடைகள்: முன்னோடிப் பரீட்சை இல.07, வினாத்தாள் I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01-2 | 02-4 | 03-3 | 04-3 | 05-2 | 06-3 | 07-3 | 08-2 | 09-2 | 10-3 |
| 11-2 | 12-2 | 13-2 | 14-3 | 15-3 | 16-3 | 17-3 | 18-1 | 19-4 | 20-2 |
| 21-2 | 22-1 | 23-1 | 24-1 | 25-2 | 26-3 | 27-2 | 28-1 | 29-3 | 30-3 |
| 31-2 | 32-2 | 33-4 | 34-3 | 35-1 | 36-2 | | | | |


37-யானை முயலை உண்பதில்லை.
38-வெளவால் முட்டை இடுவதில்லை. 39-3 40-4

நன்றிக்கும் பாராட்டுக்கும் உரிய ஆசிரியர்:
G.சுகந்தன், யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர்.
தொ.பே.இலக்கம்: 077-6054626

கல்விச்சுடர் சம்பந்தமான விமர்சனங்களுக்கும் தொடர்புகளுக்கும்....
உதயன் பணிமனை, இல.365, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 071-8724054/071-4273035

# கல்விச்சாலைக் காட்சிகள்......





உடுவில் மான்ஸ் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் உடுவில் கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.குபேரநாதன் மங்கள விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கொமர்ஷல் வங்கியின் யாழ்.நகரக்கிளை முகாமையாளர் எஸ்.இரவீந்திரா உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் - எஸ்.கதிரவேலு)





மானிப்பாய் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.நடராசா, அவரது பாரியார், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியை திருமதி. ஜி.சிவராசசுந்தரம், கல்லூரி அதிபர் திருமதி எஸ்.ஜெயவீரசிங்கம் ஆகியோர் பாண்ட வாத்திய சகிதம் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும்,

பிரதம விருந்தினர் மங்கள விளக்கேற்றுவதையும் தரம் ஒன்று மாணவர்களின் வினோதவுடைக் காட்சியை யும் இறுதி இரண்டு படங்களில் காணலாம்.

(படங்கள் - நவாலிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகளுடன்

முதலாம் ஆண்டு | 611ஆம்நாள்





**பண்டாரம் கைலாயம்** | **சிவராமலிங்கம் நந்தாஜினி**

*நிம்மதி இழந்து தவிக்கின்றோம் அம்மா*
*உன் நினைவுகள் என்றும் கனலாகுதம்மா*
*சுமந்த அம்மா வேதனைப்பட வளர்த்த தந்தை கண்ணீர் சிந்த*
*கூடிக் குலாவிய அண்ணன், தங்கை நந்தா எங்கே எனஏங்கி இடிவிழ*
*உறவினர் நண்பிகள் எங்கள் நட்பு எங்கே சென்று விட்டாய் என தடுமாற*
*அரக்கர் வடிவில் வந்தவன் நந்தா என்னும் அகல் விளக்கை அணைத்து விட்டானே*
*தனித்து விட்டான் எமது செல்வம் என ஏங்கியே பரிதவிக்க-அப்பாச்சி*
*என்னுடன் உதவிக்கு வா என அழைத்து விட்டாய் அம்மா.......*

ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

இவர்களுடைய நினைவஞ்சலி நிகழ்வுகள் இன்று (14.05.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அன்றைய தினம் நடைபெறும் அமரர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கைதடி வடக்கு,
கைதடி. **குடும்பத்தினர்.**

## பெருந்திருவிழா

மாதகல், அரசடி சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் காலை 7 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

# நெஞ்சை நெருடிய ஈராண்டு நினைவில்...



செல்வன்
**சண்முகநாதன் சஞ்சீவன்**

துளிராய்
14★02★1986

விதையாய்
14★05★2008

**அறிவுசால் மைந்தனாய் அவனியில் நின்றவனே!**
**கல்வியில் கரைகண்டு காவியம் படைக்கும் முன்னே!**
**கண்ணிமைக்கும் நேரத்துள் காலன்தான் அழைத்ததேனோ?**
**ஆண்டிரண்டு ஓடினாலும் ஆறாது நம்துயரம்**
**நாம் வாழும் காலங்கள் வரை நின் நினைவுகள்**
**என்றும் எமை விட்டகலா மைந்தனே!**

என்றும் உங்கள்
நினைவுடன்:

த.மு:-முருகன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

நி.மு:-66/2, திருவையாறு,
கிளிநொச்சி.

அம்மா, அப்பா, சகோதரர்கள்.

(98070)

# தொழில் திணைக்களத்தின் இரு நாள் நடமாடும் சேவை

**காலம் : 21-05-2010, 22-05-2010**

**இடம் : யாழ். மாவட்ட தொழில் அலுவலகம், வீரசிங்கம் கட்டடம், யாழ்ப்பாணம்.**

**ஊழியர் சேமலாபநிதி அங்கத்தவர்களே!**

ஊழியர் சேமலாப நிதியினை மீளப்பெற்றுக்கொள்வதற்காக (Kபடிவம், Lபடிவம்) 2010-03-01இற்கு முன் விண்ணப்பித்து இதுவரை பணம் கிடைக்கப் பெறாதவர்கள் யாழ்ப்பாணம் மாவட்டத் தொழில் அலுவலகத்தில் 21-05-2010, 22-05-2010 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நடமாடும் சேவையில் பங்குபற்றித் தீர்வினைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த நடமாடும் சேவையில் ஊழியர் சேமலாப நிதி சம்பந்தப்பட்ட ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலதிக விவரங்களுக்கு மாவட்டத் தொழில் அலுவலகத்துடன் நேரிலோ அல்லது 021-222-2375 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

W.J.L.U. விஜயவீர,
தொழில் ஆணையாளர் நாயகம்,
தொழில் திணைக்களம்,
கொழும்பு-5.

(சி/567594)

# ஊழியர் சேமலாப நிதி சம்பந்தமான மத்திய வங்கியின் மாபெரும் நடமாடும் சேவை

**காலம் : 19-05-2010, 20-05-2010**

**இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்.**

**ஊழியர் சேமலாபநிதி அங்கத்தவர்களே!**
**மத்திய வங்கியின் பதிவேடுகளில்**

- உங்களதுபெயர், அடையாள அட்டை இலக்கம் வேறுபடுகிறதா?
- ஊழியர் சேமலாப நிதி அங்கத்துவ இலக்கத்தில் வேறுபாடு உண்டா?
- உங்களுக்காகப் போலி இலக்கம் (Dummy No) மத்திய வங்கியில் பராமரிக்கப் படுகின்றதா?
- ஊழியர் சேமலாப நிதியில் வீட்டுக் கடன் பெற்று கடனை அடைத்த பின்னரும் கணக்குக் கூற்றில் கடன் இலக்கம் குறிப்பிடப்படுகின்றதா?
- மத்திய வங்கியுடன் ஊழியர் சேமலாப நிதி சம்பந்தமாக எதிர்நோக்கும் எப்பிரச்சினைகளுக்கும் நடமாடும் சேவையில் கலந்துகொள்வதன் மூலம் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- மேலதிக விவரங்களுக்கு மாவட்டத் தொழில் அலுவலகத்துடன் நேரிலோ அல்லது 021-222-2375 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

ஊழியர் சேமலாப நிதிப்பிரிவு,
இலங்கை மத்திய வங்கி,
மற்றும் மாவட்டத் தொழில் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/567595)


# இணையத்துறையில் வல்லுநராகுங்கள்
## Diploma in Web Development

**குறுகிய காலத்தில் சிறந்த வேலைவாய்ப்பை ஏற்படுத்தவல்ல தொழிற்கல்வி**

ஒரு வருட கால பயிற்சிக்காலத்தைக்கொண்ட இக்கற்கை நெறியானது 900 மணித்தியால செய்முறைப்பயிற்சியுடன் கூடிய கல்விப் போதனைகளை கொண்டதாகும்.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**28.05.2010**

இணையத்துறையில் உள்நாட்டு ,வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை தட்டிச்செல்வதற்கான ஓர் அரிய வாய்ப்பு

மேலதிக விபரங்களுக்கு
021 4900900



**IIS CITY CAMPUS**
200 Sivan Pannai Road,Jaffna
T.P :-021 222 8060 Fax:-021 222 6933
Web :-iis.edu.lk Email:-iiscc@sltnet.lk

## தவறிவிட்டன

உடுவில் கிழக்கு, சுன்னாகம் எனும் முகவரியுடைய, மாணிக்கம் வரதராஜன் என்பவரின் தே.அ.அ (553112613V யும் சாரதி அனுமதி அ.உம் (DI.403607), மோ.ஊர்தி காப்புறுதி 86 சிறீ.5564 இலக்க 2010க்கான சான்றிதழும் கே.கே.எஸ்.வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

மா.வரதராஜன்,
8/3, தொம்பை வீதி, உடுவில் கிழக்கு,
சுன்னாகம். தொ.பே: 0212240040

## தவறிவிட்டது

புனித யூதா வீதி, பலாலி என்னும் முகவரியைச் சேர்ந்த யோசெப் பீற்றர் மெக்கின் லீ என்பவருடைய தேசிய அடையாள அட்டை (820712366V) தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவயில் ஒப்படைக்கவும்.

105, கோல்டன் ஸ்ரார், தையல் நிலையம்,
ஆடியபாதம் வீதி, கொக்குவில், திருநெல்வேலி. தொ.பே: 0774445754

## யாழ் - கொழும்பு வான் சேவை

யாழ் - கொழும்பு - Air Port மற்றும் விசேட வைபவங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.
ஒருவருக்கான கட்டணம் 1,000/- மட்டும்.
T.P. No : 0777199319 / 0777199352 / 0779770027

## German Language

**German Swiss**
மொழி வகுப்புகள் தமிழ்மொழி பெயர்ப்புடன்
தொடர்பு :- 10, Palaly Road, Jaffna. T.P. - 0771604823

*உங்கள் அழகிய இல்லங்களுக்குரிய பெயர், முகவரி, இலக்கங்களை சாஸ்திர முறைப்படி எச்சிங், எங்கிறேவிங், எம்போசிங், ஸ்கிறீன் முறைகளில் பிளாஸ்ரிக், பித்தளை, சில்வர் மாபிள்களில் நவீன முறையில் வடிவமைத்துப் பெற்றுக்கொள்ள யாழ்.நகரில்*

**S.S.யசோதரன் ஆட்ஸ்**
381u, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0217903020


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குரிமை தவிர இந்திய வம்சாவளியினருக்கு இந்த நாட்டில் வேறெதுவுமே கிடைக்கவில்லை

## பேராசிரியர் கலாநிதி எஸ்.ஏ.சந்திரபோஸ் ஆதங்கம்

கண்டி, மே 14

இந்திய வம்சாவளித் தமிழருக்கு 1988 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வாக்களிக்கும் உரிமை கிடைத்தபோதிலும் தோட்டத் துறை சார்ந்த மக்களுக்கு அனர்த்த நிவாரணம் மற்றும் வறுமை நிவாரணங்கள் என எவையுமே கிடைப்பதில்லை. இது வருத்தத்துக்குரிய விடயமாகும் - என இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அரசியல், சமூக விஞ்ஞானத்துறை பேராசிரியர் கலாநிதி எஸ்.ஏ.சந்திரபோஸ் தெரிவித்தார்.

அரசமைப்புச் சீர்திருத்தம் - தேர்தல் முறை மாற்றம் - பிரதேச செயலக எல்லை ஆகியவற்றை மீள் நிர்ணயம் செய்தல் தொடர்பாக ஹற்றன் சீடா வள நிலையத்தில் கடந்த சனிக்கிழமை காலை இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கண்டி மனித அபிவிருத்தித் தாபனத்தின் தலைவர் பி.சிவப்பிரகாசம் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றுவதற்கு முன்னர் கண்டி இராச்சியம், கோட்டை இராச்சியம், யாழ்ப்பாண இராச்சியம் என மூன்று இராச்சியங்கள் அமைந்திருந்தன. அவையனைத்தையும் பிரித்தானியர்கள் ஒற்றையாட்சியின் கீழ் ஒரே குடைக்குள் கொண்டுவந்தனர்.

இலங்கை ஒன்பது மாகாணங்கள், 25 மாவட்டங்கள், 333 பிரதேச செயலகங்கள் எனப் பிரிக்கப்பட்டு அரச நிர்வாகம் கொண்டு செல்லப்படுகின்றது. ஆனால் பெருந்தோட்ட மக்கள் இவற்றுக்கு வாக்களிக்கும் இயந்திரங்களாக இருக்கிறார்களேயன்றி உள்ளூராட்சி அமைப்புகளுக்குள் உள்வாங்கப்படவில்லை.

பெருந்தோட்ட மக்களின் உடலுழைப்பின் மூலம் எவ்வளவு அதிகமான வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியுமோ அவ்வளவையும் ஈட்டிக்கொள்ளும் தோட்டக் கம்பனிகளும், துரைமார்களும் அம்மக்களுக்கான அடையாள அட்டைகளையோ, வறுமை நிவாரணங்களையோ வழங்குவதற்கான வழிவகைகளைச் செய்து கொடுப்பதுமில்லை- சொல்லிக்கொடுப்பதுமில்லை- என்றார்.

பேராசிரியர் எம். எஸ். மூக்கையா, எஸ். விஜேயச்சந்திரன் ஆகியோரும் இங்கு உரையாற்றினர். கலந்துரையாடலில் அரசியல்வாதிகள், கல்விமான்கள், புத்திஜீவிகள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஸி)

## பரீட்சையில் சித்தி

தியத்தலாவை, மே 14

வெலிமடை கல்வி வலயத்திற்குட்பட்ட வெலிமடை முஸ்லிம் மகா வித்தியாலத்திலிருந்து கடந்த ஆண்டு ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய 53 மாணவர்களுள் 39 பேர் சித்தியடைந்து உயர்தரத்திற்குத் தெரிவாகியுள்ளனர் என வித்தியாலய அதிபர் ஜனாப் ஜே. எம். ஜுஃபர் தெரிவித்தார்.

இப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவி சுவீனா தாவூத் 4 ஏ, 4 பி, 1சிமற்றும் நிஸ்ரின் யாக்கூப் 4ஏ, 4பி, பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இத்திரனபுரி அல்-மக்கியா முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து கடந்த வருடம் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 22 பேர் சித்திபெற்றுள்ளனர் எனப் பாடசாலை அதிபர் எம். எஸ். எம். மில்ஹான் கூறினார். (ஸி)

# வீட்டில் தனிமையாக இருந்த பெண் தாக்கப்பட்டு பணம், நகை கொள்ளை

## பட்டப்பகலில் பண்டாரவளையில் சம்பவம்

பதுளை, மே 14

வீட்டில் தனியாக இருந்த பெண்ணைக் கூரிய ஆயுதமொன்றால் தாக்கி அவரிடமிருந்த அலுமாரித் திறப்பைப் பிடுங்கி எடுத்து அலுமாரியைத் திறந்து அறுபதாயிரம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்ற துணிகரச் சம்பவமொன்று பண்டாரவளை கினிகம என்ற இடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பட்டப்பகலில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து பண்டாரவளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறைப்பாட்டையடுத்து, பண்டாரவளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.கே. ரட்ணாயக்க தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

சம்பவத்தின்போது கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்ட பெண் ஆபத்தான நிலையில் பண்டாரவளை அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (ஸி)

# சிவனொளிபாதமலையில் பொலித்தீன்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் துரிதம்

கொழும்பு, மே 14

சிவனொளிபாதமலை அடிவாரம் முதல் உச்சிவரையில் உள்ள பொலித்தீன் களை அப்புறப்படுத்துவது சம்பந்தமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அம்பகமுவ பிரதேசசபையின் அப்பகுதிக்குப் பொறுப்பான அதிகாரி ஏ.டபிள்யூ. ஹேமாந்த இது குறித்துக் கூறியவை வருமாறு:-


அம்பகமுவ பிரதேசசபைக்கு உட்பட்ட பகுதியான மஸ்கெலியா நகர் முதல் சிவனொளிபாதமலை வரை உள்ள ஊசி மலையின் கீழ்ப்பகுதியே எமது கட்டுப்பாட்டில் உள்ளது.

இப்பகுதிகளில் எமது பிரதேசசபை அதிகாரிகளுடன் பொதுச் சுகாதார அதிகாரிகளும் இணைந்து ''பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது''என பதாகைகளைக் காட்சிப்படுத்தியிருந்தனர்.

இப்பகுதியில் பிரதேசசபைச் சிற்றூழியர்கள் அன்றாடம் வெற்று பிளாஸ்டிக் போத்தல்கள்,பொலித்தீன்கள் ஆகியவற்றைத் தீ வைத்து அழித்து வருகின்றனர்.

ஊசிமலைக்கு மேல்உள்ள பகுதியும் சிவனொளிபாதமலை மேல்பகுதியும் இரத்தினபுரி பாதையில் உள்ள சகல பிரதேசங்களும் குருவிட்ட பிரதேச சபைக்குச் சொந்தமானவை.

சம்பந்தப்பட்ட பிரதேச பொதுச் சுகாதார அதிகாரியிடம் இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது - என்று அவர் மேலும் கூறினார். (ஸி)




# கண்டி வைத்தியசாலையில் மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு

## சிறுநீரக நோயாளர் நிலை மோசம்

கண்டி, மே 14

கண்டி மாவட்டத்திலுள்ள அநேக வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கண்டி வைத்தியசாலையில் இருதய நோயாளர்களுக்கு வழங்கப்படும் முக்கிய மருந்துகள் உட்பட''லொஸாடன்'' ''பொட்டாசியம்'' பேன்ற மலிவு ரக மருந்துகள்கூட கிடைப்பதில்லை என்னும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக நோயாளர்கள் தாம் கூடுதல் விலை கொடுத்து வெளியே - தனியார் நிறுவனங்களில் மருந்துகளைக் கொள்வனவு செய்கின்றனர் எனத் தெரிவிக்கின்றனர்.

பேராதனை வைத்தியசாலையிலும் இதேவிதம் சிறுநீரக நோயாளர்கள் தாம் மருந்துகளின்றி சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனக் கூறுகின்றனர். (ஸி)

# கண்டியில் மரக்கறிகள் மீது மண்ணெண்ணெய் வீச்சு மாநகரசபை அதிகாரிகளின் செயலுக்கு கண்டனம்

## விசாரணை நடத்தப்படும் என்கிறார் பதில் முதல்வர்

கண்டி, மே 14

கண்டி மத்திய சந்தையின் பின்புறம் நடைபாதைகளில் அனுமதியின்றி மரக்கறி வியாபாரம் செய்யும் வியாபாரிகள் பரப்பியிருந்த மரக்கறிகள் மீது கண்டி மாநகரசபை அதிகாரிகள் மண்ணெண்ணெய் விசிறி அவற்றைப் பாவனைக்குதவாதவாறு ஆக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் கடந்த 10ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

மாநகரசபை அதிகாரிகளின் இந்த மிலேச்சத்தனமான செயலுக்கு சம்பந்தப்பட்ட வியாபாரிகள் கடும் ஆட்சேபம் தெரிவித்தமையால் அங்கு சில மணிநேரம் பதற்ற நிலை ஏற்பட்டது.

இச்சம்பவம் பற்றி கண்டி மாநகரசபையின் பதில் முதல்வர் சுமிந்த விக்கிரமசிங்க வுடன் (ஐ.தே.க.)தொடர்பு கொண்டபோது அவர் கூறியவை வருமாறு:

கண்டி மத்திய சந்தையின் பின்னால் அழுகிப்போன மரக்கறிகளும், மீன்களும் விற்கப்படுவதால் தமது ஆரோக்கியம் பாதிக்கப்படுகின்றது என பொதுமக்களிடமிருந்து நாளாந்தம் முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.

அதற்கமைய பாவனைக்குதவாத மரக்கறிகளைக் கைப்பற்றி அழிக்குமாறு நகரசபை அதிகாரிகளைப் பணித்தோம்.

எனினும், நல்ல மரக்கறிகள் மீதும் அவர்கள் மண்ணெண்ணெய் ஊற்றியிருந்தால் அது தவறு. அது பற்றி விசாரணை நடத்தவுள்ளேன். எவ்வாறாயினும் பொதுமக்களின் நலத்துக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய பொருள்களை விற்பதை அனுமதிக்க முடியாது- என்றார். (ஸி)

## பண்டாரவளை சேர் ராஸிக் பரீட் வித்தியில் உயர்தர வகுப்புகள்

கொழும்பு, மே 14

பண்டாரவளை சேர் ராஸிக் பரீட் மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை ஜி.ஈ.சீ. உயர்தர வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன என அதிபர் அல் ஹாஜ் எம்.ஏ. எம். ஸஹுர் தெரிவித்தார்.

கலை,வர்த்தகம் போன்ற பிரிவுகளில் உயர்தர வகுப்புகளை ஆரம்பிக்கும் அதே வேளை, தரம் 6, 7, 8, 9 மாணவர்களின் நலன் கருதி புத்தூக்க வகுப்புகளும் நடத்தப்படவுள்ளன.

கணிதம், தமிழ், விஞ்ஞானம், வரலாறு போன்ற பாடங்களை மாலை வேளை நடத்தவும் ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அதிபர் ஜனாப் எம்.என்.எம். நௌஷாத் தெரிவித்தார். (ஸி)

# யட்டிநுவரப் பிரதேசத்தில் வீதியைப் புனரமைக்குக!

கொழும்பு, மே 14

யட்டிநுவர பிரதேசசபைக்குட்பட்ட தெஹியங்க கிராமத்துக்கான வீதி சேதமடைந்து போக்குவரத்துக்கு அருகதை அற்றநிலையில் காணப்படுகின்றது என பிரதேசவாசிகள் தெரிவிக்கிறனர்.

சீரக அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த இந்த வீதி பின்னர் நீர்க்குழாய்களைப் பொருத்துவதற்கான கான்களும், குழிகளும் தோண்டப்பட்டமையினாலேயே சேதமடைந்தது என ஊர்வாசிகள் கூறுகின்றனர்.

இதன் காரணமாக பொதுமக்கள் பெரிதும் கஷ்டங்களை அனுபவிக்க நேரிட்டுள்ள அதேவேளை வாகனபோக்குவரத்துகளும் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன.

வர்த்தக, பொருளாதர நடவடிக்கைகளும் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி உள்ளன.

மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையும் ... இணைந்து இது தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தன் அவசியமாக மக்கள் வலியுறுத்துகின்றனர்.

# பசறையில் மாணிக்க கங்கையில் வீழ்ந்த சிறுமியின் சடலம் 12 நாட்களின் பின் மீட்பு

கொழும்பு, மே14

பசறை ரணுகல்ல தொங்கு பாலத்தில் இருந்து மாணிக்க கங்கையில் வீழ்ந்த ஏழு வயதுச் சிறுமியின் சடலம் 12 நாள்களின் பின் 28 கிலோ மீற்றர் தூரத்தில் மரவேர் ஒன்றில் சிக்கியிருந்த நிலையில் மீட்கப்பட்டு என பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

... ம், பெரிய தந்தையுட ... கொட்டமுதுனேயில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டு திரும்பிவரும் வழியில் பாலத்தின் மேலிருந்து மூவரும் ஆற்றில் விழுந்தனர். அயலவர்களின் பகிரதப் பிரயத்தனத்தின் பின் சிறுமியின் தாயும், பெரியதந்தையும் காப்பாற்றப்பட்டனர்.

சிறுமி ஆற்றுநீரால் அள்ளுண்டு சென்றிருந்தார். இந்நிலையில் 12 நாள்களின் பின் சிறுமியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. (ஸி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு ஆலயங்களின் திருக்காட்சிகள்...





சுதுமலை ஸ்ரீமுருகன் ஆலயத்துக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கைலாய வாகனத்தில் சுவாமி எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிப்பதை முதலாவது படத்திலும் கைலாய வாகனத்தை அமைத்துக்கொடுத்த ஸ்தபதி விஸ்வப்பிரம்மஸ்ரீ நடராசா சற்குருநாதையாவை உபயகாரர் ஆர்.கிரிதரன் பாராட்டிக்கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: எஸ்.கதிரவேலு)*



கரவை வெல்லனிற் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவில் தேர்த்திருவிழாவின்போது விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு காட்சிகொடுப்பதைப் படத்தில் காணலாம்.



சுன்னாகம் ஐயனார் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழாவில் வேட்டைத்திருவிழாவின்போது சுவாமி காங்கேசன்துறை வீதிவழியாக வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம். *(படம்: நேசன்)*

# இருளைப்பழிக்காமல் அதைப்போக்க ஒளியேற்றுவதே மேலான செயல்

## அரசறிவியல் நூல் வெளியீட்டில் பல்கலை துணைவேந்தர் உரை



யாழ்ப்பாணம், மே 14

''இருளை பழிப்பதைவிட ஒளியேற்றி இருளை ஒழிப்பதே மேலான செயல்''.

இவ்வாறு கூறினார் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன். கடந்த 10 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.பல்கலைக்கழக பொருளியல்துறை மண்டபத்தில் இடம்பெற்ற அரசறிவியலாளன் இதழ் - 3 நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு பேராசிரியர் சண்முகலிங்கன் வாழ்த்துரை வழங்கினார். அவர் மேலும் கூறுகையில்:-

ஒரு பல்கலைக்கழகம் எத்தனை பட்டதாரிகளை பயிற்றுவித்து வெளிக்கொணர்ந்துள்ளது என்பதைவிட எத்தனை ஆய்வுகளை நடத்தியுள்ளது, ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளது என்பதே அதற்குரிய சிறப்பாகும் - என்றார்.

இன்று எமது சமூகத்தில் அரசறிவியல் அதிக முக்கிய இடத்தினை வகிக்கின்றது. அரசறிவியலின் நோக்கமானது இருளை பழித்துரைப்பதைவிட ஒளியேற்றி இருளை அகற்றவேண்டும் என்பதே. அரசியல் ரீதியாகவும் நியாயமாகச் செயல்படுவதற்கு அரசறி வியல் துறை வளரவேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

இந்த நிகழ்வில் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம் பேசுகையில் நடந்து முடிந்த தேர்தல் நிலவரங்களை விரிவாக விமர்சித்தார்.

இத்தேர்தலில் பெரும்பாலானோர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. வன்னிப் பகுதியில் பெரும்பாலான தமிழ்த்தேசியவாதிகள் விருப்பு வாக்குகளினால் தோல்வி கண்டுள்ளன. சம்பந்தனுக்கு பாடம் படிப்பிக்கவென்று புறப்பட்ட சிலர் தமக்கே பாடம் படிப்பித்துக் கொண்டுள்ளனர் என்றார் அவர். அவர் மேலும் பேசுகையில், கண்டியில் முஸ்லிம் மக்கள் 3 ஆசனங்களைப்பெற்றுள்ளனர். இது அவர்களின் அரசியல் அறிவு வளர்ச்சியைக்காட்டுகின்றது. தமிழர்களைப் பொறுத்தவரை நாம் வாக்கு போட்டு அவர்களை ஏன் நாடாளுமன்றம் அனுப்பவேண்டும் என்றவகையான சேர்வுமனப்பான்மை தென்படுகின்றது. எனவே தமிழ் மாணவ இளைஞர்கள் தமிழ் மக்களின் இந்த சேர்வு மனப்பான்மையைப் போக்கவேண்டும். அதற்காக உழைக்க வேண்டும். தமிழ் மக்களை அரசியல் மட்டத்தில் வழிப்படுத்த முற்படவேண்டும்.

- என்று கூறினார் அரசறிவியல் ஒன்றியத் தலைவர் தி.விக்னேஸ்வரன் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் வேறுபலரும் பேசினர். (ப)


**MBBS/MD**

**Lugansk State Medical University**

**UKRAINE - EAST EUROPE**

Recognized by **SRI LANKA MEDICAL COUNCIL**

**With A/Ls** **6 years**

Minimum : 2C + 1S in Biology, Chemistry and Physics

எமது நிறுவனத்தின் மூலம் அனுப்பபட்ட கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைதீவு, நுவரேலியா, மாத்தளை, மாணவர்கள் தற்பொழுது Ukraineல் கல்வி கற்கின்றனர்.

**www.lugmedi.com**

யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு:

*Tel:* (தமிழில்): 0777 767818/ 0779004194

**Scholars Information Center (SIC)**

இல.734, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



**வீடு தேவை**

கொழும்பிலுள்ள பிரபல பொறியியல் துறை கம்பனிக்கு யாழ்பாண நகரத்தில் அல்லது 2km சுற்றாடலில், சகல வசதிகளும் கொண்ட கிட்டத்தட்ட 2000 சதுர அடிகொண்ட ஒரு வீடு நீண்ட காலத்திற்கு உடனடியாகத் தேவை.

தொடர்பு: 0772753146


## திருமதி யுஸ்ரீனா சேவியர்ப்பிள்ளை 25ஆம் ஆண்டு

இவ்வுலகைவிட்டு 25 ஆண்டுகள் ஆனதே அம்மா!
அனைவரையும் பாசத்தோடு அணைத்தவரே!
அனைவர் மனதிலும் நீங்காது நீங்கள் வாழ்வீர்கள்.

இவரின் ஆத்ம சாந்திக்காக நாளை (15.05.2010) சனிக்கிழமை பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்திலும், அருள் ஆச்சிரமத்திலும் காலை 6 மணிக்கு நினைவுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

9, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (98053) குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




### அமரர் பேதுரு மாக்கிறேற்


(புலோப்பளை கிழக்கு, பளை)

அம்மாவென்று நாம் அழைக்க நீயில்லை
உன் நினைவால் ஏங்கி வாடி நிற்கின்றோம்
எமைப் பெற்று வளர்த்த எம் அன்புத் தெய்வமே
முள்ளி வாய்க்காலுடன் உன் முகம் மறைந்ததுவோ
ஆண்டு ஒன்றல்ல யுகம் கடந்தாலும் மாறாது உன் நினைவு

தகவல்:
பிள்ளைகள் - பே.ஸ்ரீகரன் (பிரான்ஸ்),
பே.பாஸ்கரன் (பளை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...




**உதயன்**
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**01.05.1991**

* வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்காக அணுகுமுறை தொடர்பாக ஜனாதிபதியும் இராணுவத் தலைமைப் பீடத்துக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு.

* போதிய ஆட்பலம் இல்லாமையே வடக்கு - கிழக்கு போர் முனை படையினர் முன்னேற முடியாமல் இருப்பதற்கான காரணம் என முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவிப்பு.

**02.05.1991**

* அரசு, அந்நியக் கடனுதவி பெறுவதற்காகவே பேச்சுவார்த்தை என்றும் சமாதானத்தீர்வு என்றும் வேஷம் போடுகிறது என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் மாத்தையா தெரிவிப்பு.

* சிங்களத் தலைவர்களுக்குத் தேவைப்படும் போது பேச்சுவார்த்தை என்ற குரல் எழும். ஆனால் நாம் தேவை கருதி பேச்சுவார்த்தைக்குப் போகப்போவ தில்லை என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலதிபர் யோகி தெரிவிப்பு.

**03.05.1991**

* மட்டக்களப்பு நகரப் பகுதியில் தமிழர்கள் தொடர்ந்தும் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு அவர்களது சடலங்கள் தலையில்லாமல் வெறும் முண்டங்களாக நகர வீதிகளில் போடப்பட்டிருப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிப்பு.

* யாழ்.மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்தோருக்கு மூன்று பெரும் நிரந்தர முகாம்களை அமைக்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு.

**04.05.1991**

* இம்மாதம் 11 ஆம் திகதி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களை கண்காணிக்க பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் நீதித்துறை அதிகாரிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழு வருகை தந்துள்ளதாகத் தெரிவிப்பு.

* தீவுப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் 2ஆயிரத்து 784 குடும்பங்கள் தங்குவதற்காக 17 அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

**05.05.1991**

* பருத்தித்துறைக் கடலில் தரித்து நின்ற கடற்படைக் கப்பல் ஒன்றின் மீது நேற்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் பல கடற்படையினர் கொல்லப்பட்டதுடன் கப்பலும் பெரும் சேதமடைந்தது எனத் தெரிவிப்பு.

* வவுனியாவில் பாதுகாப்புப் படையினரின் அனுமதி பெற்று, செஞ்சிலுவைச் சங்க கொடியுடன் சென்ற பிரெஞ்சு வைத்தியக் குழு மீது ஹெலிக் கொப்டரும் பொம்பர்களும் தாக்குதல் மேற்கொண்டதாகத் தெரிவிப்பு.

**06.05.1991**

* வவுனியாவுக்கும் ஓமந்தைக்கும் இடையில் கோழியகுளம் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இடம் பெற்ற மோதலில் 20க்கும் அதிகமான படையினர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

* வடக்கு - கிழக்கு இராணுவ நடவடிக்கைகளில் முன்னேற்றத்தைக் காட்டுவதற்கு இராணுவத்தினருக்கு மேலும் 6 மாதகால அவகாசம் தேவைப் படுவதாக இராணுவத் தளபதி ஹெமில்டன் வணசிங்க தெரிவிப்பு.

**07.05.1991**

* அரசின் பாதுகாப்புச் செலவு கட்டுக் கடங்காமல் போவதால் சிவில் நிர்வாகச் செலவுகளை மிகப் பெரும் தொகையால் வெட்டுவதற்கு அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிப்பு.

* நேற்று முன்தினம் ஓமந்தைப் பகுதியில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலின்போது மீட்கப்பட்ட 16 படையினரின் சடலங்களை இலங்கை அரசிடம் ஒப்படைக்க விடுதலைப்புலிகள் முன்வந்துள்ளதாகத் தெரிவிப்பு.

**08.05.1991**

* வவுனியா - கோழியகுளம் பகுதியில் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் களத்தில் முன்னணியில் நின்று படையினருடன் மோதி வருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவிப்பு.

* இந்தியத் தேர்தலில் ராஜீவ் காந்தி பதவிக்கு வருவதை ஜனாதிபதி பிரேமதாஸ விரும்பவில்லையென ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் தெரிவிப்பு.

**09.05.1991**

* பிரெஞ்சு வைத்தியத் தொண்டர் குழுவொன்று கடந்த வாரம் வவுனியாவில் வைத்து விமானப் படையினர் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக விசாரித்து பத்து நாள்களில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரசு தனிநபர் ஆணைக் குழுவொன்றை நியமித்துள்ளதாகத் தெரிவிப்பு.

* இரத்மலானை விமான நிலையப் பகுதியிலிருந்து எச்சரிக்கை ஒலி எழுப்பியவாறு அடிக்கடி அம்புலன்ஸ் வண்டிகள் கொழும்பை நோக்கிச் செல்வதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளதாக பி.பி.ஸி. அறிவிப்பு.

**10.05.1991**

* வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் பிரெஞ்சு வைத்திய நிபுணர்களை உடனடியாக கொழும்புக்குத் திரும்புமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

* கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக வவுனியாப் பகுதியில் நடந்துவரும் தொடர்ச்சியான விமானக் குண்டுத் தாக்குதலினால் பொதுச் சொத்துக்கள் மற்றும் உடைமைகளுக்கு பெரும் நாசம் விளைந் துள்ளதாகத் தெரிவிப்பு.

**11.05.1991**

* மடு அகதி முகாமிலுள்ள ஆயிரக் கணக்கான மக்களுக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதில் தடங்கல் ஏற்பட்டுள்ளதால் அங்கு அகதிகள் பட்டினி கிடக்கும் நிலை உருவாகலாம் என அச்சம் தெரிவிப்பு.

* வடக்கு - கிழக்குத் தவிர்ந்த நாட்டின் 17 மாவட்டங்களில் இன்று உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறுவதாக அறிவிப்பு.

**12.05.1991**

* நேற்று வடக்கு கிழக்குத் தவிர்ந்த ஏனைய 7 மாகாணங்களிலும் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி பல உள்ளூராட்சிச் சபைகளில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றி உள்ளதாகத் தெரிவிப்பு.

* வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சேவை புரிந்துவரும் சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களில் பிரதிநிதிகள் நேற்று ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியதாகத் தெரிவிப்பு.

**13.05.1991**

* நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலிகளில் ஆளும் ஐ.தே.கட்சிக்கு கிடைத்திருக்கும் பெரு வெற்றி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு புதிய யோசனைகளை முன்வைத்து துணிந்து செயல்பட ஜனாதிபதிக்கு ஆணை வழங்குவதாக கருதக் கூடிய தென அரசியல் அவதானிகள் தெரிவிப்பு.

* நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் முறைகேடு நடந்ததாக கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதுவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருப்பதாகத் தெரிவிப்பு.

**14.05.1991**

* ஓமந்தையை அண்டிய சில பகுதிகளில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினரை நேற்று முன்தினம் மாலையில் விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்திருப்பதாகத் தெரிவிப்பு.

* வவுனியா,மன்னார் மாவட்டங்களில் அரச படையினர் தமது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு.

**15.05.1991**

* ஓமந்தைக்கு வடக்கேயுள்ள பகுதிகளில் நிலைகொண்டிருந்த இராணு வத்தினரை விடுதலைப் புலிகள் ஓமந்தைக்குத் தெற்கே பேயாடிக் கூழாங்குளம் வரை விரட்டியடித்து விட்டிருப்பதாகவும் அதன் போது 50க்கும் அதிகமான இராணுவத்தினர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

* விடுதலைப் புலிகளோடு பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு இலங்கை அரசு முன்னர் விதித்திருந்த மூன்று நிபந்தனைகளையும் இப்போது கைவிட்டு விட்டுள்ளதாக இந்திய வானொலி தெரிவிப்பு.

# ஆஸ்திரேலியாவுக்கு படகில் போகாதீர்கள்

## இவ்வாறு அறிவுறுத்துகின்றார்கள் இலங்கை அகதிகள்

கொழும்பு,மே14

''ஆஸ்திரேலியாவுக்கு கடல் மூலமாகப் படகுகளில் செல்வது எவ்வளவு ஆபத்தானது என்பதை இலங்கையர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். இனிமேல் எவரும் அத்தகைய பயணங்களுக்கு இணங்கக் கூடாது'' என்று கடந்த வாரம் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த வேளை, மீட்கப்பட்ட படகிலிருந்த இலங்கை அகதிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் நவம்பர் மாதத்துக்குப் பின்னர், ஆஸ்திரேலியா செல்ல முயன்ற இலங்கையர்களில் 17 பேர் கடலில் மூழ்கி மரணமாகியுள்ளனர்.

கடந்த வாரம் முன்னர் மீட்கப்பட்ட படகில் பயணம் செய்தவர்களில் ஐவர் கடலில் மூழ்கி பலியாகியிருந்தனர். அந்தப் படகிலிருந்து மீட்கப்பட்டவர்களே தமது பயங்கர அனுபவங்களை வெளியிட்டிருக்கின்றனர்.

ஆஸ்திரேலியாவுக்குக் கடல் வழியாக நீண்ட பயணத்தை மேற்கொள்வதில் உள்ள ஆபத்தை இலங்கையர்களுக்கு தெரியப்படுத்துவது அவசியம் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அனைத்து ஊடகங்கள் மூலமாகவும் இதனை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள அவர்கள், தங்களுக்கு உதவி வந்துகொண்டிருக்கின்றது என்பது தெரியாதமையாலேயே தமது படகிலிருந்த ஐவர் கடலில் குதித்து உதவி தேடிச்சென்று பரிதாபகரமான முறையில் மரணித்தனர் என்றும் கூறினர்.

(அ-சி)

# உணவில் விஷம் கலந்து நளினியைக் கொல்லச் சதி?

ராஜீவ் கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு வேலூர் பெண்கள் சிறையிலுள்ள நளினி, உணவில் விஷம் கலந்து தன்னைக் கொல்ல சதி முயற்சி நடப்பதாகப் புகார் கூறியுள்ளார்.

ஏப்ரல் 28 மற்றும் 30 திகதிகளில், சிறைத்துறை அத்தியட்சகருக்கு நளினி இரண்டு புகார் கடிதங்களை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதங்கள் நளினியின் வழக்கறிஞர் புகழேந்தி மூலம் வெளிவந்துள்ளது.

அந்தக் கடிதங்களில் நளினி குறிப்பிட்டுள்ளதாவது:-

முதல் வகுப்பு கைதிகளுக்கு, தனக்கு உதவியாக ஒரு கைதியை வைத்துக் கொள்ள உரிமை உண்டு. ஆனால், நளினிக்கு சிறையில் பிரச்சினை தொடங்கியதிலிருந்து இந்த வசதி மறுக்கப்பட்டுள்ளது. நளினி இருக்கும், சிறைத் தொகுதியை வழக்கமாகச் சுத்தம் செய்யும் யாரும் சுத்தம் செய்பவர்கள் எனது உணவில் சிறைக் காவலர்கள் மூலமாக மருந்து கலக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது என்றும் அந்தப் புகார்களில் தெரிவித்துள்ளார்.

நளினியை அவர் சந்தித்த போது, வழக்கமாக காலை 5 முதல் 5.30 மணிக்கு எழுந்து விடுவதுதான் அவர் வழக்கம் என்றும், சமீப காலமாக காலை 8.30 மணிக்கு கூட தன்னால் எழுந்திருக்க முடியாமல் மயக்கமாக இருக்கிறது என்றும், உடல் உபாதைகளுக்காக எவ்வித மருந்துகளும் எடுத்துக் கொள்ளாத நிலையில், திடீரென்று, காலையில் இவ்வாறு மயக்கம் ஏற்படுவது, பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் நளினி தெரிவித்தார் என சட்டத்தரணி கூறினார்.

(மற்றுமொரு செய்தி 20 ஆம் பக்கத்தில்)

# சோமாலிய கடற்கொள்ளையர்கள் விடுவித்த இலங்கையர்கள் அதிகாரிகளுடன் சந்திப்பு

கொழும்பு, மே 14

சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டு, பின்னர் கடந்த 11ஆம் திகதி விடுவிக்கப்பட்ட 20 இலங்கையர்களும் ஓமானிலுள்ள இலங்கை அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர் என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களுக்குரிய அனைத்து வசதிகளும் அந்நாட்டிலுள்ள இலங்கைக்கான தூதரகங்களினால் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

குறித்த கடற்கொள்ளையர்களால் கேட்கப்பட்டிருந்த பணம் கொடுக்கப்பட்டதையடுத்தே கப்பலையும் கப்பலில் இருந்தவர்களையும் கடற்கொள்ளையர்கள் விடுதலை செய்துள்ளனர்.

கடந்த மார்ச் 23ஆம் திகதி சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டிருந்த குறித்த கப்பலில், 20 இலங்கையர்கள் உட்பட 22 பேர் பயணித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(சி)

# அவமதித்த இந்தியாவுக்கு வர மறுத்த பார்வதி அம்மாளை வணங்குகிறேன்

## -இயக்குனர் சீமான்-

''மதிக்காத மண்ணை மிதிக்க மறுத்த மானமுள்ள மறத்தமிழச்சி பார்வதி அம்மாள், இந்தியாவுக்கு வர மறுத்ததை மெச்சி அவரது காலில் விழுந்து வணங்குகிறேன்'' என்று தமிழகத் திரைப்பட இயக்குனர் சீமான் கூறியுள்ளார்.

இதுகுறித்து 'நாம் தமிழர் இயக்கத் தலைவர்' சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஆறு மாத விசாப் பெற்று சென்னை வந்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளை மத்திய அரசு அதிகாரிகள் கடந்த மாதம் திருப்பி அனுப்பி தீராக்களங்கத்தை உருவாக்கினர்.

சிகிச்சைக்கு உரிய அனுமதியுடன் வந்தவரை அவமரியாதை செய்து திருப்பி அனுப்பியவர்கள் இப்போது மனிதாபிமான நிபந்தனைகள் என்னும் பெயரில் கடுமையான நிபந்தனைகளை விதித்து தமிழ்த்தாயை அவமதித்துவிட்டார்கள்.

சிகிச்சைக்கு வந்த எம் தாயாரை வய[illegible] என்றும் பார்க்காமல் திருப்பி அனுப்பி அலைக்கழித்த மத்திய மாநில அரசுகள் இன்று ஒரு மாதம் கழித்து அவரைக் கொலைக் குற்றவாளியைப் போல பல்வேறு நிபந்தனைகளுடன் அனுமதி என்ற பெயரில் அனுமதித்து சிறைக் கைதியாக நடத்த முயற்சிக்கின்றன.

அவர் கணைக்கால் இரும்பொறை வந்த இனத்தின் பெருமை பேசுகிற மாவீரனைப் பெற்ற தாய் ஆவார்.

அவரது தாய் மண் இன்று எதிரியான சிங்கவரின் ஆதிக்கத்தில் இருந்தாலும் அது குறித்துக் கவலைப்படாமல் மதிக்காத மண்ணைண் மிதிக்காது மானமுள்ள மறத் தமிழச்சியாகச் சென்றுள்ளார். அன்னையின் இந்த முடிவு அவருக்குச் சிகிச்சை அளிப்பதன் மூலம் தமக்கு வரலாற்றில் ஏற்பட்டுள்ள அழிக்கமுடியாத தீராக் கறையை மாற்றிவிடலாம் என எண்ணிய அரசியல் பிழைப்புவாதிகளுக்குச் சரியான சவுக்கடி ஆகும்.

துரோகியின் கருணையால் வாழ்வதை விட, எதிரியால் வீழ்த்தப்பட்டு சாவது மேலானது என்ற தமிழ் வீரத்திற்கு ஏற்ப இந்தியா வரமறுத்த அன்னையே உன் பாதம் தொட்டு வணங்குகிறேன் என்று சீமான் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா விசாவில் வந்து தொழில் செய்த 14 இந்தியப் பிரஜைகள் கொழும்பில் கைது

கொழும்பு, மே 14

சுற்றுலா விசா மூலம் இலங்கைக்கு வருகை தந்து தொழில்களில் ஈடுபட்ட 14 இந்தியப் பிரஜைகள் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 11 பேர் வத்தளைப் பிரதேசத்தில் இரும்பு உருக்கும் நிலையமொன்றில் தொழில்புரிந்து கொண்டிருக்கும் போது கைதுசெய்யப்பட்டனர் என்று திணைக்களத்தின் உதவிக் கட்டுபாட்டாளர் விலியம் தேவேந்திரராஜா தெரிவித்தார்.

ஏனைய மூவரும் செட்டியார் தெருவில் நகைக்கடையொன்றில் தொழில்புரிந்து கொண்டிருக்கும் போது கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களின் விசா காலாவதியாகியுள்ளதாகக் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் உதவிக் கட்டுபாட்டாளர் குறிப்பிட்டார். அவர்கள் மிரிஹானவிலுள்ள திணைக்களத்தின் தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டு இந்தியாவுக்கு திருப்பியனுப்பப்படவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு குடிவரவு குடியகல்வுச் சட்டங்களை மீறித் தொழில்களில் ஈடுபடும் வெளிநாட்டவர்கள் மீண்டும் இலங்கைக்கு வர முடியாதவாறு, தடைசெய்யப்பட்டோர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் திணைக்களம் குறிப்பிட்டது. (சி)


## CARITAS- HUDEC- JAFFNA
## EMPLOYMENT OPPORTUNITIES

CARITAS HUDEC

*Positions:*

1. ACCOUNTANT 2. LVH PROGRAMME COORDINATOR
3. TECHNICAL OFFICER 4. LVH FIELD OFFICER
5. FINANCE ASSISTANT 6. DATA ENTRY OPERATOR

**Duty Station:- Vanni area* **Duration of Contract:- 9 months*

1. *Main Duties:- Accountant*
*Establish proper accounting systems. * Preparation of payment vouchers payments. * Preparation of budget as required in coordination with programme units. *Preparation of monthly payroll.
*Coordination with banks and transaction.

*Qualification/ Experience*
*Should be partly qualified ICASL/CIMA/ACCA or completed HNDA
*Minimum 03 years professional financial experience
*Fluency in written and spoken English
*Computer literacy in MS. Office (Word, Excel, Access)

2. *Main Duties:- LVH Programme Coordinator*
*Plan and finalize the various LVH project components. Take into consideration the policy of the local authorities.
*Regularly check the time planning of the field officers with the implementation.
*Supervise and manage field and project officers in identifying projects through a participatory process which include diverse group of individuals and vulnerable groups.

*Qualification/ Experience*
*Demonstrated management experience with a special emphasis on project management
*Able to write project proposals and prepare monthly, quarterly, half and yearly reports *Fluency in written and spoken English *Good communication and managerial skill *Computer literacy in MS. Office (Word, Excel, Access)

3. *Main Duties:- Technical Officer*
*Supervision of all construction activities, report on progress and bottlenecks, receive information from beneficiaries and give regular information to project participants and local authorities as and when required. Also submit report to Director through construction manager *Be required to realize site supervision

*Qualification/ Experience*
*NCT/ NDT in Civil Engineering or equivalent with 2 years experience in the same field.
*Fluency in written and spoken English
*Computer literacy in Ms. Office and AutoCAD
*Experience in preparing weekly and monthly progress reports.
*Able to make BoQ and other quantity analyses of materials and supplies

4. *Main Duties:- LVH Field Officer*
*The LVH field Officer responsible for daily implementation of LVH activities covered in the program, this includes IGP, Animal Husbandry, Vocational training etc. under the direct supervision of the Livelihood Coordinator.
*Organize and conduct training programme to the beneficiaries to enhance standard of their life.
*Assist in making project proposals, reporting & analysis.

*Qualification/ Experience*
*Completion of Secondary Education preferably with relevant Diploma
*Two years experience relevant field. *Fluency in written and spoken English
*Computer literacy in MS. Office (Word, Excel, Access)

5. *Main Duties:- Finance Assistant*
*Set up and maintain efficient finance systems to support Program Activities
*Assist in all finance implementation activities and inform the Accountant of all the progress of the undertaken activities.
*Preparing and entering TALLY software ledger books.
*Assist to collect the entire document needed to establish the monthly reports
*Prepare monthly financial reports

*Qualification/ Experience*
*Should be partly qualified CIMA, HNDA or equivalent degree with minimum 02 years experience preferably in a NGO. *Fluency in written and spoken English *Computer literacy (MS. Office and Tally Accounting Package)

6. *Main Duties:- Data Entry Operator*
*Should be able to prepare narrative and statistical reports independently
*Knowledge on the maintenance of the Database and Documents

*Qualification/ Experience*
*Should have Secretariat/ Administrative background
*Completed G.C.E. A/L and minimum "credit pass" in G.C.E O/L English
*Advanced computer skills in Excel (Spreadsheet, Database management), Word (reporting, graphs) & Internet e-mail

**General**
Caritas- Hudec recruits for its programme qualified persons without distinction of ethnic, background, religion or gender.

Women candidates are encouraged to apply.

If you would like to be a part of a dedicated team in a humanitarian context, please send us your CV with introduction letter, including your contact details **(address and telephone)** and minimal two non related references to one of the following address, latest by : **21st May 2010 (Friday).**

The Director or E- mail: hudec@sltnet.lk
Caritas- HUDEC, 14, Mathew's Road,
Deogu Street, Jaffna.

The Director or caritasvanni09@gmail.com
Caritas- HUDEC, Thirunagar, Kilinochchi.


# சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே 14

பளைப் பிரதேசத்தில் அண்மையில் மீள் குடியமர்த்தப்பட்ட மாசார், சோரன்பற்று ஆகிய பகுதி மாணவர்களுக்கென சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலை கடந்த திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(204-207)

# ஆபரண விற்பனை நிலையங்கள் நாளைமறுதினம் திறந்திருக்கும்

யாழ்ப்பாணம்,மே 14

சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்ற எல்லைக்குட்பட்ட ஆபரண விற்பனை நிலையங்கள் அட்சய திருதியை முன்னிட்டு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை திறந்திருக்கும் என வணிகமன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் அறிவித்துள்ளார்.

(204-207)

# அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம்,மே 14

யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம் பெறும்.

இந்தக் கூட்டத்திற்கு யுனிசெவ் நிறுவனத்தால் வழங்கப்பட்ட அதிபர்கள் படிவத்துடன் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# நேரம் தாமதித்துச் சேவையில் ஈடுபடும் 785, 786 வழி இலக்க பஸ்கள்

யாழ்ப்பாணம்,மே 14

காரைநகர் சாலையூடாக யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் 785, 786 ஆம் இலக்கப் பேருந்துச் சேவைகள் நேரதாமதமாக ஈடுபடுவதாகப் பயணிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

காலை 7 மணியளவில் சேவையில் ஈடுபடும் இப் பேருந்துகளை நம்பியே அரச உத்தியோகத்தர்கள் மற்றும் தனியார் நிறுவனப் பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள் எனப்பலர் தமது பணிகளில் ஈடுபடுவதாகவும் இதனால் இப்பாதையூடான சேவையை ஒழுங்கு படுத்துவதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் தரப்பில் கேட்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக நேரதாமதமாக இப்பேருந்துகள் சேவையில் ஈடுபடும் அதே வேளை பாதை இலக்கம் 786 ஊடாக தனியார் சிற்றூர்திகளைக் காண்பதும் அரிதாக உள்ளதாக பொதுமக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

(50-16)

# யாழ்.மத்திய கல்லூரியில் மாணவர்களுக்கான விடுதி வசதி

யாழ்ப்பாணம்,மே 14

யாழ்.மத்திய கல்லூரியில் பல வருடங்களின் பின்னர் மீண்டும் மாணவர்களுக்கான விடுதி வசதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முன்னர் இக்கல்லூரியில் அமைந்திருந்த மாணவர் விடுதிக் கட்டடங்கள் பல்வேறு யுத்த நடவடிக்கைகளினால் அழிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் தற்போது- 1987 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீண்டும் தூரப் பிரதேச மாணவர்கள், வெளி மாவட்ட மாணவர்களின் நன்மை கருதி இவ் விடுதி வசதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் முதற்கட்டமாக 50 மாணவர்கள் வரை விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களுக்கான விடுதி வசதிகளை ஏற்கனவே உள்ள ஒரு கட்டடத்தில் ஏற்பாடு செய்துள்ளதாகவும் யாழ். மத்திய கல்லூரி அதிபர் எல். ஒங்கார மூர்த்தி தெரிவித்துள்ளார். (26)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2120 திகதி 12-05-2010

ஆங்கில எழுத்திற்கும் D

வெற்றி எண்கள் **13 48 52 61** போனஸ் இல: **20**

ஜக்பொட் பரிசு ரூ. **18,564,375/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 178449 | 20/- | 3,568,980/- |
| 2 இல | 12751 | 100/- | 1,275,100/- |
| 3 இல | 269 | 1,000/- | 269,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7191 | 40/- | 287,640/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 509 | 1,000/- | 509,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 06 | 10,000/- | 60,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 18,564,375/- | - |
| 1 இல + போனஸ் இல | 8512 | 100/- | 851,200/- |
| 2 இல + போனஸ் இல | 395 | 500/- | 197,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 319 | 200/- | 63,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 11 | 1,500/- | 16,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,498,720/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 208427 | | 9,098,720/- |

ஆலிந்தயே வாசனாவின் மூலம் "லக்கி 7" தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்காக தகுதி பெற்ற அதிஷ்டசாலிகள்
K. தில்ருக்ஷி கொடிகார - மினுவன்கொடை.
K.G. ரணசிங்க - வத்தளை.

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அனுராதபுரம் | 201885355-9-39 |
| அம்பாறை | 201877806-9-46 |
| கம்பஹா | 201889577-4-07 |
| கொழும்பு | 201878048-5-25 |
| கம்பஹா | 201883142-7-08 |
| யாழ்ப்பாணம் | 201888040-7-06 |
| மட்டக்களப்பு | 201879660-5-33 |
| கண்டி | 201874696-9-42 |
| களுத்துறை | 201882888-4-36 |
| திருகோணமலை | 201881246-1-18 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 19,051,450/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 மே 15 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 28 ★ 07 ★ 1934 |  | 14 ★ 04 ★ 2010 |

கடந்த 14.04.2010 புதன்கிழமை இறைபதம் எய்திய கரம்பகத்தை சொந்த முகவரியாகவும் மீசாலை கிழக்கை தற்காலிக முகவரியாகவும் கொண்ட

### அமரர் வீரகத்தி சுப்பிரமணியம் (செல்லத்துரை)

எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (14.05.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்துடன் இன்று நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*மில் வீதி,*
*மீசாலை கிழக்கு.* (சி/567605) **குடும்பத்தினர்.**



## கட்டடம் வாடகைக்கு

பிரதான வீதி, சங்கானையில் அமைந்துள்ள 56' நீளமும் 36' அகலமும் கொண்ட கட்டடம் வாடகைக்குண்டு. சகல



வேலைகளும் நிறைவு செய்யப்பட்ட, கீழ் தளம் மாபிள் பதிக்கப்பட்ட, போதிய அளவு இட வசதியும், வாகன தரிப்பிற்கான இடவசதியும், இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கிகளுக்கு அண்மையிலும் சங்கானை பஸ் நிலை யத்திற்கு அண்மையிலும் அமைந்துள்ளதுமான இக் கட்டடம் வங்கி அல்லது வேறு நிறுவனங்களின் தேவைக்கேற்ப கட்டப்பட்டுள்ளது.

தொடர்பு: **Mobile T.P. No.: 0779836746, 0778435587**
**Land T.P.No.: 021 3735982**

*பிரதான வீதி,*
*சங்கானை.* (98187) **வ.வேலும்மயிலும்**
**கட்டட உரிமையாளர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் பிரதேச செயலகத்தின் விளையாட்டு விழா நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

உதவிப்பிரதேச செயலர் ச.பிரேமினி, பிரதேசசெயலர் சி.ஏ.மோகன்றாஸ், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை ஆகியோர் உரையாற்றுவதையும், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் அதிபர் இ.குணநாதன் வீரர் ஒருவருக்கு பரிசு வழங்குவதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நாவற்குழி செய்தியாளர்)

# யாழ்ப்பாணம் - வெளி மாவட்டப் பாடசாலைகள் மோதும் ஐக்கியப் படுத்தலுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

## 26,27,28 ஆம் திகதிகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரியில்

யாழ்ப்பாணம்,மே14

யாழ்.மாவட்டப் பாடசாலைகளும் வெளிமாவட்டப் பாடசாலை அணிகளும் பங்குகொள்ளும் ஐக்கியப்படுத்தலுக்கான 2010 ஆம் ஆண்டுக்கான அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 27ஆம்,28ஆம், 29ஆம் திகதிகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி, மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி ஆகியனவும்-

வெளிமாவட்டங்களில் இருந்து மன்னார் சென்.சேவியர் கல்லூரி, கண்டி ரின்றிக் கல்லூரி, கொழும்பு நாலந்தாக் கல்லூரி, கொழும்பு ரிச்மன் கல்லூரி, கொழும்பு சென்பீற்றர்ஸ் கல்லூரி, மட்டக்களப்பு அலி பிறார் மத்திய கல்லூரி, திருகோணமலை இந்துக் கல்லூரி, அனுராதபுரம் மத்திய கல்லூரி, புத்தளம் சாஹிராக் கல்லூரி ஆகிய பாடசாலைகளும் பங்குபற்றுகின்றன.

இப்போட்டிகள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு சென்.ஜோன்ஸ், சென்றல் சென்.பற்றிக்ஸ் கல்லூரிகளின் மைதானங்களிலும் துரையப்பா விளையாட்டரங்கிலும் 27ஆம், 28ஆம், 29ஆம் திகதிகளில் நடைபெறும்.

இதில் இரண்டு குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டு சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் போட்டிகள் நடைபெறும்.

27 ஆம் திகதி காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் போட்டிகள் 29 ஆம் திகதி மாலையில் நிறைவடையும்.

இறுதிநாள் நடைபெறும் போட்டிகளில் காலை 7 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர் தலைவர்களுக்கும் கைதடி நவீல்ட் பாடசாலையின் செவிப்புலன் வலுவற்றோர் மாணவர் அணிக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி நடைபெறும்.

தொடர்ந்து அரை இறுதியாட்டங்களும் பி.ப.3 மணிக்கு மூன்றாம் இடத்துக்கான போட்டியும், மாலை 4.15 மணிக்கு இறுதியாட்டமும் இடம்பெறும்.

இச் சுற்றுப்போட்டிக்கு சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான முகவர் அமைப்பு, கொல்சிம் சிமெந்து நிறுவனம் என்பன அனுசரணை வழங்குகின்றன. (6-23)

## அரை இறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணழ், மே 14

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆகியவற்றின் அனுசரணையுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழக மைதனத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் பங்குகொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு:

சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சிவானந்தா (ஏ) விளையாட்டுக்கழகம் எதிர் டைமன்ஸ் (ஏ) விளையாட்டுக்கழகம்.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு மனோகரா விளையாட்டுக்கழ்கம். எதிர் சென்.சேவியர் விளையாட்டுக் கழகம். (6-23)

## இன்றைய ஆட்டங்கள்

### யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம்,மே 14

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி, மூன்றாம் இடத்துக்கான போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

காலை 9 மணிக்கு 19 வயதுப் பிரிவினருக்கான மூன்றாம் இடத்துக்கான போட்டியில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி- இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.

பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் இறுதிப் போட்டியில் 17 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரி - மானிப்பாய் இந்துக் கல்லூரி, 19 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மோதுகின்றன. (6-86)

### கூடைப்பந்தாட்டம்

வடமாகாணத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுத் திணைக்களம், பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தப்படும் பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும் ஆட்டங்களில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் - தெல்லிப்பழை பிரதேச செயலக அணி, சங்கானை பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி மோதவுள்ளன. (6-86)

### மென்பந்துத் துடுப்பாட்ட இறுதிப் போட்டி இன்று

யாழ்ப்பாணம்,மே 14

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் 10 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த இறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி களமிறங்குகின்றது. (6-86)

# மாவட்டப் பெரு விளையாட்டுப் போட்டிகளில் சண்டிலிப்பாய் இந்துவின் பத்து அணிகள் களத்தில்

யாழ்ப்பாணம், மே 14

மாவட்ட ரீதியிலான பெருவிளையாட்டுப் போட்டிகளில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 10 அணிகள் பங்குகொள்கின்றன.




வலிகாமம் வலயத்தில் வெற்றிபெற்ற சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 15, 17, 19 வயதுப் பிரிவுகளில் வெற்றிபெற்ற கரப்பந்தாட்ட அணிகள் (ஆண்கள்), 17,15 வயதுப் பிரிவுகளில் வெற்றிபெற்ற கரப்பந்தாட்ட (பெண்கள்) அணி.

15,17,19 வயதுப் பிரிவுகளில் வெற்றி பெற்ற வலைப்பந்தாட்ட அணிகள், 19 வயதுப்பிரிவு கூடைப்பந்தாட்ட அணி (ஆண்கள்), 19 வயதுப் பிரிவு சதுரங்க அணி (பெண்கள்) ஆகிய அணிகளே பங்குபற்றுகின்றன. (6-9)

# பாடசாலைகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டம்; உடுவில் மகளிர் கல்லூரி அணி வெற்றி!

யாழ்ப்பாணம், மே14

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் உடுவில் மகளிர் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

கடந்த புதன்கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை அணி மோதியது.

இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி தன்னை எதிர்த்து விளையாடிய பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை அணியை 45:12 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது. (6-23)



இலங்கை ரெலிக்கொம் நிறுவன வலைப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் ஆதாவுடன் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் முன்னணி அணிகளுக்கும், ரெலிக்கொம் நிறுவன அணிகளுக்கும் இடையே நடைபெற்ற இறுதிப்போட்டியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணியும், தொல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் மோதிக்கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள் நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாவின் தாயாரை வைத்து அரசியல் நடத்தும் கேவலம்!

## தமிழக முதல்வர் குற்றச்சாட்டு



சென்னை,மே 14

''பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளின் விடயத்தை வைத்துக்கொண்டு சில அரசியல்வாதிகள் அரசியல் நடத்துகின்றனர்.''

- இவ்வாறு தமிழக முதல்வர் கருணாநிதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கே :- இலங்கைத் தமிழர் பிரச்சினை ஒரு துயரமான முடிவுக்கு வந்திருக்கிறது. அந்நாட்டில் போர் முடிந்து, இரு தேர்தல்கள் நடந்துள்ள நிலையிலும், பல்லாயிரக்கணக்கான மக்கள் இன்னும் முகாம்களிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர். தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கவும் அரசியல் தீர்வு ஏற்படவும் இந்தியாவின் நடவடிக்கைகளில் மெத்தனமும் அலட்சியமும் தென்படுகின்றனவே?

ப:- இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அங்குள்ள தமிழர்கள் எல்லாம் அமைதியான நல்வாழ்வு வாழவேண்டும். அவர்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பது தான் இங்குள்ள மத்திய, மாநில அரசுகளின் பெரு விருப்பமாகும். இலங்கை ஒரு அந்நிய நாடு என்கிற போதுதான், அவர்களின் உள்நாட்டுப் பிரச்சினைகளில் நாம் தலையிடும்போது முள்ளில் விழுந்த துணியை, கிழியாமல் எடுப்பது போல் எடுக்கவேண்டியிருக்கின்றது. அந்த அளவிற்கு மத்திய, மாநில அரசுகள் செயற்பட்டுக்கொண்டிருக்கும்போதே, இங்குள்ள ஒருசில அரசியல்வாதிகள் அரசியல் ரீதியான உள்நோக்கங்களோடு, ஏதோ அவர்கள் தான் இலங்கைத் தமிழர்களுக்காகப் பாடுபடுபவர்களைப் போல நடிக்கிறார்களே தவிர, வேறொன்றும் இல்லை. உதாரணமாக பார்வதி அம்மாள் பிரச்சினையையே எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்றே தெரியாத நிலை. இருந்தாலும் ஒரு சிலர் தங்களின் அரசியல் அபிலாஷைகளுக்காக அந்த அம்மையாரின் உடல் நிலையை வைத்து தாங்கள் தான் அவர்மீது அக்கறையும், பாசமும், பற்றும் உள்ளவர்கள் என்பதைப்போல திட்டமிட்டு எல்லோரையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

கே:- மத்திய அமைச்சர் பதவியில் இருந்து விலகி, அழகிரி மாநில அரசியலுக்கு வருவார் என்றும், கனிமொழி மத்திய அமைச்சராக பதவி உயர்வு பெறுவார் என்றும் ஊடகங்களில் செய்திகள் அடிபடுகின்றனவே?

ப:- நீங்கள் தான் உங்கள் கேள்வியிலேயே ஊடகச் செய்தி என்று சொல்லி விட்டீர்களே?

கே:- தமிழக மீனவர்கள், இலங்கை கடற்படையால் தொடர்ந்து தாக்கப்படும் நிலைமை தொடர்கிறதே?

ப:- இந்தத் துன்பத்தைக் களைவதற்கு பல ஆண்டுகளாக நம்மால் முடிந்த முயற்சிகளையெல்லாம் செய்துகொண்டுதான் வருகிறோம். எனினும், மீண்டும், மீண்டும் அந்தக் கொடுமை தொடர்ந்து கொண்டுதான் உள்ளது.- என்றார்.

## நளினி-முருகன் சிறையில் சந்திப்பு

வேலூர்,மே14

வேலூர் பெண்கள் சிறையில் நேற்று, நளினி - முருகன் சந்திப்பு நடந்தது. முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில், ஆயுள்தண்டனை அனுபவித்து வரும் நளினி, வேலூர் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதே வழக்கில், தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட அவரது கணவர் முருகன், வேலூர் மத்திய ஆண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவரும், 15 நாள்களுக்கு ஒரு முறை சந்தித்துப் பேச, சிறைத்துறை நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது. இவர்கள், சந்திப்பு வேலூர் பெண்கள் சிறையில், நேற்று முன்தினம் நடந்தது. பொலிஸார், முருகனை பெண்கள் சிறைக்கு அழைத்துச் சென்றனர். அரை மணி நேரம் நடந்த இந்த சந்திப்பின் போது, 'நளினி விடுதலை குறித்தும், தங்கள் மகள் ஹரித்திராவின் எதிர்காலம் குறித்தும் பேசினர் எனச் சிறைத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

# நளினியைக் கொல்ல முயற்சியா? விசாரணை நடத்துவதற்கு குழு

சென்னை,மே 14

ராஜீவ் கொலை வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்துவரும் நளினி கூறியிருக்கும் புகார்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு குழு ஒன்றை தமிழக அரசு அமைத்திருக்கிறது. இந்தத் தகவலை தமிழக சட்ட அமைச்சர் துரை முருகன் சட்டப்பேரவையில் நேற்று தெரிவித்தார்.

ராஜீவ் கொலை வழக்கில் கைதாகி வேலூர் பெண்கள் சிறையில் நளினி அடைக்கப்பட்டிருக்கிறார். அண்மையில் சிறைத்துறை ஏடிஜிபி கே.ஆர்.ஷ்யாம் சுந்தருக்கு புகார்க் கடிதம் ஒன்றை அவர் அனுப்பியிருந்தார். அதில், தமது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும், உணவில் நஞ்சு கலக்க முயற்சி நடந்திருப்பதாகவும், சிறைத்துறை அதிகாரிகள் தமக்குக் கொடுமை இழைத்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்..

இந்த விவகாரம் குறித்து சட்டப் பேரவையில் காங்கிரஸ் உறுப்பினர் ஞானசேகரன் நேற்று கேள்வியெழுப்பினார். இந்தக் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் துரை முருகன், நளினியின் புகார்கள் குறித்து விசாரணை நடத்துவதற்குக் குழு அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

கோவை சிறைத்துறை டிஐஜி கோவிந்தராஜன் தலைமையிலான இந்தக் குழுவில் பெண் அதிகாரி ஒருவர் இடம்பெற்றிருப்பதாகவும், விரைவில் விசாரணை அறிக்கையை இந்தக்குழு தாக்கல் செய்யும் எனவும் துரைமுருகன் தெரிவித்திருக்கிறார்.

## இந்தியச் செய்திகள்

# அந்தமான் தீவின் இராணுவ இரகசியங்கள் சட்டவிரோதமான முறையில் பரிமாற்றம்

## இராணுவ அதிகாரி விசாரணையில்

புதுடில்லி,மே14

அந்தமானில் உள்ள இராணுவ அதிகாரியின் கணனி மூலமாக, இரகசிய தகவல்கள் சட்டவிரோத பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளன என தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து இராணுவ அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இது குறித்து இராணுவ வட்டாரங்கள் கூறியவை வருமாறு:-

அந்தமான் நிக்கோபார் தீவுகளில் இராணுவ முகாமில் பணியாற்றிவரும் அதிகாரி ஒருவரின் அலுவலகத்தில் இருந்து, அவரது கணனி மூலமாக, இராணுவ இரகசியம் பற்றிய முக்கிய தகவல்கள் சட்டவிரோதமாக பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, ராஜஸ்தான் உள்ளிட்ட பகுதிகளில் இராணுவ வீரர்கள் எங்கெங்கு பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர் என்ற தகவல், திரட்டப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

இது இராணுவ வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அந்தமான் நிக்கோபார் தீவுகளில் பணியாற்றும் இராணுவ அதிகாரிக்கு, நாட்டின் மற்ற பகுதிகளில் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ள, இராணுவ வீரர்கள் பற்றிய விவரம் எப்படி கிடைத்தது என்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது. இந்த விசாரணையின் முடிவில், இந்த இரகசியங்கள் யாருக்கு பரிமாற்றம் செய்யப்பட்டது என்ற தகவலும், வெளிச்சத்துக்குவரும். இதில் சீனாவில் தலையீடு இருக்கக்கூடும் என்ற சந்தேகமும் உள்ளது - என்றார்.

இராணுவ அமைச்சர் அந்தோனி கூறுகையில், 'இராணுவ அதிகாரி ஒருவரால், தவறான காரணத்துக்காக, கணனி பயன்படுத்தப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரியிடம், இராணுவ விசாரணை தவிர, மற்ற உளவுப்பிரிவு அதிகாரிகளின் விசாரணையும் நடத்தப்படும் - என்றார்.

# மாவோயிஸ்டுகளின் தாக்குதல்களால் இழப்புகளைச் சந்தித்தாக வேண்டும்!

## மத்திய உள்துறைச் செயலர் தெரிவிப்பு

புதுடில்லி,மே 14

''மாவோயிஸ்டுகளின் ஆதிக்கம் உள்ள பகுதியில் நடவடிக்கை மேற்கொள்ளும்போது, சில இழப்புகளை சந்தித்து தான் ஆகவேண்டும்'' - இவ்வாறு மத்திய உள்துறை செயலாளர் கோபாலகிருஷ்ண பிள்ளை தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி பேட்டியளித்தபோது ஜி.கே.பிள்ளை கூறியவை வருமாறு:-

'மாவோயிஸ்டுகளை குறைத்து மதிப்பிட்டு விட்டோம். அதனால்தான் நிறைய பிரச்சினைகள் உருவாகிவிட்டன' என, மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் தெரிவித்துள்ளார். நக்சலைட்களை கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டால், சிறிய அளவில் வன்முறை நடந்திருக்கும். அவர்களுக்கு எதிரான நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். அதனால், அவர்கள் ஆதிக்கம் உள்ள பகுதிகளுக்கு செல்லும்போது, சில இழப்புகளை நாம் சந்தித்து தான் ஆக வேண்டும்.

காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்யாத மேற்கு வங்கம், பீகார், சத்திஸ்கர், ஒரிசா, ஜார்க்கண்ட் ஆகிய ஐந்து மாநில முதல்வர்கள், நக்சலைட்களை ஒடுக்குவதற்கான நடவடிக்கைக்கு ஒத்துழைக்க முன்வந்துள்ளனர். நக்சலைட்கள் நாசவேலைகளை செய்து விட்டு, அண்டை மாநில காடுகளில் ஒளிந்து கொள்கின்றனர். பேச்சுவார்த்தை என வரும் போது, சிறையில் உள்ள தங்கள் சகாக்களை விடுவிக்க வேண்டும், சண்டை நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட நிபந்தனைகளை மாவோயிஸ்டுகள் அறிவிக்கக்கூடும். ஆனால், முதலில் அவர் கள் வன்முறை போக்கை கைவிட்டு நிபந்தனையற்ற பேச்சுக்கு முன்வரவேண்டும் - என்றார்.

டில்லி பல்கலைக்கழகத்தில் அமைச்சர் சிதம்பரம் பேசும்போது, உள்துறை அமைச்சகத்தை நக்சலைட்கள் எப்போது வேண்டுமானாலும் அமைதி பேச்சுக்கு தொடர்பு கொள்ள வசதியாக பேக்ஸ் எண்களை அறிவித்திருந்தார். ஆனால், இதுவரை நக்சலைட்கள் தரப்பிலிருந்து எந்த அறிவிப்பும் வரவில்லை - என்றார்.

# நித்தியானந்தாவுக்கு விளக்கமறியல் நீடிப்பு




பெங்களூர், மே 14

பாலியல் புகார் உட்பட பல வழக்குகளில் கைது செய்யப்பட்டுள்ள நித்யானந்தாவை எதிர் வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ராம்நகரம் மாவட்ட அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டது.

பாலியல் பலாத்காரம், கொலை மிரட்டல் மோசடி உட்பட பல வழக்குகளில் கைது செய்யப்பட்டுள்ள நித்யானந்தாவை 14 நாள்கள் நீதிமன்ற காவலில் வைக்கும்படி கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி ராம்நகரம் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து, ராம்நகரில் உள்ள சிறையில் நித்யானந்தா அடைக்கப்பட்டார். சி.ஐ.டி. பொலிஸார் சார்பில் மேலும் 15 நாள்கள் காவலை நீடிக்கக்கோரி, நேற்றுக் காலை ராம் நகரம் அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இம்மனு நீதிபதி விஜயலட்சுமி முன்னிலையில் விசாரணைக்கு வந்தது சி.ஐ.டி. பொலிஸார் சார்பில் வழக்கறிஞர் எம்.ஆர்.லோகேஷ் ஆஜராகி நீதிமன்ற காவல் நீடிப்பதற்கான காரணத்தை எடுத்து கூறி வாதம் செய்தார். இதை தொடர்ந்து நித்யானந்தா சார்பில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள டில்லியைச் சேர்ந்த மூத்த வழக்கறிஞர் நிதின் பிரதானின் ஜூனியர் வழக்கறிஞர் வேதவியாசர் ஆஜராகி. நீதிமன்ற காவல் நீடிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்துவாதிட்டார்.

இறுதியில் மே 26ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலை நீடிப்பதாகவும், வழக்கம் போல் அவருக்கு கொடுக்கப்பட்டுள்ள சலுகையை வழங்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.



அமிதாப் மற்றும் ஐஸ்வர்யாராய் ஆகியோரின் வீட்டுக்கு முன்னால் 'நாம் தமிழர் இயக்க' ஒருங்கிணைப்பில் மும்பைத் தமிழர்களால் நடத்தப்பட்ட உண்ணாவிரதப் போராட்டத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 நாடுகளைச் சேர்ந்த பயணிகள் லிபிய விமான விபத்தில் உயிரிழப்பு!

ஆம்ஸ்ரடேம், மே 14

லிபிய விமான விபத்தில் 10 நாடுகளைச் சேர்ந்த பயணிகள் உயிரிழந் துள்ளனர். அவர்கள் லிபியா, நெதர் லாந்து, ஜேர்மன், பிரிட்டன், பின்லாந்து, சிம்பாப்வே, பிலிப்பைன்ஸ், தென்னாபிரிக்கா, பிரான்ஸ், ஐரிஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


தப்பிப் பிழைத்த சிறுவன்

லிபியாவின் தலைநகரான திரிப்பொலியில் புதன்கிழமை சம்பவித்த விமான விபத்தில் உயிர்நீத்த டச் பிரஜைகளுக்காக, நெதர்லாந்தில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. நாடெங்கிலும் தேசியக் கொடிகள் அரைக் கம்பங்களில் பறக்கவிடப்பட்டன. இந்த விபத்தில் 61 டச் பயணிகள் மரணித்துள்ளனர் என டச் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

இது குறித்து பிரதமர் ஜேன் பீட்டர் பால் கெனன்டி குறிப்பிடுகையில், ''இந்த விபத்தில் பெருமளவில் டச் பயணிகளே பலியாகி யுள்ளார்கள். எம்மை அதிர்ச்சிக்குள்ளும், துயரத்திற்குள்ளும் ஆழ்த்தும் செய்தி இதுதான்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விபத்தில் மரணித்தோரில் லிபியர், தென்னாபிரிக்கர், ஜேர்மனியர், பிரிட்டிஷார், பிரான்ஸ் நாட்டினர் ஆகியோரும் அடங்குவர். இக் கோர விபத்தில் பலியான விமானிகள் உட்பட 11 சிப்பந்திகளும் லிபியாவைச் சேர்ந்தவர்களாவர்.

இந்த விபத்தில் 10 வயது டச் சிறுவன் ஒருவரே உயிர் பிழைத்துள்ளார். இரு கால்களில் ஏற்பட்டுள்ள முறிவுகளுடன் இச் சிறுவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, தீவிர சிகிச்சைக்கும், கண்காணிப்புக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவின் ஜொஹனர்ஸ்பேக் விமானநிலையத்திலிருந்து 93 பயணிகளுடனும், 11 சிப்பந்திகளுடனும் லிபியாவின் தலைநகரான திரிப்பொலிவை நோக்கி புதன்கிழமை வந்த இந்த விமானம், திரிப்பொலி விமானநிலையத்தை அண்மித்துக்கொண்டிருந்த சமயம் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது.

எயார் பஸ் ஏ 330 என்னும் இந்தப் பயணிகள் விமானம், லிபியாவின் ஆங்ரிகுயா விமான நிறுவனத்தைச் சேர்ந்தது. இவ் விமான விபத்துக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை. எனினும், விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உயிரிழந்தோரில் ஒரு பிரிட்டிஷ் பிரஜையும் உள்ளார் என்பதை பிரிட்டிஷ் வெளிவிவகார அலுவலகம் ஊர்ஜிதப்படுத்தியது. அதேவேளை, ஐரிஷ் பெண்ணொருவரும் பலியாகியுள்ளார் என ஐரிஷ் வெளிவிவகார அமைச்சர் மைக்கல் மார்ட்டின் பின்னர் ஊர்ஜிதப்படுத்தினார்.

ஜேர்மனி, பின்லாந்து, சிம்பாப்வே, பிலிப்பைன்ஸ், தென்னாபிரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் இந்த விமான விபத்தில் பலியாகியுள்ளனர் என லிபிய போக்குவரத்து அமைச்சர் மொஹம்மத் அலி ஜிதான் தெரிவித்துள்ளார். எனினும், அவர் சரியான எண்ணிக்கைகளை வெளியிடவில்லை.

ஏழு பயணிகள் லண்டன் கெட்விக் விமானநிலையத்துக்கும், 32 பேர் பிரஸல்ஸுக்கும், 42 பேர் ஜேர்மனின் டசில் டோர்ப் புக்கும், ஒருவர் பிரான்ஸின் தலைநகரான பரிஸின் சார்ள்ஸ் டி கோல் விமானநிலையத்துக்கும் இந்த விமானத்தில் செல்லத் தங்களைப் பதிவுசெய்திருந்தனர் எனத் தென்னாபிரிக்க விமானநிலைய நிறுவனப் பெண் பேச்சாளர் நிக்கி நெப், பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

உலக அரங்கில்

## பாகிஸ்தானில் குண்டுத் தாக்குதல்: இரண்டு சகோதரிகள் உயிரிழப்பு!

பெஷாவர், மே 14

பாகிஸ்தானில் வீடொன்றின் மீது வீசப்பட்ட கையெறிகுண்டு வெடித்ததில் 2 சிறுமிகள் உயிரிழந்தனர். 2 சிறுமிகள் காயமடைந்தனர். உயிரிழந்த இருவரும் சகோதரிகளாவர்.

பெஷாவரில் ராம்கஷின் முஸ்லிமாபாதிலுள்ள வீடு ஒன்றின்மீது புதன்கிழமை அடையாளம் தெரியாத நபர்கள் இந்த கையெறி குண்டை வீசிவிட்டு தப்பியோடியுள்ளனர்.

இக்குண்டுவெடித்ததில் அங்கு விளையாடிக்கொண்டிருந்த சகோதரிகள் இருவர் சம்பவ இடத்திலேயே இறந்துள்ளனர்.

அங்கு விளையாடிக்கொண்டிருந்த மேலும் இரு சிறுமிகள் பலத்த காயமடைந்துள்ளனர். இவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தை அடுத்து அங்கு விரைந்த பொலிஸார், அப்பகுதியைச் சுற்றி வளைத்து தப்பியோடியவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டனர்.

இதற்கிடையே, சிறுமிகள் கொல்லப்பட்டதற்குக் காரணமானவர்களை உடனே கைதுசெய்யக் கோரி, அச்சிறுமிகளின் சடலங்களை சாலையில் வைத்து அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை சமாதானம் செய்யும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டனர்.

## அமெரிக்க இராணுவத்துக்கு உளவு; பாகிஸ்தானில் இருவர் கொலை

பெஷாவர், மே 14

பாகிஸ்தானில் அமெரிக்க இராணுவத்துக்கு உளவுத் தகவல் அளித்த இரு பழங்குடியினரைத் தலிபான் தீவிரவாதிகள் குரூரமாகக் கொன்றுள்ளனர்.

வடக்கு வசிரிஸ்தானிலுள்ள மிரான்ஷா பகுதியில், கொல்லப்பட்ட இருவரது சடலங்களும் புதன்கிழமை கண்டெடுக்கப்பட்டன.

அந்த சடலங்களின் அருகே தீவிரவாதிகள் விட்டுச்சென்ற கடிதம் ஒன்றும் இருந்தது. அதில், அமெரிக்க இராணுவத்துக்கு உளவு சொல்பவர்களுக்கு இதே நிலைதான் ஏற்படும் என தலிபான்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

வடக்கு வசிரிஸ்தான் பழங்குடியினப் பகுதியிலுள்ள தீவிரவாதிகளின் மறைவிடங்கள், பயிற்சிக்கூடங்கள் ஆகியவற்றின் மீது அமெரிக்க ஆளில்லா விமானங்கள் செவ்வாய்க்கிழமை ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தின. இவற்றில் தீவிரவாதிகள் பலர் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், அதற்கு மறுநாளே உளவு சொன்னதற்காக இருவர் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதே காரணத்திற்காக, பழங்குடியினர் பலரை கடந்த வருடங்களில் தீவிரவாதிகள் கொன்றுள்ளனர்.

## வீட்டுக் காவலை எதிர்த்து ஆங் சான் சூகி மேன்முறையீடு



யாங்கோன், மே 14

வீட்டுக் காவலை எதிர்த்து மியான்மாரின் எதிர்க்கட்சித் தலைவி ஆங்சான் சூகி நீதிமன்றத்தில் மீண் டும் மேன்முறையீடு செய்துள்ளார்.

கடந்த 20 ஆண்டுகளில் சுமார் 14 ஆண்டுகள் வீட்டுக் காவலில் ஆங் சான் சூகி இருந்துள்ளார். இந்நிலையில், கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் அவரது வீட்டுக் காவல் மேலும் 18 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது.

ஏரியையொட்டி உள்ள அவரது வீட்டுக்கு அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவர் நீந்திச் சென்றமை கண்டுபிடிக்கப்பட்டு ஆங் சான் சூகி மீது குற்றஞ்சுமத்தப்பட்டது. இதையொட்டியே அவருக்கு வீட்டுக் காவல் 18 மாதங்களுக்கு மேலும் நீடிக்கப்பட்டது.

இதை எதிர்த்து சூகி உச்ச நீதிமன்றத்தில் 2 தடவைகள் மேன்முறையீடு செய்தார். ஆனால், 2 தடவைகளும் உச்ச நீதிமன்றம் அவரது மனுவை நிராகரித்தது.

இந்நிலையில் 3ஆவது முறையாக வீட்டுக் காவலிலிருந்து தன்னை விடுவிக்குமாறு ஆங் சான் சூகி உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளார்.

இதுகுறித்து அவரது சட்டத்தரணி நியான் வின் குறிப்பிடுகையில், ''கடந்த திங்கட்கிழமை சூகியின் மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அவரது மனுவை ஏற்க நீதிமன்றம் ஒப்புக்கொண்டுள்ளது. இன்னும் 2 வாரங்களில் மனுவின் மீதான முடிவு தெரியும்'' என்றார்.

1990ஆம் ஆண்டு மியான்மரில் நடைபெற்ற தேர்தலில் சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி பெருவாரியான வெற்றி பெற்றது. ஆனால் தேர்தலுக்கு முன்னரே அவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். தற்போதும் அவர் வீட்டுக் காவலிலேயே இருந்து வருகிறார்.

## ஈராக்கில் கார்க்குண்டுத் தாக்குதல்; ஏழுபேர் பலி!

பக்தாத், மே 14

ஈராக்கின் தலைநகரான பக்தாத்திலுள்ள உணவகமொன்றுக்கு எதிரில் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்டனர். இருபதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

பக்தாத்தின் கிழக்குப் பகுதியில் ஷியாக்கள் பெரும்பான்மையினராக வசிக்கும் சத்ர் நகரில் இந்த உணவகம் அமைந்துள்ளது. அமெரிக்க வெறுப்பாளரான மதகுரு மொஹ்ட்டா அல் - சத்ரின் கோட்டையாக சத்ர் நகர் திகழ்கிறது.

இந்தப் பிரபலமான உணவகத்தில் புதன்கிழமை பெருந்திரளான இளைஞர்கள் குழுமியிருந்தார்கள். அத்தருணம் வெளியே இக்கார்க்குண்டு பயங்கரமாக வெடித்துள்ளது என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

பக்தாத்தில் ஷியாக்கள் செறிந்து வாழும் பிறிதொரு பகுதியிலுள்ள கடையொன்றுக்குள் புதன்கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்பில் மூவர் கொல்லப்பட்டனர். 23 பேர் காயமடைந்தனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

## இரகசிய இடத்தில் கசாப் குடும்பத்தினர்

இஸ்லாமாபாத், மே 14

மும்பைத் தாக்குதல் தொடர்பாகத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட அஜ்மல் கசாப்பின் குடும்பத்தினரை ஊடகவியலாளர்கள் பேட்டி எடுக்க முடியாதவாறு, ஓர் இரகசிய இடத்தில் பாகிஸ்தான் உளவுத்துறையினர் தங்கள் பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

மும்பைத் தாக்குதல் தொடர்பாக தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட தீவிரவாதி அஜ்மல் கசாப் பாகிஸ்தானிலுள்ள பஞ்சாப் மாநிலம் பரித்கோட் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்.

கசாப்பை முன்பு கைதுசெய்ததுமே சர்வதேச பத்திரிகையாளர்கள் கசாப் குடும்பத்தினரைச் சந்தித்துப் பேட்டி எடுக்கச் சென்றனர். இதைத் தடுக்க பாகிஸ்தான் உளவுத்துறையினர் கசாப் குடும்பத்தினரை இரகசிய இடத்துக்கு அழைத்துச் சென்று தங்கள் பாதுகாப்பில் வைத்திருந்தனர்.

சில மாதங்களுக்குப் பின்னர் அவர்களை விடுவித்தனர். அவர்கள் சொந்த ஊர் திரும்பினார்கள். இப்போது கசாப்புக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டு இருப்பதையடுத்து, மீண்டும் சர்வதேச பத்திரிகையாளர்கள் கசாப் குடும்பத்தினரைச் சந்தித்துப் பேட்டி எடுக்க முயற்சித்தனர்.

இது தெரிந்ததும் பாகிஸ்தான் உளவுத்துறையினர் கசாப் குடும்பத்தினரை மீண்டும் இரகசிய இடத்துக்குக் கொண்டு சென்று தங்கள் பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

குடும்பத்தினர் அனைத்து உண்மைகளையும் வெளியே சொன்னால் மும்பைத் தாக்குதலில் பாகிஸ்தான் உளவுத்துறை சம்பந்தப்பட்டிருக்கும் விவகாரம் வெளியே வந்துவிடும் என்ற பயத்தில் அவர்களை வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் சந்திக்கவிடாமல் தடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீன மழைக்கு 86 பேர் பலி!



பீஜிங், மே 14

சீனாவில் கடந்த வாரம் பெய்த பலத்த மழைக்கு, 86 பேர் பலியாகியுள்ளனர். சீனாவின் அன்ஹுய், புஜியான், ஜியாங்சி, ஹூபி, ஹுனான், குவாங்டாங், சிச்சுவான், குய்சோ ஆகியவை உள்ளிட்ட மாகாணங்களில், புயல் காரணமாக கடந்த வாரம் பலத்த மழை பெய்தது.

இந்த மழையால், 79 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டனர். வெள்ளம், நிலச்சரிவு ஆகியவை உள்ளிட்ட காரணங்களால், 86 பேர் பலியாகியுள்ளனர். 16 பேரை காணவில்லை.

வீடுகளை இழந்த இரண்டு இலட்சத்து 75 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஏராளமான பயிர்கள் இந்த மழையில் சேதமாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடத்தப்பட்ட ஊடகவியலாளர் குறித்த விசாரணை அறிக்கை மிக விரைவில்

கொழும்பு, மே 14

ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமல் போயுள்ளமை தொடர்பான பொலிஸ் விசாரணை அறிக்கை இன்னும் சில தினங்களில் தமக்குக் கிடைக்கும் என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமல் போனமை குறித்து அரசு கடும் கவனம் செலுத்தி வருகிறது. அவரைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பாகப் பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். அந்த விசாரணை அறிக்கை இன்னும் ஒருசில தினங்களில் நமக்குக் கிடைக்கும்.

எக்னலிகொட காணாமல் போனமை குறித்து நாடாளுமன்றமும் அதிக கவனம் செலுத்திவருகிறது. அவரைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கையில் மிக அர்ப்பணிப்புடன் ஈடுபடுவோம் - என்றார். (அ-சி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகசபை தெய்வானைப்பிள்ளை



அல்லாரை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை தெய்வானைப்பிள்ளை நேற்று (13.05.2010) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயிலு - நாயகம் தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் கனகசபையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னாச்சி, சங்கரப்பிள்ளை, சேதுப்பிள்ளை, நடராசா, பார்வதிப்பிள்ளை, செல்லம்மா, தருமலிங்கம் மற்றும் பொன்னம்மாவின் பாசமிகு சகோதரியும் சந்திரகாந்தி (ஓய்வுபெற்ற ஆசிரியை), தவமணி (ஓய்வு பெற்ற கிராம அலுவலர்), சாந்தநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சறோசா, சித்திராதேவி (இத்தாலி), திருக்கேதீஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சீவரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர்), திருவம்பலம், கந்தசாமி, தபோநிதி (ரவி,சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்), பாலசுந்தரம் (இத்தாலி), வாசுகி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் குகப்பிரகாஷ் (அவுஸ்திரேலியா), பிரணவன் (லண்டன்), சஞ்சுதா, சஞ்சீவன், சர்மிலன், சரணிதா, பவஸ்ரீபன் (இத்தாலி), இந்துஷன் (இத்தாலி), கஜீபன் (இத்தாலி), சபூரா (சுவிஸ்), சுபீசன் (சுவிஸ்), சுமதி (அவுஸ்திரேலியா), கிறிஸ்ரா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பவேஷின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.05.2010) அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொற்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளாம்போக்கட்டி,
கொடிகாமம். (சி/567612)

தகவல்:
குடும்பத்தினர்

### நடராசா வில்வா

(Vice Principal, Bandarawela Tamil Central College)



இளவாலையைப் பிறப்பிடமாகவும், பண்டாரவளையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா வில்வா 11.05.2010 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - சாவித்திரி தம்பதியினரின் அருமை மகனும் காலஞ்சென்ற அருளானந்தம் - ஞானேஸ்வரி தம்பதியினரின் அருமை மருமகனும் அன்னலட்சுமியின் (Teacher, Bandarawela, Tamil Central College) அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஜீவா (Maharajah & Co., Colombo) மற்றும் கலாரூபி (St.James Est., Badulla), லதா (PUC Company, Colombo), விக்னா (Stassen Company, Colombo), உஷா (Swiss) ஆகியோரின் சகோதரனும் ஜெயலட்சுமி, மகேந்திரராஜா, தனலட்சுமி, தவராஜா (Canada), தயாநிதி (Canada), கலாநிதி (Canada) ஆகியோரின் மைத்துனரும் கதிர்காமசோதி (Colombo), செல்வலட்சுமி, மோகனகுமார், கீதாஞ்சலி (Canada), சிவலோகநாதன் (Canada), ஸ்ரீபதி, பாலமுரளிதரன் (Canada) ஆகியோரின் சகலனும் அமலன், தீபிகா, சாருஜா, தாரகா, பிரவின்னன் ஆகியோரின் சிறிய தந்தையும் அனோஜா, மதுரா, மிதுரா ஆகியோரின் ஆசை மாமனாரும் ஆதித்தன், ஆரூரன், வாருணி, ஆனந்தவருணன், திருநீறன் ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.05.2010) வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, ஈமக்கிரியைகள் கல்கிசை பொதுமயானத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'அக்கா அகம்',
இறுவில் மேற்கு, இறுவில். (98192)

தகவல்:
அ. கிருபாமூர்த்தி
(மைத்துனர்).

### முருகேசு குலசேகரம்



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முருகேசு குலசேகரம் நேற்று 13.05.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு-பொன்னம்மா தம்பதியின் அன்பு மகனும் இராஜமணியின் அன்புக் கணவரும் இராஜசேகரன், கிரிஜா (யாழ்.பல்கலைக்கழகம்), ஜீவிதா (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சபாரத்தினம் (லண்டன்), சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2010) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (98251)

தகவல்:
குடும்பத்தினர்.


## ஆசிரியர் தேவை

சிறந்த முறையில் ஆங்கிலம் கற்பிக்கக் கூடிய ஆசிரியர் தேவை.
இன்று (14.05.2010) பகல் 11-1 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

European College of
Higher Studies,
315 ½, Parameshwara Junction,
Palaly Road, Jaffna.
T.P: 0717065527 (சி/567621)

## வரவேற்பாளர் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள வியாபார நிலையத்திற்கு கணனி அறிவுடைய, ஆங்கிலம் எழுத, பேசக்கூடிய பெண் வரவேற்பாளர் தேவை. (30 வயதுக்குட்பட்டவர்).
தொடர்பு: 0773467022, 0773475220

## வீடு வளவு விற்பனைக்கு

நந்தாவில் அம்மன் கோயிலுக்கு முன்பாக 4½ பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: என்.தவம், பிரதான வீதி, சுழிபுரம்.
தொ.பே: 0773553017

## தவறிவிட்டது

த.சிறீஸ்கந்தராஜா என்பவருடைய அலுவலக முக்கிய ஆவணங்கள் அடங்கிய பொதியொன்று சாவகச்சேரிக்கும், நாவலர் றோட்டுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 0772269880
தம்பையா சிறீஸ்கந்தராஜா
உதவிக் கல்விப்பணிப்பாளர், சாவகச்சேரி.

## அறைகள் வாடகைக்கு

யாழ்ப்பாணம், பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கையில் கொழும்பு நிறுவனங்களுக்கும், ஆண்களுக்கும் சகல வசதிகளுடன் கூடிய அறைகள், வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 0779578244


## சென்னை விபத்தில் கைதடி வாசி பலி

சென்னையில் நடைபெற்ற விபத்தொன்றில் கைதடியைச் சேர்ந்த இளங் குடும்பஸ்தர் ஒருவர் மரணமானார்.

நேற்று வியாழக்கிழமை திண்டுகல்லில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கைதடி தென்கிழக்கைச் சேர்ந்த கந்தையா சத்தியசீலன் (வயது-34) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே பலியானவர் ஆவார்.

சென்னையிலிருந்து திருச்சிக்கு காரில் சென்றுகொண்டிருந்த வேளை முன்னால் சென்றுகொண்டிருந்த 'கன்ரர்' வாகனம் திடீரென நிறுத்தப்பட்டதால் பின்பக்கமாக கார் மோதியதில் இந்த அனர்த்தம் ஏற்பட்டது. (ஓ-12268)


## புலோலி சிறுவர் கிராமத்துக்கு ஆளணி தேவை

1. மேற்றன்-தாதி மேற்பார்வையாளர் (ஆண்/பெண்)
2. ஓய்வுபெற்ற தாதிகள் (ஆண்/பெண்)
3. தாதிப் பயிற்சி பூர்த்திசெய்த அல்லது அனுபவமுள்ளவர்கள் (ஆண்/பெண்)
4. சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ்/செஞ்சிலுவை சேவை பாடநெறி பூர்த்தி செய்தோர் (ஆண்/பெண்)
5. சுத்திகரிப்பாளர் (ஆண்/பெண்)
6. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்/பெண்)

இன்று (14.05.2010) வெள்ளிக்கிழமை மு.ப 11 மணிக்கும் 2 மணிக்கும் இடையில் கீழ் கண்ட விலாசத்துக்கு நேரில்வரவும்.

கொழும்பில் இருந்து வருகைதரும் எமது நிர்வாகிகளால் நேர்முகப்பரீட்சை நடத்தப்படும்.

கடவுளின் சொந்தக் குழந்தைகள்,
140, கோயில் வீதி, நல்லூர். (சி/567623)

## உடனடி வேலைவாய்ப்பு

எடிசலாட் வலையமைப்புடன் இணைந்து விநியோகஸ்தராக கடமையாற்ற விரும்பினால் எம்மை தொடர்புகொள்ளவும். எதிர்பார்க்கப்படும் இடங்கள் நெல்லியடி, சுன்னாகம், மானிப்பாய், கொடிகாமம், கோப்பாய், யாழ். நகரம், சாவகச்சேரி.

தொடர்புகளுக்கு:

PARTNER

R and R CELLULAR SHOP (PVT) LTD,
127, MPCS BUILDING,
K.K.S RD, JAFFNA.
0722 441 441 ரஸ்மி /
0722 465 478 மொஹமட் (98199)

## ஐரோப்பிய நாடுகளில் வேலைவாய்ப்பு

கனடா, UK மற்றும் இத்தாலி ஆகிய ஐரோப்பிய நாடுகளில் வேலைவாய்ப்பு (Work Permit) பெற்று குறுகிய காலத்துக்குள் பயணம் செய்ய எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.

★ மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்களே உள்ளதால் உங்கள் பிரயாண அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.

தொடர்பு: 077 2299900

(98195)


## மரண அறிவித்தல்

### பிரான்சீஸ் அன்னம்மா

தெல்லிப்பளை, வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வசிப்பிடமாகவும் தற்போது இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சீஸ் அன்னம்மா நேற்று (13.05.2010) வியாழக்கிழமை காலை காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'அமிர்தவாசா'
அகஸ்ரீன் லேன்,
இளவாலை. (98254)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி மாணிக்கவாசகர் இராஜேஸ்வரி



வடமராட்சியை (பொலிகண்டி) பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கவாசகர் இராஜேஸ்வரி நேற்று (13.05.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கவாசகரின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி பொன்னம்பலம் தம்பதியரின் மருகளும் காலஞ்சென்றவர்களான செல்லாச்சிப்பிள்ளை, கனகம்மா மற்றும் நடராஜா, பரமேஸ்வரி (பேபி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் சிற்சபேசன் (இலங்கை வங்கி லிகிதர்) மற்றும் கனகசபேசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுபாஜினி, பத்மா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் விபாகன் (லண்டன்), திருமதி சிவசங்கரன் ஆரணி (கனடா), நிமலன் (ஜேர்மனி), வாணி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, A/L 2011 மாணவி), சிவசங்கரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வாகி னியின் (கனடா) அருமைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2010) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப.10 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 7, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 5313 (98200)

தகவல்:
திருமதி சுபாஜினி சிற்சபேசன் (மருமகள்),
மற்றும் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதியாட்டத்துக்குள் நுழைந்தது இங்கிலாந்து; கடைசி வாய்ப்பையும் இழந்தது இலங்கை!

செஞ்லூசியா, மே 14

இலங்கை அணியை 7 விக்கெட்டுக்களினால் வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது இங்கிலாந்து.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் ஐ.சி.சியின் மூன்றாவது ருவென்ரி - 20 உலகக் கிண்ணப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இலங்கை - இங்கிலாந்து அணிகள் மோதின.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத் தாடியது.

ஆரம்பவீரர்களாக ஜெயவர்த்தனாவும் சனத்ஜெய சூரியாவும் களமிறங்கினர். ஜெயசூரியா சைட்பொத்தமின் பந்தில் ஒரு ஓட்டத்துடன் வெளியேற டில்சான் களமிறங் கினார்.

டில்ஷான் 9 ஓட்டங்களுடனும் ஜெயவர்த்தனா 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். சங்கக்காரா 16 ஓட்டங்களுடன் ஸ்வானின் பந்தில் பீற்றர்சனால் பிடி எடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

மத்தியூஸ் பொறுப்பாகவுதம் நிதானமகாவும் ஓட்டங்களை சேகரிக்க, கப்புக்கெதர 16 ஓட்டங்களுடன் பிரோட்டின் பந்திப் பிரஸ்னனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

பொறுப்புணர்வுடன் ஆடிய மத்தியூஸ் 45 பந்துகளில் 3 பௌண்டரிகள் ஒரு சிக்ஸருடன் 58 ஓட்டங்ளை பெற்றிருந்த போது மேலும் ஒரு ஓட்டத்தைபெற முற் பட்டு 'ரன்அவுட்' ஆனார்.

பெரேரா 7 ஓட்டங்களுடனும் ஜெயசிங்க 2 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்த போது நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களும் நிறைவுற்றன. இலங்கை அணி 6 விக்கெட்டுகளை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் பிரோட் 2 விக்கெட்டுக் களையும் பிரஸ்னன், சைட்பொத்தம், ஸ்வான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

129 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கைத் துரத்திய இங்கிலாந்து அணி 16 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய கீஸ்வெற்றர் - லம்ப் ஜோடி சிறந்த தொடக்கத்தைக் கொடுத்தது. இந்த ஜோடி இணைப்பாட்டமாக 67 ஓட்டங்களைப் பெற்றது.

கீஸ்வெற்றர் 5 பௌண்டரிகள் 2 சிக்ஸர்களுடன் 29 பந்துகளில் 39 ஓட்டங்களைப் பெற்று மலிங்கவின் பந்தில் விக்கெட்டை இழந்தார். அடுத்து களமிறங்கினார் அதிரடி வீரர் பீற்றர்சன். லம்ப் 4 பௌண்டரிகள் ஒரு சிக்ஸருடன் 33 ஓட்டங்களுடன் பெரேராவின் பந்தில் விக்கெட்டை பறிகொடுத்தார்.

அணித்தலைவர் கொலிங் வூட் 10 ஓட்டங்களுடன் பெரேராவின் பந்தில் சங்கக்காராவிடம் பிடிகொடுத்து பெவிலியன் திரும்பினார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பீற்றர்சன் ஆட்டமிலக்காமல் 42 ( 3 பௌண்டரிகள், 2 சிக்ஸர்கள்) ஓட்டங்களைப் பெற்றார். மோர்கன் ஆட்ட மிழக்காமல் 2 ஓட்டங்ளைப் பெற்றார்.

இங்கிலாந்து அணி 16 ஓவர்களில் 3 விக் கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்று இறுதிப்போட்டிக்குத் தெரிவானது. ஆட்ட நாயகனாக பிரோட் தெரிவானார்.

இன்றிரவு பாகிஸ்தான் - அவுஸ்திரேலிய அணிகள் மோதும் அரையிறுப்போட்டி நடைபெறும்.

இப்போட்டியில் வெற்றிபெறும் அணியுடன் இங்கிலாந்து அணி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இறுதிப் போட்டியில் மோதும். (6)

**போட்டி இல.12**

**2010 ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு 'உதயன்' நடத்தும் பரிசுப்போட்டி**

★அனுப்புபவர் பெயர் :..............................................

★ முகவரி :..............................................

★ தொ.பே.இல. :..............................................

**கேள்வி:**

*1. 3 ஆவது உலகக்கிண்ண ருவன்ரி 20 கிரிக்கெட் போட்டியில் சுப்பர் 8 பிரிவில் 3 போட்டிகளிலும் தோல்வி அடைந்த நாடு எது?*

..............................................

*2. 3 ஆவது உலகக்கிண்ண ருவன்ரி 20 கிரிக்கெட் போட்டியில் சுப்பர் 8 பிரிவில் நடைபெற்ற போட்டியில் இறுதிப் பந்தில் 'சிக்ஸர்' அடித்து அணியை வெற்றிக்கு அழைத்துச்சென்ற வீரர் யார்?*

..............................................

*3. 3 ஆவது உலகக்கிண்ண ருவன்ரி 20 கிரிக்கெட் போட்டியில் அரையிறுதியில் விளையாடும் அணிகள் எவை?*

..............................................

போட்டி இலக்கம் 12 இல் வெற்றி பெறும் போட்டியாளருக்கு 212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்திருக்கும் **றோயல் றெஸ்ரோரன்ட்** சார்பாக ரூபா 2,000/- பெறுமதியான பரிசுப்பொதி வழங்கப்படும்.

★ பூர்த்தி செய்யப்பட்ட கூப்பனை 'உதயன் பணிமனை', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டி இலக்கத்துடன் T-20 உலகக் கிண்ணப் போட்டி எனக்குறிப்பிடப்பட வேண்டும்.


*உங்களுக்காக ஒரு சில நிமிடம் !*

வேலைதேடும் பட்டதாரிகளே. இளைஞர்களே. யுவதிகளே கல்விசார் தகைமைகள் இருந்தும் ஆளுமை விருத்தியின்மை. நேர்முகத் தேர்வினை எப்படி எதிர்கொள்வது என்று தெரியாத காரணங்களினால் ஏராளமான வேலை வாய்ப்புக்கள் உங்களை விட்டுச்செல்கின்றது. வங்கிகள். தனியார் நிறுவனங்கள் தகுதியான பணியாட்களை எம்மிடமிருந்து எதிர்பார்க்கின்றார்கள். எனவே. இன்றே எமது பயிற்சிப்பட்டறையில் இணைந்து எதிர்காலத் தொழில் வாய்ப்பினை உறுதி செய்து கொள்ளுங்கள். பயிற்சிப் பட்டறையில் இணையும் அனைத்து மாணவர்களும் எமது தொழில் வங்கியில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

**British College of Higher Studies**

Tel: 021-2224550, Mobile: 0777222422, 0714299935, 0773501499 web: www.bchs.lk Email:info@bchs.lk

**யாழ். மாநகரிலே...**

**British College of Higher Studies ஏற்பாட்டில்**

வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தர உதவும் பயிற்சிப்பட்டறைகள் (Personality Development Work shops)

உள்ளடக்கம்: நேர்முகத் தேர்வினை எவ்வாறு எதிர்கொள்வது, உரையாடுவது, முகாமைத்துவம், மனிதவளப் பயன்பாடுகள், அலுவலகப் பிரயோகத்திற்கான கணினிப் பயிற்சிகள், ஆங்கில உரையாடற் பயிற்சிகள் என்பன அடங்கலான பயிற்சிப் பட்டறைகள் : 15 மணித்தியாலங்கள்

சனி, ஞாயிறு மற்றும் வாரநாட்களிலும் நடாத்தப்படும

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் இருந்து பங்குபெறும் பட்டதாரிகளுக்குச் சிறந்த கட்டணக் கழிவுடன் குழுக்களாகவும் பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்படும்.

பயிற்சிப் பட்டறையில் பயிலும் அனைவரும் எமது தொழில் வங்கியிற் பதியப்பட்டு அதனூடாக நல்ல நிறுவனங்களில் (Bank & Private firms) வேலை வாய்ப்பைப் பெற ஆவன செய்து தரப்படும்.

**NALIN இன் காட்சியறையில் INTEL CORE i3 DESKTOP & LAPTOP அறிமுகம்**

2.7 DUAL CORE/ ASUS G31 MB/ 1GB KINGSTON (800)/ 320 SAMSUNG HDD/ DVD WRITER SAMSUNG/
LCD 17' DELL GLOSY/ CASING POWERLOQIC/ POWERLOQIC KEYBORD MOUSE (BRANDED)/
LUMINOUS UPS (3 OUT)BRANDED FREE (COMPUTER TABLE (BLACK)

**52,000 மட்டுமே**

PRO,LCD,HDD,RAM,DVD WRITER,CASING,WEB CAM, HEAD PHONE,HSDPA,ROUTER,UPS,PRINTER,SCANNER.

1.6 ATOM/ 2.93 CORE DUO கணனிகள் விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளது

மூன்று வருட உத்தர வாதத்துடன் எங்கள் கணனிகள் உங்களுக்காக

NALIN Information Technologies Pvt Ltd

195/4 Parameswarra Junction TP / Fax : 0212221166, 0777667974


## மூன்று கட்டங்களாக அரசமைப்பு சீர்திருத்தம் என்கின்றார் வீரவன்ஸ

கொழும்பு, மே 14

அரசமைப்பு சீர்த்திருத்தமானது மூன்று படிமுறைகளின் கீழ் முன்னெடுக்கப்படும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நிர்மாணம், பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுச் சேவைகள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்சித் தலைவர்களுடனான நீண்ட நேர சந்திப்பை அடுத்தே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த அமைச்சர், அரசமைப்பு சீர்த்திருத்தத்தின் முதற்கட்ட நடவடிக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறும் என்று கூறினார்.

அத்துடன், அரசமைப்பின் இரண்டாம் கட்ட சீர்த்திருத்தத்தின்போது, தேர்தல் முறைமையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் என்று தெரிவித்த அவர், மூன்றாவதாகவே செனட் குழு அமைக்கப்படும் என்றும் கூறினார்.

இந்த சீர்த்திருத்தங்கள் அனைத்தும் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் செய்து முடிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

## பிரதம நீதியரசரைச் சந்தித்துப்பேச வடக்கு சட்டத்தரணிகள் தீர்மானம்

கொழும்பு, மே 14

வட பகுதி சட்டத்தரணிகள் பிரதம நீதியரசர் அசோக டி சில்வாவை சந்தித்துப் பேச்சு நடத்தத் தீர்மானித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். சாவகச்சேரி நீதிவானுக்கு விடுக்கப்பட்ட மிரட்டலைத் தொடர்ந்து கடந்த இரண்டு வாரங்களாக வடக்கு சட்டத்தரணிகள் பணிப் புறக்கணிப்புப் போராட்டமொன்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் சாவகச்சேரியைச் சேர்ந்த சட்டத்தரணிகள் இன்றைய தினம் பிரதம நீதியரசரைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக் கூடாது எனவும் உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் பிரதம் நீதியரசரிடம் உத்தரவாதம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்தச் சந்திப்பு நிகழவுள்ளது.

பிரதம நீதியரசருடனான சந்திப்பைத் தொடர்ந்து போராட்டத்தை நீடிப்பதா அல்லது கைவிடுவதா என்பது குறித்தும் தீர்மானிக்கப்படும் என யாழ்ப்பாண மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவி சாந்தா அபிமன்னசிங்கம் தெரிவித்துள்ளார். (சி)

## வெசாக் தேசிய நிகழ்வுகள் இம்முறை பிரதமர் தலைமையில்

கொழும்பு, மே 14

வெசாக் பண்டிகையின் தேசிய நிகழ்வுகள் இம்முறை பிரதமர் டி.எம்.ஜயரட்ணவின் தலைமையில் மஹியங்கனையில் நடைபெறவுள்ளன.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு நான்கு விசேட ஞாபகார்த்த முத்திரைகளும் வெளியிடப்படவுள்ளன என்று பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இம்முறை வெசாக் பண்டிகைக்கு பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன. வெசாக் தின தேசிய வைபவம் மஹியங்கனை ரஜமஹாவிகாரையில் எதிர்வரும் 24 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது. பிரதமர் மற்றும் உடுகம புத்தரக்கித மஹாநாயக்க தேரர் ஆகியோர் இதற்குத் தலைமை வகிக்கவுள்ளனர்.

கொழும்பு பௌத்தாலோக மாவத்தையில் வெசாக் அலங்காரக் கூடுகளுக்கான போட்டிகள் இடம்பெறவுள்ளதுடன் நாடளாவிய ரீதியில் அன்னதானமும், பக்தி கீத நிகழ்வுகளும் பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய கலாசார நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்றும் பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது..

வழமையாக வெசாக் பண்டிகையின் தேசிய நிகழ்வுகள் ஜனாதிபதியின் தலைமையிலேயே நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஏசியன் ரிபியூன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டன் செலுத்தும்படியும் - நீதிமன்றின் இத்தீர்ப்பை மேற்படி 'ஏசியன் ரிபியூன்' இணையத்தளத்திலும் இலங்கையில் ஒரு பத்திரிகையின் முன்பக்கத்திலும் துலாம்பரமாக பரசுரிக்கும்படியும் - இந்த அவதூறு ஏற்படுத்தும் கட்டுரைகள் மற்றும் செய்திகளால் சேதுரூபனுக்கு ஏற்பட்ட மானநஷ்டத்திற்கான இழப்பீடு தொடர்பில் இனி நீதிமன்றம் கணக்கிட்டு முடிவு செய்யும் தொகையை மானநஷ்டத் தொகையாக வழக்காளிக்கு செலுத்தம்படியும் - நீதிமன்றம் தனது 23 பக்கத் தீர்ப்பில் உத்தரவு வழங்கி இருக்கின்றது.

சுவீடன் தலைநகரம் ஸ்ரொக்கொம்மில் உள்ள நொட்டாலி மாவட்ட நீதிமன்றில் மூன்று நீதிபதிகளைக் கொண்ட ஆயம் இந்தத் தீர்ப்பை கடந்த புதனன்று பிற்பகல் வழங்கியது. தம்மைப் புலி உறுப்பினர் என்றும், தாம் புலிகள் இயக்கத்தின் உளவுப்பிரிவுக்காகப் பணிபுரிபவர் என்றும் , தெரிவித்து உண்மைக்குப் புறம்பான அவதூறுத் தகவல்களை கே.ரி. இராஜசிங்கம் தமது 'ஏசியன் ரிபியூன்' இணையத்தளம் ஊடாகத் தொடர்ந்து வெளியிட்டு வந்தார் என்றும் - இக்கட்டுரைகள் மற்றும் தகவல்களை இலங்கையில் சில அரச சார்பு ஊடகங்களும் மேற்குலகில் இலங்கைத் தரப்பிற்குச் சார்பாகச் செயற்படும் சில ஊடகங்களும் மறுபிரசுரம் செய்து பிரசாரப்படுத்தி வந்தன என்றும் - இதனால் தமது உயிருக்கு பேராபத்தும், தமது பெயருக்கு அபகீர்த்தியும் ஏற்பட்டு வந்தள்ளன என்றும் , சேதுரூபன் தனது வழக்கில் சுட்டிக்காட்டி இருந்தார்.

கே.ரி.இராஜசிங்கமும் அவரது 'ஏசியன் ரிபியூன்' இணையத்தளத்தை நடத்துவதாக கூறப்படும் ஆசிய கற்கைகளுக்கான உலக நிறுவனமும் சுவீடனை மைய்மாகக் கொண்டு இயங்குவதால் அங்கு இந்த வழக்குத் தொடரப்பட்டது.

வழக்காளியான சேதுரூபன் சார்பில் இலங்கையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பனர்களின் விசேட பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றி பின் தற்போது சூடானில் ஐ.நா அதிகாரியாக சேவையாற்றிவரும் அதிகாரி ஒருவர் சுவீடன் நீதிமன்றில் ஆஜராகி சாட்சியமளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. வழக்காளியான சேதுரூபனை பற்றியவை எனக்கூறப்படும் செய்திகளை இலங்கையின் தேசிய உளவுப் பரிவினர் தம்மிடம் அவ்வப்போது வழங்கி அவற்றை பிரசுரிக்கும்படி கேட்டுக்கொண்டமையால் தாம் அவற்றை வெளியிட்டு வந்தார் என்பதை கே.ரி.இராஜசிங்கம் நீதிமன்ற விசாரணையில் ஒப்புக்கொண்டிருந்தார் என்பதும் குறிப்படத்தக்கது.

இந்த வழக்கின் தீர்ப்பு தொடர்பில் மேன்முறையீடு செய்வதற்கு கே.ரி.இராஜசிங்கத்திற்கு மூன்று வாரகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் இத்தீர்ப்பு நடைமுறைக்கு வரும். தீர்ப்பு நடைமுறைக்கு வந்து இரண்டு வார காலத்திற்குள் இத்தீர்ப்பின் முழு ஆங்கில மொழியாக்கத்தை'ஏசியன் ரிபியூன்' இணையத்தளத்தின் முன்பக்க இணைப்பாக பிரசுரிக்க வேண்டும் என்றும் - மூன்று வாரத்திற்குள் இலங்கையில் ஒரு பத்திரிகையில் முற்பக்கத்தில் தீர்ப்பின் முக்கிய பகுதிகளை பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் தனது தீர்ப்பில் பணித்துள்ளது.

வழக்காளியான சேதுரூபனுக்கு இழப்பாகத் தற்போது வழங்க உத்தரவிடப் பட்டுள்ள ஒரு லட்சத்து 25 ஆயிரம் சுவீடன் குரோணருக்கு மேலதிகமாக இந்த அவதூறு மற்றும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் செய்திகளால் அவருக்கு ஏற்பட்ட மானநஷ்டத்துக்காக வழங்கப்படவேண்டிய தொகையையும் நீதிமன்றம் மேற்படி தீர்ப்பு நடைமுறைக்கு வரும் போது தீர்மானித்து அறிவிக்கும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

A/L 2010 பரீட்சையை நோக்கிய முக்கிய தொடர் கருத்தரங்கும் பரீட்சையும்.
கணக்கீடு: திரு.பாலகஜன் (H.N. Dip. in Acc.)
ஆரம்பம் -நாளை
15.05.2010 சனி மதியம் ஒருமணி (Sat & Sun 1 - 3 p.m.)
★ வெளி மாணவர்கள் பங்குபற்றலாம்.
★ கருத்தரங்குக் கையேடுகள் வழங்கப்படும்.
★ இக்கருத்தரங்கமாவது நீங்கள் விரும்பிய நேரங்களிலும் உங்களுக்காக நடாத்தப்படும்.
இடம்: BEACON மாஸ்டர்ஸ்
(வெலிங்டன் சந்தி அருகில்)

# ஒருதொகுதி மருந்துப்பொருள்கள் இந்தியாவிலிருந்து கொள்வனவு

கொழும்பு, மே 14

இந்தியாவிலிருந்து 45 லட்சம் பெறுமதியான மருந்துப்பொருள்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை விமானப் படையினருக்குச் சொந்தமான 130 ரக விமானத்தினூடாக மும்பை சர்வதேச விமான நிலையத்திலிருந்து இரத்மலானைக்கு நேற்று மருந்துப்பொருள்கள் கொண்டுவரப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 18 ஆயிரம் கிலோகிராம் எடையுடைய மருந்துப்பொருள்கள் முதல்கட்டமாக கொண்டுவரப்பட்டுள்ளன. மேலும் 3 தடவைகள் இந்தியாவிலிருந்து மருந்துகள் கொண்டுவரப்படவுள்ளன என இலங்கை விமானப் படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் கடந்த சில வாரங்களாக அத்தியாவசிய மருந்துப்பொருள்களில் பாரியளவு தட்டுப்பாடு நிலவியது. இதனைக் கருத்திற் கொண்டு அவசரமாக இந்தியாவிலிருந்து மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

## நகரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இந்நடவடிக்கையின்போது ''அந்த ஜோடி'' ஓரிடத்தில் தங்கி இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் பிரஸ்தாப பெண்ணும் இளைஞனும் யாழ். பொலிஸ் நிலையத்தில் சரண் அடைந்தனர்.

இந்தச் சம்பவம் கடத்தல் சம்பவம் இல்லை என்றும், காதல் தொடர்பானது என்றும் தெரியவந்ததாகப் படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-1)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லட்சம் மக்கள் எதுவித உதவிகளும் இன்றி பரிதவிக்கின்றனர். இத்தகைய துய ரமான நிலையில் அரசு யுத்த வெற்றியின் ஓராண்டு நிறைவைக் கொண்டாடிவருகின்றது.

இத்தகைய சூழ்நிலையில் காணாமற் போனவர்கள் தொடர்பாகவும், சிறையில் வாடும் அரசியல் கைதிகள் தொடர்பாகவும் அரசின் கவனத்தை ஈர்க்க எதிர் வரும் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வவுனியா மாநகரில் பஸ்தரிப்பு நிலையத்திற்கு முன்பாக மறியல் போராட்டம் ஒன்றை நடத்தத் திர்மானித்துள்ளோம்.

எனவே காணாமற் போனவர்களின் உறவினர்களும், சிறைக் கைதிகளின் உறவினர்களும் இப் போராட்டத்தில் கலந்து கொண்டு தமது உறவுகளை மீட்டெடுக்க எம்மோடு கைகோத்து செயற்படும்படி வேண்டுகிறோம் - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-சி)

## தலைமைப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஈடுபடவேண்டியுள்ளது. அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

கட்சியில் இருந்து விலகிச் சென்றவர்கள் மீண்டும் கட்சிக்குள் வருவதாக இருந்தால் அவர்கள் பதவிகளை எதிர்பார்க்கக் கூடாது. கட்சியில் உள்ளவர்களுக்குப் பதவிகளை வழங்குவதன் மூலம் தற்போதைய பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

கட்சியில் பதவிகளை எதிர்பார்த்து வருவதாக இருந்தால் அவர்கள் வரத் தேவையில்லை. கட்சியை அடிமட்டத்தில் இருந்து கட்டி எழுப்பக்கூடிய வகையில் கட்சி மறுசீரமைக்கப்பட வேண்டும்.

கட்சியின் தலைமைத்துவப் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்க விலகினாலும், அந்த வெற்றிடத்தை நிரப்பி கட்சியை முன்கொண்டு செல்லக்கூடிய திறமையானவர்கள் எமது கட்சியில் உள்ளனர். அதற்காக ரணில் விக்கிரமசிங்க விலக வேண்டும் என்று நாம் சொல்லவில்லை.

ரணில் விக்கிரமசிங்க இன்னும் ஒரு வருடத்துக்கோ, அல்லது இரண்டு வருடங்களுக்கோ கட்சியின் தலைவராக இருக்கலாம். ஆனால், அடுத்த தலைவர் உருவாவதற்கு வழியமைத்து அவர் செயற்பட வேண்டும்.

கட்சியின் தலைவரை ஜனநாயக ரீதியில் நியமிப்பதற்கு ஏதுவாக கட்சியின் யாப்பு திருத்தப்பட வேண்டும். கட்சித் தலைவரின் தெரிவால் மாத்திரம் தற்போதைய பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. கட்சி முழுமையாக மறுசீரமைக்கப்பட வேண்டும்.

ஜூலை மாத இறுதிக்குள் கட்சியின் மறுசீரமைப்புப் பணிகள் அனைத்தும் முடிந்துவிடும் என்று தலைவர் தெரிவித்துள்ளார். அந்த மாதம் கட்சியின் சம்மேளனக்கூட்டம் நடத்தப்பட்டு மறுசீரமைப்பு பற்றி அறிவிக்கப்படும்.

கட்சியின் மறுசீரமைப்போடு சேர்த்து கட்சியின் யாப்பும் திருத்தி அமைக்கப்பட வேண்டும். ஏழைகளின் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை மாற்றியமைக்கப்பட வேண்டும் - என்றார். (ஒ-சி)

கார் விற்பனைக்கு
Nissan Blue Bird 18 xxxx 2000cc கொண்ட கறுப்புக் கார், Brand 1991C new model உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
0772487487

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார விநியோகப் பிரச்சினை தீர்க்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இரண்டு கட்டங்களாக முறையே 1.17 மில்லியன் ரூபா, 1.79 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் இத்திட்டம் அடுத்த வருடம் மே மாதம் பூர்த்திசெய்யப்படும் என்றும் இந்தப் பணிகள் முடிவடைந்ததும் தேசிய இணைப்புடன் வடக்கின் மின் விநியோகம் இணைக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஒ-சி-1)

## வானில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரசேகரம் தர்சினி(வயது 28) என்பவருக்கே இந்த நிலை ஏற்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக அப்பெண் தெரிவித்தவை வருமாறு:-

நேற்று முற்பகல் 11 மணியளவில் எனது 3 வயதுக் குழந்தையுடன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியை நோக்கி நடந்து சென்றேன். அவ்வேளை ஆஸ்பத்திரிக்கு சமீபமாக நின்ற வானில் இருந்த நால்வர் எனது வாய்க்குள் துணியை அடைத்து விட்டு என்னையும் குழந்தையும் வானில் ஏற்றிக்கொண்டு கிளிநொச்சிப் பக்கம் சென்றனர். வாய்க்குள் துணியை அடைத்ததால் என்னால் சத்தம் போடமுடியவில்லை.

பரந்தன் சந்தியில் வான் நிறுத்தப்பட்டு அவர்கள் தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்தபோது, குழந்தையை வான் யன்னல் ஊடாக சாதுரியமாக வெளியே போட்டு விட்டேன். வான் புறப்பட தயாரான போது கதவுவழியே வெளியே நானும் பாய்ந்து விட்டேன். என்னை ஏற்றிச்சென்றவர்களில் மூவர் சிங்களத்திலும் ஒருவர் மட்டுமே தமிழிலும் கதைத்தனர்.

அங்கு ஆள்கள் கூடிவிட்டதால் அப்படியே என்னையும் பிள்ளையையும் விட்டு விட்டு வான் ஓடிவிட்டது.

ஒருவாறு எழுந்து பஸ்ஸில் குழந்தையுடன் சாவகச்சேரி வந்தடைந்தேன் - என்றார்.

குழந்தைக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை. இரு கால்களிலும் உரசல் காயங்களுக்கு உள்ளான இந்தப் பெண் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஒ-1-207)

ஏனைய நிறுவனங்களில் இருந்து விலகி வருகின்ற மாணவர்களுக்கான
2011 A/L 2012
புதிய பிரிவுகள் ஆரம்பம்
15-05-2010 சனி காலை 8.00 மணி
வர்த்தகப்பிரிவு
கணக்கீடு :- A.P. Pagieerathan
பொருளியல் :- N.B.கஜிதரன்
வணிகக்கல்வி :- S.யசோ
கலைப்பிரிவு
தமிழ் :- A.K. கீர்த்திராஜன்
அளவையியல் :- P. கமல்
பொருளியல் :- N.B. கஜிதரன்
புவியியல் :- S. செல்வா
அரசியல் :-A.K.றொபின்சன்
இந்துநாகரிகம் :- S. ஸ்ரீஸ்
வரலாறு :- R.R. ஆனந்தன், S. சத்தி
நாடக அரங்கியலும் :- S. சிவரூபன்
இலகு கணிதம் :- S.சயந்தன்
கிறிஸ்தவம், கிறிஸ்தவ நாகரிகம் :- S. யூட்
புள்ளி விவரவியல் :- T. தவசேகர்
NEC
Clock Tower Road, Jaffna.
(பெருமாள் கோயிலுக்கு அருகில்)

## சூடாநாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில் யாழ். பிராந்திய படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு விளக் கம் அளிக்கவிருக்கிறார்.

சட்டம் - ஒழுங்கை நிலை நாட்ட கோத்தபாய கொடுத்துள்ள அறிவுறுத்தல்கள் தொடர்பில் விளக்கம் அளிக்கப்பட இருப்பதாகச் சகல சட்டத்தரணிகளுக்கும் மேல் நீதி மன்றம் அறிவித்துள்ளது.

இதேவேளை -

மேல்நீதிமன்ற சட்டத்தரணிகள் மேற்கொண்டுவந்த பகிஷ்கரிப்பைக் கைவிட்டு நேற்று வழக்குகளில் ஆஜரானார்கள். எனினும் ஏனைய நீதிமன்றங்களில் சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பை நேற்றும் தொடர்ந்தனர். (ஒ-1)

## தேசிய நல்லிணா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விவரங்களையும் தகவல்களையும் அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

* புரிந்துணர்வு ஒப்பந்தம் முறிந்து போனமைக்கான, அன்றிலிருந்து 2009 மே 19ஆம் திகதி வரையான நிகழ்வுகளுக்கான காலப் பகுதியில் இடம்பெற்ற காரணிகளையும் சூழ்நிலைகளையும் கண்டறிதல்.

* அவை தொடர்பாக நேரடியாகவோ மறைமுகமாகவோ நபர் எவருமோ அல்லது எந்தக் குழுவுமோ அல்லது அமைச்சரவை எதுவுமோ பொறுப்பாளிகளாக இருந்தனரா? அல்லது இருந்தனவா?

* இவற்றிலிருந்து இனிமேலும் இத்தகையதான எவையும் மீள நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன?

குறிப்பிட்ட நிகழ்வுகளால் பாதிக்கப்பட்ட எவருக்கும் அல்லது அவர்களில் தங்கியிருப்போருக்கு அல்லது உரித்துடையோருக்கு நிவாரணம் வழங்குவதற்கு மேற்கொள்ள வேண்டிய படிமுறைகள் - என்பன குறித்து நல்லிணக்க ஆணைக் குழு விசாரித்து சிபார்சு செய்ய வேண்டும்.

அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்தவை வருமாறு:-

படித்த படிப்பினைகளை கொண்டு பிரச்சினைகளின் அடிப்படையை கண்டறிவதற்காக ஏழுபேர் கொண்ட தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவை நியமிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவை நியமிப்பதற்கான அமைச்சரவைப்பத்திரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் அங்கம் வகிப்போரின் பெயர்கள் அடங்கிய மேலதிக விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

2002 பெப்ரவரி 22 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துக்கொள்ளப் பட்டது முதல் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி வரையிலான விடயங்களை ஜனாதிபதி ஆணைக்குழு விரிவாக ஆராயும்.

பிரச்சினையின் அடிப்படையைக் கண்ட றிந்து தீர்வு காணும் பொருட்டே இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. அவ்வாறானதொரு தீர்வினை எட்டாவிடில் சிங்கள,தமிழ், முஸ்லிம் மக்களிடையே மீண்டும் பிரச்சினையை தோற்றுவித்து விடும். அது நாட்டில் வாழ்கின்ற ஒன்றரைக் கோடி மக்களுக்கும் பெரும் பிரச்சி னையாகவே அமைந்து விடும் - என்றார். (அ)

ஆங்கில மொழி பட்டதாரி ஆசிரியர்களுக்கான விண்ணப்பப்படிவம்
1.Science Degree
2.Commerce Degree
3.Arts Degree
பூபாலசிங்கம் புத்தகசாலை
வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம். | பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

வெளிவந்துவிற்பனையாகின்றது
★ இலங்கை மத்தியவங்கி ஆண்டறிக்கை (2009)
★ பொருளியல் நோக்கு (தமிழ், ஆங்கிலம்)
பூபாலசிங்கம் புத்தகசாலை
வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம். | பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org